# சைவ சிகாமணிகள் இருவர்

நம்பியாண்டார் நம்

சேக்கிழார்


சென்னைப் பல்கலைக் கழகத்துத் தமிழகராதிக்குழூஉப் புலவரும்
கல்வெட்டு ஆராய்ச்சி வல்லாரும் வானநூலறிஞரும்
இலக்கண விளக்க ஆசிரியர் பரம்பரையினருமான
**திருவாரூர். ச. சோமசுந்தர தேசிகர்**
எழுதியது



பதிப்பாளர் :
**வித்துவான் சோம. இராமலிங்க தேசிகர்**


*All Rights Reserved*] 1944 [விலை ரூ. 1-4-0

## FOREWORD

The author of this book is gifted with the rare combination of absolute devotion to Siva and a severely critical method of historical research. The chapters dealing with the historical background of the lives of Nambiyandar Nambi, the Vyasa of the Tamil Saiva Scriptures, called the *Tevaram* which are the outflow from the hearts of Appar, Sambandar and Sundarar, filled with love to Siva, and Sekkilar, the author of the Lives of the Sixty three Saiva Saints contain references to important points in inscriptions not noted by previous workers. In these chapters several knotty problems of early Sola history have been satisfactorily solved by the author. This skill in historical research has not drained from the writer's heart his devotion to Isvara; the chapters recounting the legendary lives of his heroes are calculated to stimulate in the minds of youthful readers the religious spirit which modern education is accused of extinguishing. The style of the book is simple, yet dignified, as he is a pandit who has mastered early and mediaeval Tamil literature; his style deserves imitation by the young. I have very great pleasure in commending this book to the earnest attention of readers of modern Tamil prose literature.

'THE COTTAGE'
LIMBDI GARDENS
8th January 1930.

P. T. SRINIVASA IYENGAR.

# சைவ சிகாமணிகள் இருவர்

## 1. நம்பியாண்டார் நம்பி

### 1. இளமைப் பருவம்

இந்தியாவின் தென்திசையாகிய இந்தத் தமிழ்நாட்டிலே சிவபெருமானே தெய்வமென்று வழிபடும் சமயத்தினைச் சைவமென்றும், திருமாலையும் அவர் திவ்வியாவதாரங்களையும் வழிபடும் சமயத்தினை வைணவ மென்றுஞ் ஜனங்கள் சொல்லுவர். இவை இரண்டும் சேர்ந்தே இந்த நாட்டில் இந்து மத மென்ற பேரால் வழங்கி வருகின்றன. கடவுள் திருவுருவங்களை வைத்துக் கொண்டாடுமிடம் கோயில் எனப்படும். கோயில் என்னுஞ் சொல் அரசனுடைய மனை, தலைவனுடைய வீடு என்னும் பொருளில் வழங்கி வந்தது. கடவுள் எங்கும் நிறைந்தவராயும் தலைவராயு மிருப்பதனால் கோயில் என்பது கடவுள் திருவுருவங்கள் எழுந்தருளி யிருக்கும் இடத்திற்குக் காரணவிடுகுறியாக இப்பொழுது வழங்கி வருகின்றது. பொதுவாகக் கோயிலென்பது எல்லா ஊர்களிலுமுள்ள ஆலயங்களுக்குப் பொதுப்பெயராக வழங்கி வந்தாலும், சிறப்பாக, 'கூத்துகந்த பெருமான்' என்றும், 'நடராஜா' என்றும் கொண்டாடப்படும் மூர்த்தமாக விளங்குஞ் சிவபெருமானுக்கு உகந்த இடமாகிய சிதம்பரத்திற்குச் சிறந்த பெயர் என்று நூல்கள் கூறும். இந்த க்ஷேத்திரம் சைவர்கட்கு முக்கிய தலமாதல் போலவே வைஷ்ணவர்கட்

கும் முக்கிய தலமாகும். ஆழ்வாராதியரும் இதனைத் தில்லைத் 'திருச்சித்ரகூடம்' என்று பெரிதும் பாராட்டிப் பாடியுள்ளார். இக்காரணங்களால் நமக்கு இத்திருப்பதி வெகு முக்கியமானது.

பிற்காலத்திலே சைவசமயத்தை வளர்த்துச் சமயகுரவர், சமயாசாரியர் என்று போற்றப்படுபவர் அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்னும் நால்வரேயாவர். இவர்களுள் மாணிக்கவாசகருக்குத் திருவாதவூரர் என்பது பிள்ளைத் திருநாமம். அவர் இந்தச் சிதம்பரத்திலே முத்தி பெற்றனர் என்பது ஒன்று; சிவபெருமான் தாண்டவமாடுங் கோலத்தோடு இங்குக் கோயில் கொண்டிருப்பது ஒன்று. இவற்றை யொத்த பல பெருமைகள் இந்த க்ஷேத்திரத்திற்கு இருப்பதனாலே இத்திருப்பதியை யறியாத சைவ நன்மக்களில்லை. உண்மையில் இவ்வூருக்குச் சென்று நடராஜப் பெருமானைத் தரிசியாத சைவனும் இருத்தலரிது.

இத்துணைப் பெருமை வாய்ந்த இத்திருப்பதியைச் சுற்றி அநேக சிவதலங்கள் அமைந்துள்ளன. பெரியாரும், மன்னரும் வதியுமிடத்து அவர்களைச் சுற்றிப் பல குடிகள் வாழ்ந்திருத்தல் போல, இக்கோயிலைச் சுற்றியும் பல சிவாலயங்கள் உண்டாயினவெனக் கூறுதல் சாலப் பொருந்தும். பொன்னம்பலத்துக்குக் கிழக்கில் அதனையடுத்துத் திருவேட்களம் என்றொரு திருப்பதி[1] யுண்டு. அதன் கீழ்பால் திருக்கழிப்பாலை இருக்கின்றது. மேல்புறமாகச் சென்றால் திருநாரையூர் திரு ஓமாம்புலியூர், திருக்கானாட்டு முள்ளூர், திருவரத்துறை, திரு வெஞ்சமாக்கூடல், கூடலையாற்றூர். மணிமுத்தநதியினாற் சூழப்பட்ட திருமுதுகுன்றம் முதலாய பல திருப்பதிகள் இருக்கின்றன.

[1] இதுவே இதுபொழுது அண்ணாமலைப் பல்கலைக்கழகம் இருக்குமிடம்.

இச்சிதம்பரத்தினின்றும் அத்தலங்கட்குச்செல்லப் பல சாலைகளுண்டு.[1] அவற்றுள் நல்லசாலை கொள்ளிடம் என்ற ஆற்றின் வடகரை வழியாகச் செல்கின்றது. இந்த ஆறு சிதம்பரத்திற்குத் தெற்கில் ஓடுகிறது. சோணாடு என்னும் பெருமை வாய்ந்த நாட்டினைச் செழிக்கச் செய்யும் காவிரிப் பாவையின் முதன் மகவாகிய இக்கொள்ளிடம் இவ்வூருக்கு மேற்கே நூற்றிருபது மைல் தூரத்தில் பிரிகின்றது. இந்த ஆற்றின் அகலம் அரை மைலுக்கு மேலுமிருக்கும். இந்த ஆறு இல்லாவிட்டால், இந்நாட்டில் வழங்கும் 'சோழவளநாடு சோறுடைத்து' என்றபழமொழி மறைந்து, 'புனல்நாடு' என்பது உறுதி பெற்றிருக்கும். ஆனி ஆடி மாதங்களில் மைசூர் முதலிய மலை நாடுகளில் மேலைப் பருவமழை பெய்யும்போது அந்தவெள்ளம் தஞ்சாவூர் ஜில்லாவில்வந்து புகுந்து பாய்ந்து கடலிற்சேர்கிறது. அந்நீர் சோழநாட்டின் வேளாண்மைக்கு வேண்டிய அளவிற்கு அதிகமாக இருப்பதால் அது இக்கொள்ளிடத்தின் வழியாகப் பிரிந்து சென்று கடலிற் சேருகின்றது. இந்தப் பெரிய ஆற்றின்நீர் பரவிச் செல்லாதிருப்பதற்காக ஆற்றின் இருகரைகளையும் பெரியனவாகப் போட்டிருக்கின்றனர். அவை பெரியனவாக இருத்தலால் வண்டிகளும் மற்றும் பலவிதமான போக்குவரத்துச் சாதனங்களுஞ் செல்லத் தகுதியுடையனவாக ஏற்பட்டிருக்கின்றன. இந்தச் சாலையின் இருபக்கங்களிலும் தென்னை முதலான பலவகை மரங்கள் வைத்துப் பயிராக்கப்பட்டுள்ளன. சாலையில் செல்லுவோருக்கு வெயிலின் வெப்பம் தோன்றாதபடி செழிப்பாக அச்சாலைகளின் இரண்டு பக்கங்களிலுமுள்ள மரங்கள் வளர்ந்துள்ளன. அவை அடர்த்தியாய் ஒன்றோடொன்று பின்னிக்கொண்டு இருண்டு வழிச்செல்வோருக்கு அச்சத்தை யுண்டு பண்ணிக்கொண்டிருக்கும்.

---

[1] சிதம்பரத்தினின்று குமராட்சி வழியாகத் திருநாரையூர் செல்லலாம். அஃது இப்பொழுது உண்டான மார்க்கம்.

இந்தப் பாதைவழியே மேற்கு முகமாய்ச் சற்றேறக் குறையப் பத்து மைல்தூரம் செல்வோமானால் உடையூரென்ற ஊரை யடைவோம். அதற்குச் சமீபத்தில் திருநாரையூர் என்னும் ஊர் இருக்கின்றது. அவ்வூர் பெரிய ஊருமன்று, மிகச்சிறிய ஊருமன்று. அதன் தெருக்களெல்லாம் அகலமானவைகளுமல்ல, நீளமானவைகளுமல்ல, ஒழுங்கானவைகளுமல்ல. வீடுகள் செங்கற்சுவர்மேல் ஓட்டால் மூடப்பட்டிருக்கும். மண்சுவரின்மேல் தென்னைக் கீற்று மூடப்பெற்றனவாயும் சில இருக்கும். ஊரில் பல வகைச் சாதியினர் வாழ்ந்து வந்தாலும் வேளாளரே அதிகத் தொகையினராவர். அவர்கள் தெய்வமுண்டென்ற கொள்கையுடையவர்கள். அவர்கள் வழிபட சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் திருக்கோயிலொன்று உண்டு. ஒரு பிள்ளையார் கோயிலும் அமைந்துள்ளது. சிவபெருமானது மூத்த பிள்ளையாக நூல்கள் கூறுவதால் அவரைப் பிள்ளையாரென்றே சொல்வது வழக்கம். எல்லாம் வல்ல முழுமுதற் கடவுள் ஒருவரேயாவர். ஆயினும் ஒளி ஒன்றே விளக்கு, தீவட்டி[1], பந்தம் முதலிய பல பெயர் பெறுதல் போல இறைவனை முழுமுதற் கடவுளும் பல மூர்த்தங்கள் மூலமாகத்தோன்றி இவ்வுயிர்களை ஆளுகின்றார் என்பது சைவ மதக் கொள்கை. அவ்வாறு பலதிறப்பட்ட மூர்த்தங்களில் பிள்ளையாரது தோற்றமும் ஒன்று. சிவபெருமானது கணங்கட்குத் தலைவராகையால் கணபதியென்றும், தன்னைத் தொழுவார்க்கு உண்டாகும் விக்கினங்களைக் களைவதால் விக்கினேசுரர் என்றும், பெருமை பொருந்திய தலைவரென்ற பொருளைத் தருவதால் விநாயகர் என்றும் அவரைக் கூறுவர். அவருக்கு ஒவ்வோர் ஊராரும் ஊர்தோறும் ஆலயங்கள் அமைத்து அவரது திருவுருவத்தைச் செய்துவைத்துத் தத்தமக்கு விருப்பமான பெயரிட்டுக் கூறுவது நமது நாட்டு வழக்கம். அந்த

[1] தீவர்த்தி என்பது திருந்தியசொல்.

வழக்கப்படி இந்தத் திருநாரையூரில் விளங்கும் பிள்ளையாரைப் பொல்லாப் பிள்ளையார் என்று அழைத்து வந்தார்கள்; நாமும் அப்படியே இன்றைக்கும் சொல்லி வருகின்றோம்.

இந்தப் பொல்லாப் பிள்ளையாரைப் பூசை செய்வதற்கு ஒருவர் உண்டு. கோயிலில் எழுந்தருளியிருக்கும் கடவுள் திருஉருவத்தை வணங்க மக்களாய்ப் பிறந்த எல்லோருக்கும் உரிமையுண்டு; ஆயினும் தொன்று தொட்டு வந்த வழக்கப்படி உரிய காலங்களிலே பூசை செய்வதற்கென ஒரு சிலரை ஊரார் ஏற்படுத்தியிருக்கின்றனர். அவர்கள் ஆதிசைவர் என்றழைக்கப்பெறுவர். இப்பொல்லாப் பிள்ளையாரையும் பூசைத்தொண்டு செய்து வந்தவர் ஓர் ஆதிசைவரே. இவருக்கு மனைவி மக்களும் உண்டு. இந்த ஆதிசைவர் ஒருநாள் தமக்கு அயலூரில் நேர்ந்த முக்கிய காரியமொன்றைப் பார்த்துவரச் சென்றார். செல்லுமுன் தாம் அவ்வூர்சென்று திரும்பி வரும் வரையில், கோயிற்பூசை முட்டுப்படாதிருக்கும் பொருட்டுத் தமது பிள்ளையைக்கொண்டு பிள்ளையார் பூசை செய்து வரும்படியாகத் தம் மனைவியினிடம் சிவமறையவர் சொல்லிவிட்டுச் சென்றார்.

இவருடைய மகன் மிகச் சிறியவன். அவன் பாடசாலையில் கல்வி பயின்றுவந்தான். பிள்ளைக்கு ஐந்து வயதானவுடன் பள்ளியில் வைப்பது அந்தக் காலத்தில் வழக்கம். இதனை அட்சராப்பியாசம் என்பர். இஃது 'கல்வி பயிற்றுவித்தல்' என்று பொருள்படும். இதனையே 'மையோலை பிடித்தல்' என்றும் சொல்வது உண்டு. பிள்ளையாய்ப் பிறந்த ஒருவனுக்குப் பதினாறுவகைச் சடங்குகள் உண்டு. அச்சடங்குகளுள் இவ் வட்சராப்பியாசம் ஒரு சடங்காகும். அக்காலத்தில் பிள்ளையைப் படிப்பதற்காகப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புவார்கள். இதனைப் 'பள்ளிக்கூடத்தில் வைத்தல்' என்றும் 'சுவடி தூக்குதல்' என்

றும் சொல்லுவர். அவ்வழக்கப்படியே சிவமறையவரது பிள்ளையும் பள்ளியில் பயின்று வந்தது. இப்பிள்ளைக்கு நம்பியாண்டான் என்று பெற்ரோர் பெயரிட்டிருந்தனர்.

அந்நாளில் கல்வி பெரும்பான்மையும் திண்ணைப் பள்ளிக்கூடங்களில் கற்பிக்கப்பட்டுவந்தது. சிற்றூர் அல்லது சிறு கிராமங்களிலே ஒருவர் இருவரே சற்றுச்சீரான குடித்தன முடையவராக விருப்பவர்கள். அவர்கள் தம்மக்களின் கல்வியின் பொருட்டுப் பள்ளிக்கூடம் வைப்பது வழக்கம். அந்த ஊரிலேயே கல்வியறிவுடையார் இருப்பின் அவரையாவது, வேற்றூரிலிருந்து ஒருவரையாவது தருவித்து அப்பள்ளியில் உபாத்தியாயர் வேலைக்கு வைப்பர். பள்ளிக்கூடம் பெரியதனக்காரருக்குச் சொந்தமான வீட்டுத் திண்ணையிலாவது உபாத்தியாயர் குடியிருக்கும் வீட்டுத் திண்ணையிலாவது இருக்கும். முதலில் உபாத்தியாயர் உட்கார்ந்திருப்பர். இவருடைய வலப் பக்கத்திலே பிள்ளைகள் உட்கார்ந்து வாசிப்பார்கள். அப்பெரிய மனிதர் வீட்டுப் பிள்ளையைத்தவிர அவ்வூரிலுள்ள மற்றைய வீட்டுச் சிறு பிள்ளைகளும் வந்து கல்வி பயில்வார்கள். உபாத்தியாயர் பெரியதனக்காரரிடமிருந்து பெறும் ஊதியம் பெரும்பான்மை தானியமாகவும், சிறுபான்மை பொருளாகவும் இருக்கும். மற்றையோர் தங்களால் இயன்றது கொடுப்பர். இவைகளைக் கொண்டே உபாத்தியாயர் சீவனம் செய்வர்.

பிள்ளைகள் இரவில் படித்தாலும் படிக்காவிட்டாலும் அதிகாலையில் எழுந்து பள்ளிக்கூடம் வந்துவிட வேண்டும். இவ்வழக்கம் சிலருக்குப் புதுமையாகத் தோற்றலாம். ஆயினும் இதனில் பல நன்மைகளுண்டு. காலையிலெழப்பழகுதல் ஒன்று; அதிகாலையில் மனம் பலவாறு செல்லாது குவிந்திருக்குமாதலால் மாணவர்கள் மனனம் பண்ணியவையும் கேட்டவையுமான பாடங்கள் மறவாது பதிந்திருப்பது மற்றொன்று; சோம்பலில்லாமை பின்னொன்று. இவ்வாறு பல

வகைப் பலனுண்டு. பிள்ளைகள் பள்ளிக்கூடத்திற்கு வரும் போது சென்ற நாளிரவில் படித்ததற்கு அறிகுறியாக வீட்டிலிருந்து கைச்சீட்டு வாங்கிவர வேண்டும். சில ஊர்களில், படித்ததற் கடையாளமாக உபாத்தியாயருக்கு ஏதாவது பண்டம் கொண்டுவந்து கொடுப்பதுண்டு. சீட்டாவது வேறு பண்டமாவது வாராவிட்டால் பிள்ளைக்குத் தண்டனை கிடைக்கும். பிள்ளைகள் நேரஞ் சென்று வந்தாலும் தண்டிக்கப்படுவர். அதனால் பள்ளிக்கூடத்திற்கு முன்வருதலைப் பற்றிய சச்சரவுமுண்டு. அவர்களுக்கு இதனில் ஊக்கமும் அதிகம். காலையில் பள்ளிக்குச் செல்லுதலே சோம்பரின்மை, காலையிலெழுதல் முதலியவைகட்கு ஆணிவேர். இவ்வாறு அதிகாலையில் வந்த சிறுவர் மனனம் செய்யவேண்டிய எண்சுவடி பொன்னிலக்கம் முதலான கணக்கு வகைகளை எழுதியும், சதகம் அந்தாதி முதலிய நூல்களைப்படித்தும் மனனம் பண்ணுவார்கள். இதற்குள் பொழுதுவிடிந்து சாமநாழிகையாகிவிடும், பிள்ளைகள் பள்ளியினின்று வீட்டிற்குச் சென்று காலையுணவுண்டு திரும்பவும் பாடசாலைக்குச் செல்லுவார்கள்; மத்தியானம் சூரியன் உச்சியை விட்டு நீங்கியதும் இடைவேளைச் சாப்பாட்டுக்கு அவரவர் வீடுசென்று குளித்து, திருநீறு பூசி, உணவு அருந்தித் திரும்புவார்கள்; பின் மாலையில் விளக்கேற்றும் நேரத்திற்கே வீட்டுக்கு வருவார்கள்.

நமது சரித்திர நாயகனாகிய நம்பியாண்டானும் தனது தந்தையாராகிய சிவமறையோர் ஊருக்குச் சென்றநாட் காலையில் பள்ளியிலிருந்து திரும்பியதும் அவனது தாய், தந்தையார் அறிவித்துச் சென்ற கட்டளையை அறிவித்தாள். சிறுவனும், 'தந்தை சொன் மிக்க மந்திரமில்லை' என்பதைக் கருத்திற்கொண்டு நீராடி, தோய்த்துலர்ந்த ஆடையையுடுத்து, பூசைக்குவேண்டிய உபகரணங்களான எண்ணெய், மா, மஞ்சள் திரவியப்பட்டை, நெல்லிமுள்ளி, தயிர், பால் ஆகிய அபிடேகத் திரவியங்களும், சந்தனம், பூ

முதலிய அணிபொருள்களும், நிவேதனமும் கொண்டு சென்றான். கோயிலினுள் திருவலகிட்டு, ஆனைந்து என்னும் பஞ்சகவ்வியம் சேர்த்துத் தெளித்து, அர்க்கியம் வைத்துச் சுத்தி செய்துகொண்டு, பின்னர் சுவாமிக்குமுன்னுள் சாத்தியிருந்த பூ, உடை, சந்தன முதலியவற்றைக் களைந்து, பின் தைலக் காப்பை முதலிற் சாத்துவதும், பிறகு மற்றவைகளை அபிடேகிப்பதும் மரபு. நம்பியும் அவ்வாறே எண்ணெய், மாமுதலானவற்றைக் கொண்டு திருமஞ்சனமாட்டி, திலதமிட்டு, ஆடைகட்டிப், பூமாலையணிந்து, தூபதீபம் கொடுத்துத் தான் கொண்டுவந்திருந்த நைவேத்தியத்தை வேழமுகத்தோன்முன் வைத்து அவரையருந்த வேண்டினான். அந்த உணவிற்கு, 'நிவேதனம்' என்பது பெயரென்பதும், அச்சொல்லின் பொருள், 'அறிவித்தல்' என்பதும் இவன் அறிந்தவனல்லன். தந்தையார் நாள்தோறும் கொண்டுவரும் நிவேதனப்பொருள் திரும்ப வீட்டுக்குக் கொண்டுவரப்படுவதையும் இப்பிள்ளை அறிந்தவனுமல்லன். அதனாலே கணபதி திருமுன் வைத்தவை வைத்தபடி யிருக்கக்கண்ட சிறுவன் கடவுளுக்குச் செய்ய வேண்டிய பூசைகளில் தவறு ஏதோ நடந்துவிட்டதென்றும், அதனாலேயே பிள்ளையார் உண்ண விரும்பவில்லையென்றும் எண்ணினான். எண்ணியதைக் கடவுள் திருமுன் பணிவோடு விண்ணப்பம்செய்து, தன்னிடம் என்ன குறையிருந்தாலும் பொறுத்துக்கொண்டு தான் நிவேதித்தவைகளை உண்ணவேண்டுமெனப் பரிந்திறைஞ்சினான். அதற்கும் ஒன்றும் நடைபெறவில்லை. வைத்த பண்டமெல்லாம் அப்படியே யிருந்தன. நிவேதனத்துக்குக் கொண்டு வந்து வைத்தவைகளை யெல்லாம் மக்களைப்போல கடவுள் உண்டுவிடுவது வழக்கமென்றே நம்பியாண்டான் உண்மையில் நினைத்திருந்தான். நிவேதனம் திரும்ப வீட்டுக் கெடுத்துச் செல்லப்படுவதை இதுவரையில் இவன் பார்த்திராதவனாகையால் தான் எடுத்துச் சென்றால் தாய்

கோபிப்பாளே என்றும் பயந்தான். கடவுள் உண்ணவில்லையே யென்ற வருத்தமும் சேர்ந்தது. அதனால் அவன் மிகுந்த ஆத்திரங்கொண்டு ஆண்டிருந்த கல்லில் தன் தலையை மோதச்சென்றான். அதுபொழுது, அடியார்க்கு எளியரும் வேண்டுவார் வேண்டுவதை ஈதலே குணமாக வுடையருமான கருணையங்கடல் தம் பொருட்டு ஒருவன் துன்பப்படப் பார்த்திருப்பாரா ? ஒருபோதும் அவ்வாறு கடவுள் இராராதலினால், 'நம்பீ ! பொறு' என்று சொல்லித்தடுத்து அவ்வமுதமெல்லா முவந்துண்டனர் பொல்லாப் பிள்ளையார்.

இப்படிப்பட்ட விபரீதமான நடவடிக்கைகளினாலே நாழிகை யாகிவிட்டது. நம்பிக்குப் பள்ளிக்கூடம் செல்லும் காலம் கடந்துவிட்டது. காலந்தவறிப் பள்ளிக்குச் சென்றால் உபாத்தியாயர் தண்டிப்பாரென்று முன்னர்ச் சொல்லியிருக்கின்றோம். ஆதலினாலே பள்ளிக்கூடம் சென்றால் உபாத்தியாயர் அடிப்பாரென்றும், இனிப் பிள்ளையாரே தனக்குப் பாடம் கற்பிக்கவேண்டுமென்றும் பிள்ளையாரிடத்தில் விண்ணப்பஞ் செய்து கொண்டனர் நம்பியார். பிள்ளையாரும் இவரது பக்திக்கு அருள் கூர்ந்தவராதலால் படித்தன வெல்லாம் மனத்திற் படியவும், பொருள் விளங்கவும் அருள் செய்தனர். படித்துவிட்டு மாலையில் வீடுநோக்கி வந்தனர் நமது நம்பி. அவர் வந்தவுடன் அவர் தாய் நிவேதனப் பண்டங்கள் எங்கே என்று கேட்டனள். பிள்ளையார் உண்டுவிட்டதாக நம்பி கூறினார். அவ்வாறு அதுவரை நடந்தது வழக்கமில்லையாகையால் அவள் அதிசயமடைந்தாள். அவள் மறுநாள் கோயிலுக்குச் சென்று ஒளிந்திருந்து பார்த்தாள். உண்மையைக் கண்டாள் ; மகிழ்ச்சி கொண்டாள். அயலூருக்குச் சென்றிருந்த தன்னாயகன் திரும்பி வந்ததும் அவரிடம் நடந்தவற்றையும், தான் கண்டவற்றையும் சொன்னாள். சிவவேதியரும் அதிசயமடைந்து பின்பு

உண்மையைக்கண்டு தெளிந்தார். அதுமுதல் சிறுவனையே பிள்ளையார் பூசை செய்யும்படி ஏற்பாடு செய்தார். இவ் வதிசயச்செய்தி நாடெங்கும் பரவிற்று.

---

## 2. சோழ அரசாட்சி

நம்பியாண்டார் நம்பி வாழ்ந்துவந்த ஊர் திருநாரையூர் என்று முன்னர்க் குறிக்கப்பட்டுள்ளது. அந்த ஊர் சோழநாட்டிலுள்ள ஓர் ஊர். அக்காலத்திலே தமிழகம் திருவேங்கடமலையை வட வெல்லையாகவும், குமரியைத் தென்னெல்லையாகவும், கடலைக் கிழக்கு மேற்கு எல்லையாகவு முடையது. இத்தமிழகப் பரப்பைச் சேரசோழ பாண்டியர்களே பேரரசர்களாக ஆண்டு வந்தனர். ஒவ்வொரு காலம் ஓர் அரசனுக்கு மற்றைய இரு அரசர்களும் கீழ்ப்பட்டிருந்தது முண்டு. இந்நாடுகள் சேர சோழ பாண்டி நாடு என்று சொல்லப்படும். பின்னொரு காலத்தில் இவற்றிற்கு முறையே சேரமண்டலம், சோழ மண்டலம், பாண்டி மண்டலம் என்று பெயர் வந்தது. தமிழகத்தில் வழங்கிவந்த பாஷை தமிழ். மலையாளம் என்றொரு பாஷை தனியாக அக்காலத்தில் வழக்காறில் இல்லை. சோழமண்டலத்தின் வடவெல்லை காலத்துக்குத்தக்கவாறு சுருங்கியும் வளர்ந்துமிருந்தது. தென்னார்க்காடு ஜில்லாவிலுள்ள வெள்ளாறு இதற்கு வடவெல்லையாக இருந்த காலமு மொன்றுண்டு. அதற்கு வடபாலுள்ள தமிழ்நாட்டைத் தொண்டைமண்டல மென்பர். பிற்காலச் சோழ ராதிக்கத்தில் ஒருகாலத்தில் சோழமண்டலமாத்திர மிருந்தது என்றும், ஒருகாலத்தில் தொண்டை மண்டலமும் சேர்ந்திருந்தது என்றுஞ் சொல்லுவர். நமது சரித்திர நாயகர் வாழ்ந்த காலத்தின் முன்பின் நாட்டு நிலையை விவரிப்போம். நம்பியினது காலம் பத்தாம் நூற்றுண்டின் பிற்பகுதி யென்பது அவர் காலப்பகுதியில் விளக்கப்படும்.

அதன்பொருட்டுப் பத்தாம் நூற்றுண்டில் நாடு எவ்வாறிருந்தது என்பதையும் ஈண்டுக் கூறுவோம்.

அந்நூற்றுண்டின் துவக்கத்தில், கி. பி. 907-ல் பிற்காலச் சோழர்களில் ஒருவனுன பராந்தகன் என்பான் சோழ சிங்காதன மேறினுன். இவனுக்குப் பின்னும் இப்பெயருடையார் பலருண்டாதலால், இவனை முதலாம் பராந்தக னென்பர். இவனது தகப்பன் முதலாம் ஆதித்தன். அவன்நாளில் சோழ அரசு தொண்டைமண்டல முழுவதும் பரவியிருந்தது. இப்பராந்தகன் தன் தகப்பன் வென்ற நாட்டைக் கலகமின்றிப் பாதுகாத்துக்கொள்ள, அதற்கு மேற்கிலிருந்த வாண நாட்டை அடிப்படுத்தியும், அதன் அரசர்களை நீக்கியும், அதற்கும் மேற்கிலுள்ள கங்கர் என்னும் அரசர்களிடம் இவ்வாண நாட்டை யொப்பித்து அவர்களைச் சிற்றரசர்களாக்கியும் தன்வசப்படுத்திக்கொண்டான். அதன்பின் தென்னுடான பாண்டி நாட்டிற் புகுந்து, அங்கிருந்த அரசனைநீக்கித் தன்நாட்டோடு அதனையுஞ் சேர்த்துக்கொண்டான். பாண்டி நாடும் இவன்வசமாகவே பின் சிங்களநாடான இலங்கைத்தீவிலும் சென்று அந்நாட்டரசனைவென்று, 'சங்கிராம ராகவன்' என்னும் பட்டமும் கொண்டான்.

அக்காலத்தில் மகாராஷ்டிர தேசத்தை இரட்டர், இராஷ்டிரகூடர் என்ற ஒரு வகுப்பினர் ஆண்டுகொண்டு வந்தனர். தற்காலத்திலுள்ள மைசூர் இராச்சியம் அக்காலத்தில் கங்கநாடு என்றழைக்கப்பட்டது. இந்நாட்டரசர் இராஷ்டிரகூட அரசர்களின் கீழ்ச் சிற்றரசர்களாக இருந்தனர். இவர்களுக்குத்தான் பராந்தகன் வாணநாட்டைக் கொடுத்து அவர்களைத் தன்வசமாக்கிக் கொண்டான். இந்தச் செய்கையால் இரட்டர் சோழருக்குப் பகைவராயினர். இரட்ட வமிசத்திலே மூன்றும் கிருஷ்ணன் என்னும் கன்னரதேவன் ஏறக்குறைய கி.பி. 938-ல் இரட்ட அரசனுனுன். இவன் தன் சேனைகளைத் திரட்டிக்

கொண்டு சோழராச்சியத்தைப் பிடிக்கும் எண்ணத்துடன் தொண்டைநாட்டிற் புகுந்தான். இதனையறிந்த சோழ பெருமானடிகளான பராந்தகதேவன் தன்சேனையோடு வந்த கிருஷ்ணனை வெருட்டியடித்து, 'வீரசோழன்' என் னும் பட்டமும் தரித்தான். இவனுக்கு 'வீரநாராயணன்' என்ற மற்றொரு பெயருமுண்டு. இவன் இவ்வாறு தமி ழகம் முழுவதும் அடிப்படுத்திச் சக்கரவர்த்தியாகி கி. பி. 947 வரையில் அரசாண்டான்.

947-ல் பராந்தகன் விண்ணுட்டுக்கேகலும், இவன்மக் கள் ஐவருள் மூத்தவனுன இராஜாதித்தன் சோழசிம்மா சனமேறினன். இரட்டனை கன்னரதேவன் தனக்குச் சோழநாட்டின் நிலையை அப்போதப்போது அறிவிக்க ஒற் றர்களை ஏற்படுத்தியிருந்தான். அவர்களுள் பிற்காலத்தில் திருஒற்றியூரில் இருக்கும் சதுரானன பண்டிதன் மடத்து அதிபதியாக வந்த துறவியும் ஒருவன். அவனது உதவி யாலே இச்செய்தியை யறிந்த கன்னரதேவன் மறுபடியும் சோழ நாட்டில் புகுந்தான். இராஜாதித்தனும் தன் சேனை களைத் திரட்டிக்கொண்டு வடக்கு நோக்கி வந்தான். 948-ல் இருசேனைகளும் அரக்கோணத்துக்கு அருகிலுள்ள தக்கோலத்தில் சந்தித்தன. இராஜாதித்தன் போரில் வெற்றிபெற்றுனுயினும், கன்னரதேவனது சூழ்ச்சிப்படி அவன் மைத்துனன் பூதுகனுல் வஞ்சனையாகக் கொல்லப் பட்டான். சோழசேனை அரசனும் தலைவனு மற்றதா யிற்று. பின்னர், கன்னரதேவன் ஜெயிப்பது எளிதாக முடிந்தது. இவனும் தொண்டை நாடு முழுவதையும் கைப்பற்றிக் கொண்டான்.

இராஜாதித்தன் இறந்த செய்தி கேட்டவுடன் அவன் தம்பி கண்டராதித்ததேவர் 948-ல் அரசரானுர். இவர் அரசு கட்டில் ஏறியகாலத்திலே சோழராஜ்யம் சோழ மண்டலமும், பாண்டி மண்டலமுந்தான் கொண்டது. மற்ற நாடுகள் பிறர்வசமாயின. பாண்டிமண்டலத்திலும்

அந்நாட்டு அரசனாயிருந்த வீரபாண்டியன் சோழப் பேரரசினின்றும் நீங்கி முரணத் தலைப்பட்டான். சோழ வரசனான கண்டராதித்ததேவர் சிறந்த சிவஞானியான தாலே ராஜ்ய விஷயங்களை அதிகமாக மேற்போட்டுக் கொள்ளவில்லை. அதனைக் கண்டறிந்தே பாண்டியன் சுயேச்சை யடைந்தது மன்றிச் சோழநாட்டின்மீதும் படை யெடுத்தான். அக்கால வழக்கப்படி கண்டராதித்த தேவரும் தம் படையைத் திரட்டிச் சென்றார். அவர் போரில் தோல்வியுற்றதோடு உயிரையு மிழந்தார்.

இவ்வாறு இவர் 954-ல் உயிர் துறக்கவே, இவரு டைய பிள்ளையான மதுராந்தக உத்தம சோழனென்பான் இரண்டு வயதுக் குழந்தையாக இருந்தமையால், இவ னுக்குப் பதிலாக, இவனது சிற்றப்பன் அரிஞ்சயன் சோழ சக்கரவர்த்தியானான். ஆனால் அவன் அரியணை யேறின சில நாளிலேயே இறந்து பட்டானென்று தெரி கிறது. அரிஞ்சயனுக்குப்பின் அவனது மகனான சுந்தர சோழன் சோழவரசனானான். இவனை இரண்டாம் பராந்தக னென்பர். இவன் வெகு பராக்கிரமசாலி. உத்தமசீலி, அரிகுலகேசரி என்ற இருசிற்றப்பன் மாரோடும் சேர்ந்து இழந்த சோழ ராஜ்யத்தை மறுபடி நிலைநாட்ட முயன்றான். முதலில் தன் பெரியப்பனைக் கொன்ற பாண்டிய அரசனை எதிர்த்தான். பாண்டியன் இவனுக்குப் பயந்து நாடிழந்து சிங்களத்தில் ஓடியொளித் துக்கொண்டான். இவனும் பாண்டிநாட்டைச் சோழ நாடாக்கினான்.

தான் பட்டத்துக்கு வந்த நாலைந்து ஆண்டுகளுக்குள் ளாக, தொண்டைநாட்டை இரட்ட அரசனான கன்னர தேவனிடமிருந்து பிடுங்க முயன்று சேனைகளோடு வடக்கே சென்றான். கன்னரதேவனைப் பல விடங்களி லும், முக்கியமாகச் சேவூரிலும் தோற்கடித்து அவனைத் தொண்டைமண்டலத்தினின்றும் வெருட்டினான். இவனது

2

நாளில் கன்னரதேவன் தான் பிடித்த நாடுகளை இழந்து வடுகவழி மேற்கு என்னும் பாணகப்பாடியோடு நிற்கவேண்டியதாயிற்று.

மறுபடியும் சுந்தரசோழன் ஒரு சேனையைத் திரட்டித் தன் மைத்துனனை கொடும்பாளூர் வேளார் சிறியவேளார் என்னும் திருக்கற்றளிப்பிச்சன் தலைமையின்கீழ் தன் மூத்த மகன் ஆதித்த கரிகாலனையுஞ் சேர்த்து ஓடியொளிந்திருந்த பாண்டியனையும், இலங்கையரசனையும் தொலைக்க அனுப்பினன். இச்சைனியம் இலங்கை சென்று, அந்நாட்டரசனை வென்று திரும்பியது. இவ்வாறு இவன் தன் முன்னோர் இழந்த சோழ ராஜ்யத்தில் பாதிக்குமேல் தன் வசமாக்கிக் கொண்டு ஆண்டு வரும்போது ஏறக்குறைய 966-ல் விண்ணுலகமடைந்தான்.

இவனது மூத்தமகனை ஆதித்த கரிகாலன் சோழசக்கரவர்த்தியானன். ஓடி ஒளிந்திருந்த வீரபாண்டியன் மறுபடி ஒரு சேனையைத் திரட்டிக்கொண்டு வந்தான். இவன் முன் தன்னுடைய தகப்பன் நாளிலே சிங்களத்தைக் கீழ்ப்படுத்தச் சென்ற சேனைக்குத் தலைவனயிருந்த தனது அம்மானை கொடும்பாளூர் வேளார் சிறிய வேளாரோடுகூடச் சிங்களம் சென்றவனுகையால் எதிர்த்து வந்த வீரபாண்டியனை வெல்வது எளிதாயிற்று. அவனை எதிர்த்துக்கொன்று அவன் தலையைப் பந்தாக உருட்டி விளையாடினன். பாண்டியநாடு இவன் அரசாட்சிக்குட்பட்டே யிருந்தது. தொண்டைமண்டலத்திலும் பகைவனை கன்னரதேவன் தலைகாட்டவேயில்லை. ஆனால் இவன் வெகுநாள் சோழசக்கரவர்த்தியாக ஆளக் கொடுத்து வைக்கவில்லை. கி. பி.970-ல் இவன் சில சிற்றரசர்களோடு சிதம்பரத்துக்கு அருகில். சண்டையிடுகையில் வஞ்சனையாகக் கொல்லப்பட்டான். இவனைப் பொன்மாளிகைத் துஞ்சின தேவர் என்று பெரியார் கூறுவர்.

இவனுக்குப் பின் பராந்தகனது பெரியப்பன் மகன் மதுராந்தகன், 'உத்தம சோழன்'[1] என்னும் பட்டத்தோடு அரசு கட்டிலேறினன். இவன் புதிதாக நாடுகளைக் கைப் பற்ருவிடினும் சிற்றப்பன் மகனை இரண்டாம் பராந்த கன் பிடித்த நாடுகளை விட்டுவிடவில்லை. இவனுக்கு உதவி யாக இவனது சிற்றப்பன் பேரனும், ஆதித்த கரிகாலனது தம்பியுமான 'அருண்மொழி' யென்பான் இளவரசனக நியமிக்கப்பட்டான். அவன் வடக்கிலுள்ள நாடுகளை இழக் காமல் காப்பாற்றிக்கொண்டிருந்தான். உத்தமசோழன் 985-ல் இறக்கவே, அருண்மொழி, 'இராஜராஜன்' என்ற பட்டத்தோடு சோழ சிம்மாசன மேறினன். இவன் 1012 வரை அரசாண்டான். தனது ராஜ்யத்தை விஸ்தாரப் படுத்த எண்ணிச் சேர ராஜ்யத்தின்மேல் படையெடுத்துச் சென்று, சாலை யென்னுமூரிலிருந்த கப்பல்களையழித்தான். வடக்கிலும் கங்கவாடி, நுளம்பப்பாடி முதலான இடங் களைப் பிடித்தான். இவன் நாளில் சோழ ராஜ்யம் தற் போதைய சென்னை இராசதானியும், மைசூர் ராஜ்யமும் சேர்ந்த பிரதேசத்துக்குமேற் பரவியிருந்தது. இந்நூற் ருண்டின் ஆரம்பத்தில் பராந்தகன் எவ்வளவு நாடுகளை யாண்டிருந்தானே அதைவிட அதிகமாகவே இராசராசன் ஆண்டுவந்தான்.

இவர்கட்குத் திருவாரூரும் இராஜதானியாக இருந் தது. சோழ ராஜ்யம் பெரிதாயினும், சிறிதாயினும் தம் அரசாட்சிக்கு உட்பட்டதை மிகச் செம்மையாயும், நெறி தவருமலும் அரசர்கள் ஆண்டுவந்தனர். இவர்கள் மற்றச் சமயங்களை ஆதரித்து வந்ததோடு சைவத்திலும் மிக்க பற்றுடையவர்களாக இருந்தார்கள். முற்கூறிய முதலாம் பராந்தகன் திருவாரூர் தியாகப்பெருமான் எழுந்தருள இராஜ நாராயண மண்டபமெனத் தன் பெயரால் மண்டப

1. இவனுக்கு விக்கிரமன் என்ற பெயருமுண்டு.

மொன்று கட்டுவித்தான். பொன்னம்பலம் என்னும் சிதம் பரத்திலுள்ள ஆலயத்தைப் பொன்னால் வேய்ந்தான். இவ னுக்குப் பின் வந்த கண்டராதித்த தேவர்பாடிய செய்யுட் கோவை யொன்று 'திருவிசைப்பா'வில் சேர்க்கப்படும் பெருமை பெற்றுள்ளது. இவரது தேவியார் திருநல்லம், வடகுரங்காடுதுறை, திருமணஞ்சேரி, திருவாரூர் அர னெறி முதலான பல ஊர்களிலுள்ள சிவாலயங்களைக் கற் கோயிலாகக் கட்டியுள்ளாள். தனது கணவன் உருவத் தைக் கோனேரி ராஜபுரம் என்று வழங்கும் திருநல்லம் கோயிலில் வெட்டியுள்ளாள். திருநாகைக்காரோணத் துக்கு அருகிலுள்ள ஊர் ஒன்று செம்பியன்மாதேவியென இவள் பெயரால் வழங்குகிறது. கண்டராதித்தருக்குப் பின் வந்த சுந்தர சோழ தேவன் பழையாறைக் கோயில் கட்டியுள்ளான். இவன்மகனான ஆதித்த கரிகாலன் பொன் னம்பலத்தைக் கொங்கிலிருந்து கொண்டுவந்த உயர்ந்த பொன்னால் மூடினான். உத்தம சோழனோ தன்தாயின் ஆணைக்கடங்கி அநேக சிவாலயங்கட்கு வேண்டும் நிவந் தங்கள் வைத்தான். இவனுக்குப்பின் வந்த இராஜராஜன் தஞ்சையிலே இன்றும் பலரும் சென்று அதிசயத்தோடு பார்த்துவரும் பிருகதீசுரம் என்ற இராஜராஜேசுரத்தைக் கட்டி, அதற்குவேண்டிய பொருள்களையும் நிலங்களையும் வைத்தான். திருவாரூரிலுள்ள தியாகராசர் போல இந்தக் கோயிலிலும் தியாகப் பெருமானை எழுந்தருளுவித்து ஆட வல்லானென்று பெயரிட்டான். இவன் பட்ட மகிஷி தன் பெயரால் திருவையாற்றுக் கோயிலில் உத்தர கைலாச மென வழங்கும் உலக மாதேவீச்சுரம் கட்டினாள். ஆகவே சோழர்கள் சிவபக்தி மிக்குடையவர்கள் என்பது தெளிவு.

## 3. தேவாரத் திருமுறை தேடல்

நம்பியாண்டார் நம்பியின் அரிய செயல் நாடெங்கும் பரவிய காலத்தில் அரசாட்சி செய்தவன் ஆதித்தனென்று நம்பி தமது, 'திருத்தொண்டர் திருவந்தாதி'யில் கூறியுள்ளார். திருமுறைகண்டபுராண மியற்றிய உமாபதிசிவம் இவனை இராஜராஜ அபய குலசேகரன் என்பர். இந்த ஆதித்தனுக்கே கரிகாலன், இராஜராஜன், குலசேகரன் என்று பல பேருண்டு என்பது பின்னர்க் கூறப்படும். இவன் சிறந்த சிவபக்திமானென்று முன்னரே கூறியிருக்கின்றோம். பல்லவர் அரசாண்ட கால முதற்கொண்டே அரசர்கள் திருக்கோயில்களில், அப்பர், சம்பந்தர், சுந்தரர் என்ற பெரியார் பாடிய பாடல்களை ஓதும்படி நட்டுவர் ஏற்படுத்தி யிருந்தனர். நாட்டிலும் அப்பாடல்கள் ஒரு காலத்தில் பரவியிருந்து நாளடைவில் அருகத் தலைப்பட்டன. அப்பாடல்களுட் சிலவற்றை இவ்வரசன் ஒவ்வொரு சமயம் தன் சபைக்கு வருவார் பாடக்கேட்டு மனமகிழ்ந்தான். இவை பக்திச் சுவையோடு பொருட்பொலிவும் நிரம்பியவை. அரசனுக்கு இரண்டொரு பாக்களைக் கேட்பதினாலே அவன் ஆசை திருப்தியாவதில்லை. மேலும் மேலும் இவற்றைக் கேட்கவேண்டுமென்னும் விருப்பம் மிகுதியு முண்டாயிற்று. இப்பாடல்களுக்குத் தேவாரம் என்று பெயர்.

தேவாரம் என்ற சொல்லுக்கு அவரவர் தத்தம்புத்தி வன்மைக்குத் தக்கபடி பொருள் கூறுவர். கடவுள்பால் அன்புகனிந்து பாடிய பாடல்கள் என்று கொள்வதில் யாதொரு குற்றமுமில்லை. இத்தேவாரப் பாக்களில் பத்துக் கொண்டதைப் பதிகம் என்பர். சில பதினொன்றுமிருக்கும். இவற்றைப் பாடியவர் அப்பர், சம்பந்தர், சுந்தரர் என்று சொன்னோம். அப்பருக்குத் திருநாவுக்கரையர் வாகீசர், ஆளுடைய அரசு எனப் பல திருநாமங்கள்

உண்டு. ஞானசம்பந்தருக்குக் காழியர்கோன், காழிப் பிள்ளையார், ஆளுடைய பிள்ளையார் என்று பல பெயர் களுண்டு. சுந்தரருக்குச் சுந்தரமூர்த்தி சுவாமிகள், நம்பி யாரூர், நாவலூர்க்கோன், ஆளுடைய நம்பி என்று அநே கம் பெயருண்டு. முன்னிருவரும் ஒரே காலத்தவர்; பின் னவர், காலத்தாற் பிற்பட்டவராயினும் பிற்காலத்திலே நாட்டுமக்கள் அம்மூவரையும் சேர்த்து, 'மூவர் முதலிகள்' என வழங்கலாயினர். இவர்களோடு மாணிக்கவாசகப் பெருமானையுங்கூட்டி சைவசமயாசாரியர், சமயகுரவர் என்று வழங்குவாராயினர்.

இவர்கள் சிவபெருமானிடத்து வைத்த பேரன்பினால் இவர்களது உளத்திற்றோன்றிய அச்சிவபெருமானது பெரு மைகள் தோத்திர உருவத்திற் சொல்லப்பட்டன. அன்றி யும் இவர்கள் ஒரே ஊரிலிருந்து இறைவனைத் துதியாது அவ்விறைவர் கோயில்கொண்டிருக்கும் தலங்கள்தோறும் சென்று பாடியருளிய துதிகளாகையால் அவை ஒரே வகைப்பட்ட பாக்களாயிராமல் பல்வகைப் பாக்களுஞ் சந் தங்களும் விரவப்பெற்றுள்ளன. இவைகளனைத்தும் தமி ழிசைகள் விரவி இசைத்தமிழுக்கு இலக்கியமாயின.

இவைகள் அக்காலத்து வழங்கிய சாதாரி, கௌசிகம், நட்டபாடை, தக்கேசி, குறிஞ்சி போன்ற பல பண்களால் ஆனவை. இப்பாடல்களை இக்காலத்திலும் அவ்வவற்றிற் குரிய பண்களிற் பாடினால் அப்பாடல்களுக்கு வசப்படா தார் ஒருவருமில்லையென்று துணிந்து கூறலாம்.

இத்தோத்திரப் பாடல்களான தேவாரப் பதிகங் களைச் சோழர்கட்கு முன்னுண்ட பல்லவ அரசர் கோயில் களில் கடவுள் திருமுன் நின்று ஓதும்படி ஏற்பாடுகள் செய்திருந்தனர் என்று கூறினோம். நாளடைவில் இவை களைக் கேட்டுப் பரிபாலிப்பாரின்மையால் இவை அருகத் தலைப்பட்டன. இவ்வாறு அருகின காலத்திலேதான் இராச ராச அபய குலசேகரன், தன்பால் வந்த பெரியாருட்

சிலர் தேவாரப் பதிகங்களைப் பண்ணோடு ஓதக்கேட்டான்; அவற்றின்பாலுண்டான விருப்ப மிகுதியால் அவை முழுமையும் கேட்கவேண்டும், பார்க்கவேண்டுமென்னும் அவா அவனுக்கு மிகுதிப்பட்டது. அவன் நாடு எங்கணும் இவற்றைத் தேடும்படி ஆள்விட்டான். இவை நாட்டில் அருகிவிட்டமையால் கிடைக்கவில்லை. ஆயினும் இவனுக்கு இவற்றின்மேலுண்டான ஆர்வமும், ஊக்கமும் குறைந்தில.

வேந்தன், திருமறைகளின்மேல் கண்ணுங் கருத்துமாயிருக்குங் காலத்திற்றான் நம்பியாண்டார் நம்பியின் அற்புதச் செய்கை அவன் காதுக்கு எட்டியது. இவ்வதிசயத்தைக் கேட்ட மன்னன், தானே இதனை நேரிற் காணும் பொருட்டுப் போதிய வாழைக்கனி, தேன், அவல், அப்பம், எள்ளுருண்டை முதலிய பண்டங்கள் தன்னைச் சார்ந்த பரிசனங்கள் எடுக்கவேண்டுமென்று முரசறைவித்தான். அரசன் ஆணைப்படியே வாழைப்பழம் முதலியன எடுக்கப் பட்டன. அரசனும் பரிசனரும் திருவாரூரிலிருந்து புறப் பட்டுத் திருநாரையூரை யடைந்தனர்.

வேந்தன் ஆதிசைவ மறையவனை யழைத்துவரச் செய்து வந்தனோபசாரம் சொல்லித் தான் கொண்டுவந்த வற்றைக் கடவுளுக்கு அபிஷேக ஆராதனை செய்யும்படி வேண்டினன்; நம்பியும் உவகையோடு சென்று வேழமா முகத்தோன் திருமுன்னின்று செய்யவேண்டுவனவெல்லாம் முறைப்படி நடத்தினர். அரசனது வேண்டுகோளையும் விண்ணப்பஞ்செய்து துதித்து நின்றார். அரசனது பக்திக்கும் நம்பியின் பக்திக்கும் உவந்த பெம்மான் தனது திருக் கரத்தை நீட்டி எல்லாவற்றையும் ஏற்று உண்டனர். இதனைக்கண்ட அரசனுக்கு உடம்பு பூரித்தது. உரோமம் சிலிர்த்தது; கண்களினின்றும் ஆநந்தவெள்ளம் பெருகிற்று. வேந்தன் அன்பு மயமானன். அடியற்ற மரம் போல, கடவுளை முன்னிட்டு, அந்தணன் அடிமிசை வீழ்ந்

தான். தண்டனிட்டு நின்று, 'ஐயனே! அடியேற்கு நீண்ட நாளாக ஒரு விண்ணப்பம் உண்டு; அதனைத் திருச்செவியி லேற்று வழிசெய்தல் வேண்டும்; அச்செய்தி, பெருமை யுறு மூவர் தமிழ் இருந்தவிடமும், அவர் செய்தியும் சொல்லவேண்டுமென்பதே' என்ருன். நம்பியாண்டார், 'மன்னவனே! சற்றுப்பொறுப்பாயாக; நான் இபமுகத் தோன் சந்நிதியிற் சென்று, அவனருளாலே தெரிந்து சொல்வேன்' என்று கூறி விடைபெற்று ஐங்கரன்பாற் சென்ருர். சென்றவர் பெருமானை வணங்கி நின்று அரசன் விரும்பிய செய்தி தனக்கு மனத்தில் உதயமாக வேண்டு மெனக் கேட்டுக்கொண்டார். கேட்டுக் கொண்டதும் தேவாரத் திருமுறைகள், கோயில் என்று சொல்லப்படும் சிதம்பரத்திலே கூத்தாடுந் தேவருக்குப் பின்னேயுள்ள அறையிலே சேமித்து வைக்கப்பட்டிருப்பதாகத் தோன் றிற்று. அவர் அரசனுக்கு இச்செய்தியை யறிவித்தார். அரசனும் இதனைக்கேட்டு உளம் மகிழ்ந்தான். அவற் றைத் தேடியெடுக்க வேண்டுமென்ற எண்ணம் பின்னும் அதிகரித்தது.

இவ்வேந்தன் சிதம்பரம் சென்று அத்தேவார ஏடுகளை யெடுக்கத் தீர்மானித்தான். நம்பியாண்டாரையும் தன் னேடுகூட வரும்படி வேண்டினுன். அவ்வாறே எல்லோ ரும் திருநாரையூரைவிட்டுப் புறப்பட்டுச்சென்று சிதம் பரத்தையடைந்தனர். அரசன் பொன்னம்பலத்தை யடைந் ததும் சுவாமி தரிசனம் செய்துகொண்டு, நடேசப் பெரு மானுக்கு அடித்தொண்டு செய்துவரும் அந்தணரை யழைத்து, தேவாரத் திருமுறைகள் அங்கு இருக்கின்றன வா என விசாரணை புரிந்தான். அவை குறிப்பிட்ட இடத் திலிருப்பதாயும், அவ்வறை மூவர் கையடையாளங்களோடு முத்திரை யிடப்பட்டிருப்பதாகவும் அந்தணர் கூறினர். இதனைக்கேட்ட அரசன் அவற்றைப்பார்க்க விரும்பினுன்.

அவ்வந்தணர்கட்கு அவ்வறையைத் திறக்க விருப்ப மில்லாமையால் மூவர் முதலிகள் வந்தபிறகேதான் அவ் வறையைத் திறக்க இயலுமென்று கூறினர். ஆயினும், அரசன் புத்திமானாகையால் அன்று மூவர் முதலிகள் திரு வுருவத்திற்குச் சிறப்புற அபிடேக ஆராதனைகள் செய்து திருவுலாச் செய்வித்தான். காவலன் எண்ணத்தைத் தெரிந்துகொள்ளமாட்டாத அர்ச்சகர்களும் விருப்புடன் விழாவைச் சிறப்புற நடத்தினர். மூவர் முதலிகள் திரு வுலாப்போந்து திருமுறை யிருக்கும் அறைக்கெதிரில் வந்தவுடனே அரசன் அந்தணரைக் கூவி, 'மூவரும் வந்து விட்டனர்; அறையைத் திறந்திடுக' என்றனன். அரச னது அறிவினாலும் ஆற்றலாலும் ஏமாற்றமடைந்ததில்லை மூவாயிரவர் வேறுவிடை பகரமாட்டாது அறையைத் திறந்துவிட்டனர். அவ்வறையிலே தேவாரத் திருமுறை கள் இருக்கக் கண்டான் அரசன். ஆனால் அவை கறை யான் புற்றினால் மூடியிருக்கப் பார்த்தான்.

அக்காலத்தில் சுவடிகள் கூந்தற்பனை, பனைஓலை இவற்றாலானவை. ஒற்றை ஓலைகளாகப் பனைஓலைகளை ஒரு அளவுக்கு நறுக்கி அவற்றிலுள்ள நரம்புகளை யெடுத் துப் பிதுக்கங்களை வாரவேண்டும். பெருஞ் சுவடிகளா யின் இரண்டு துளையும், சிறு சுவடிகளாயின் ஒரு துளையு மிடுவர். துளையிடுவதற்கென ஒரு கருவி உண்டு. அது சுரியாணி என்று பெயர் பெறும். ஒரு துளையில் கயிறு கோத்து மற்றொரு துளையில் ஒரு சிறு கோல் செருகுவது வழக்கம். சுவடிகளின் இருபுறங்களிலும் மூங்கிற் பளாய்ச்சு, மரம், உலோகம் இவற்றாலான பட்டைகள் போடுவதுண்டு. இவை அழகுபெறச் சித்திரிக்கப்பட்டு மிருக்கும். இவ்வாறு அரிதாகச் செய்யப்பட்ட நூல்களைச் சரிவரப் பரிபாலிக்காவிடின் அவை கறையான், இராம பாணம், புழு, எலி முதலியவற்றிற்கு இரையாகும். முற்கூறிய தேவாரத் திருமுறையேடு பரிபாலிப்பாரின்றி

அறையில் சேமித்து வைக்கப்பட்டிருந்ததால் கறையான் புற்றால் மூடப்பட்டிருந்தது. அதனைக் கண்ட அரசன் கவலையுற்றாயினும் சுவடியிலிருந்து புற்று மலையை நீக்கச் செய்தான். ஏடு நிறைய எண்ணெயை ஊற்றி ஒவ்வொரு இதழாக எடுத்தான்.

பல ஏடுகள் சிதைந்திருந்தன; சிலவே கிடைத்தன. அதனாலே அரசன் மனம் நொந்தான். 'சிவனே சிவனே' என்று ஓலமிட்டான்; கண்ணீர் மிகச் சொரிந்தான்; மற்றென் செய்வான். அச்சமயத்தில், 'அரசனே! இக்காலத்துக்கு வேண்டிய பதிகங்களை வைத்துவிட்டு மற்றவற்றை மண்மூடச் செய்தோம்' என்று ஓர் ஆகாயவாணி உண்டாயிற்று. உள்ளதைக்கொண்டு தானே உள்ளம் மகிழவேண்டும். அந்த மட்டிலே பதிகங்கள் கிடைத்தமைக்கு மனமகிழ்ச்சி யடைந்தான் காவலன். ஆடினான்; பாடினான். அவனுக்குண்டாய மனத் துன்பங்கள் யாவும் நீங்கின; எந்நாளும் நிறைந்த வாழ்வைக் கொடுக்கும் அமுதத்தை யுண்டவன்போல நெஞ்சம் தேறினான். எம்பெருமானது திருவடிகளிலே வீழ்ந்தான்; எழுந்து தனக்கு உண்டாய மனமகிழச்சிக்கு அறிகுறியாகத் தனது பொக்கிஷசாலையைத் திறந்துவிட்டுச் சிவனடியார்களைக் கூவி அவர்கள் வேண்டுமட்டும் எடுத்துச் செல்லும்படி வேண்டிக் கொண்டான்' என்று திருமுறைகண்ட புராணம் கூறும்.

## 4. திருமுறைவகுப்பு

மேற்கூறியவாறு ஆங்குக் கண்ட திருவேடுகளையெல்லாம் எடுத்துச் சேர்த்துப் படிக்கும்போது சில பாடல்களில் சில அடிகள் குறைவாயும், சில அரைவரி யுடையனவாயுமிருந்தன. ஒவ்வொரு பதிகத்திலும் பல பாடல்கள் காணப்படவில்லை. இவற்றுள் காழிவேந்தர் பதிகங்கள்

அதிகமாகவும், திருநாவுக்கரையர் பதிகங்கள் அதனைவிடச் சிறிது குறைவாகவும் கிடைத்தன. நம்பியாரூரர் பதிகமோ சிலவே கிடைத்தன. ஞானவமுதுண்டார் பதிகங்கள் 11 பாக்களாலானவை. அப்பர் சுவாமிகளது பதிகங்கள் பத்துப்பாக்கள் கொண்டு நடப்பன. சுந்தரமூர்த்தியினது செய்யுள் பத்துக் கொண்டனவேயாயினும் இவரது பத்தாவது செய்யுளும் சம்பந்தர் தேவாரத்தில் 11-வது செய்யுளும் அவரவர் பெயர் தாங்கி நிற்பன. இவற்றை அரசன் முற்காலத்தில் வகுத்திருந்ததாகத் தன் ஆராய்ச்சியாற் கண்டபடி வகுக்க எண்ணினான். மந்திரங்கள் ஏழு என்பதைக் கண்டான். ஆளுடைய பிள்ளையாருடைய முந்நூற்றெண்பத்து நான்கு பதிகங்களும் மூன்று திருமுறைகளாக வகுக்கப்பட்டன. ஆளுடைய அரசின் பதிகங்கள் முந்நூற்று இருபத்து ஒன்றே கிடைத்தன. அவையும் மூன்று திருமுறைகளாக வகுக்கப்பட்டன. ஆளுடைய நம்பியினது பதிகங்கள் நூறே கிடைத்தன. அவை ஒரு திருமுறையாக வகுக்கப்பட்டன. ஆகவே ஏழு கோடிகளையுடைய மந்திரங்களை யொப்ப இந்தத் திருமுறைகளும் ஏழாக வகுக்கப்பட்டன.

இவ்வாறு அரிதின் முயன்று தேடியெடுத்த திருமுறைகளைப் பாடும்வகை தெரியாது அரசர் முதலாயினோர் திகைத்தனர். திருஞானசம்பந்தப் பெருமானோடு தலயாத்திரை செய்து அவர் பாடிய செய்யுட்களை யாழிலமைத்துப் பாடிய திருநீலகண்ட யாழ்ப்பாணர் வமிசத்தில் எவரேனும் உளரோ என விசாரிக்கத் தொடங்கினர். இந்தத் தமிழகத்திலே ஒவ்வொரு தொழிலும் பாரம்பரியமாய் வருவது வழக்கம். பாட்டன் செய்த வேலையையே தகப்பனும் மகனும் செய்து வருவார்களேயன்றி வேறு தொழிலுட்புகார். ஆகலே அவ்வழியை விசாரிப்பது அவசியமாயிற்று. விசாரித்தகாலை திருஎருக்கத்தம் புலியூரிலே திருநீலகண்ட யாழ்ப்பாணர் மரபிலே வந்த பெண்

ளொருத்தி யிருக்கின்றாளென்றும், அவளுக்கு இப்பாடல்களுட் சில பண், இசையொடு ஓதவரும் என்றும் அரசன் அறிந்தான். உடனே அவளைச் சிதம்பரம் அழைத்து வந்து சிற்சபேசன் திருமுன்னர்தேவாரங்களைப் பாடும்படி செய்தான். அவள் பாடியவை ஆனந்தத்தை யுண்டாக்கின

இசைவல்லாரைக் கொண்டு தேவாரப் பாடல்கட்குக் கட்டளைகள் வகுக்கப்பட்டன. இத்துணை எழுத்துக்களை கொண்டது இன்னபண் எனவும், ஒவ்வொரு பண்ணும் இத்துணைக் கட்டளைகளுடையது எனவும் நிச்சயித்தனர்[1]. அதன்படி இசை வகுக்கப்பட்ட பின்னர், பலரும் படியெடுத்துக் கொண்டனர்.

ஊர்கடோறும், கோயில்தோறும் இத்தேவாரப் பதிகங்கள் பரவின. அவற்றை அங்கங்கே வைத்துக் காப்பாற்ற மக்கள் நிலபலங்கள் விட்டனர்[2]; சில ஊர்களில் கோயில் மதில்களிலும் செதுக்கினர்[3]. இவ்வாறாக இத்திருமுறைகள் பெருகத் தலைப்பட்டன. இத்தேவாரத் திருமுறைகளைச் செவ்வையாக வாசித்தும் அதன் பொருள்களையுள்ளபடி யறிந்தும் தாம் முன்னர் பொல்லாப் பிள்ளையாரது திருவருளாற் பெற்ற உணர்ச்சியுங் கொண்டு நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டர் திருவந்தாதி என்ற நூலையுஞ் செய்தார். இவருக்குத் தேவார ஆராய்ச்சி முதிரமுதிர திருஞான சம்பந்தப் பெருமான்மேல்

---

[1] அவற்றை விவரமாகச் சொல்வார் இக்காலத்து அரியர். விசாரித்தல் நலம்.

[2] இரண்டாங் குலோத்துங்கன் காலத்திலே சீர்காழி திருஞானசம்பந்த ராலயம் விசாரணைக்கருத்தர் கிராமகாரியம் செய்பவர்களிடம் தேவார ஏடுகளைப் பார்த்துப் புதுப்பிக்கவேண்டியவற்றைப் புதுப்பிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டதாக சீர்காழிக் கல்வெட்டு ஒன்று (1918-ஆம் ஆண்டு நெ. 381) கூறுகிறது.

[3] திருவிடைவாய்த் தேவாரக் கல்வெட்டு. செந்தமிழ், தொகுதி 17.

விருப்பம் அதிகமாயிற்று. அது காரணமாக அவர்மீது பல செய்யுள் நூல்களை யாத்தார். ஆளுடைய அரசான திருநாவுக்கரையர் பேரிலும் ஒருநூல் செய்தார். இவ்வாறு மனத்தினுலும் வாக்கினுலும் காயத்தினுலும் பலவகையில் சிவத்தொண்டே செய்துகொண்டிருந்து கருணையந்தடங் கடலாகிய சிவபெருமானது திருவடி நீழலை யடைந்தார்.

---

## 5. நம்பியின் நூல்கள்

பதினொராந் திருமுறையிலே இவர் பாடியனவாகச் சொல்லப்பட்ட திருத்தொண்டர் திருவந்தாதியைத் தவிர, 1 விநாயகர் திருஇரட்டைமணிமாலை, 2 கோயிற்றிருப் பண்ணியர் விருத்தம், 3 திருச்சண்பை விருத்தம், 4 திரு மும்மணிக்கோவை, 5 திருவுலாமாலை, 6 திருக்கலம்பகம், 7 திருத்தொகை, 8 திருநாவுக்கரசர் திருஏகாதசமாலை என்ற நூல்கள் காணப்படுகின்றன. அவற்றைப்பற்றிச் சுருக்கமாக ஈண்டு வரைவாம்.

**திருத்தொண்டர் திருவந்தாதி**

மன்னன் நம்பியை நாயன்மாரது சரித்திரத்தைச் சுருக்கமாகக் கூறும்படி வேண்டிக்கொண்டான் என்று திருமுறை கண்டபுராணங் கூறும். அதற்கிசைய நம்பியும் அறுபான்மும்மை நாயன்மார் மேலும், தொகையடியாரான ஒன்பதின்மர் மேலும் கலித்துறையில் அந்தாதித் தொடையாக, காப்பு நீங்கலாக 86 பாக்கள் கொண்ட நூல் ஒன்று இயற்றியுள்ளார். அதற்குத் திருத்தொண்டர் திருவந்தாதி யென்று பெயர். **நம்பியாண்டார் நம்பி திருவந்தாதி** என்றுஞ் சொல்வர். இந்நூலில் சுந்தரர்மேல் 11 பாகங்களும், சம்பந்தர், அப்பர், சேரமான், கோச்செங்கண்ணுன் இவர்கள் ஒவ்வொருவர் மேலும் இரண்டிரண்டு பாக்களும், மற்றைய 58 நாயன்

மார்கள்மேல் 58 பாக்களும் காணப்படுகின்றன. இவர் தம்மைப் பெருமைப்படுத்திய அரசனை இந்நூலில் 50, 65, 82 ஆகிய மூன்று செய்யுட்களில் சிறப்பித்துப் பாடியுள்ளார். இதன் விரிவு காலப்பகுதியிற் காண்க. பாக்களில் ஒவ்வொருவருடைய பெயரும் தெரிந்தவரையில் குலமும், ஊரும், அவரவர் செய்த அரிய செயல்களும் காணப்படும். இவர் சம்பந்தர்மேற் பாடிய 34-வது பாவிலே அவர் மேல் தான் ஒரு அந்தாதி பாடியதாகக் கூறுகின்றார்.

**விநாயகர் இரட்டை மணிமாலை**

இரட்டைமணிமாலை யென்பது வெண்பாவும் விருத்தமும் மாறிமாறி வரும்படி அந்தாதித் தொடையாகப் பாடப்படும் இருபது பாக்கள் கொண்ட ஒரு சிறுநூல். இது நம்பியினது வழிபடு கடவுளாகிய திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையாரின்மேல் பாடப்பட்டது. பாக்களில் இது பொழுது வழக்கிலில்லாத படுகர், கூசாரம் போன்ற சில அரிய சொற்களும் காணப்படுகின்றன. சிவபெருமான் தன் கையில் கனியொன்றை வைத்துக்கொண்டு கணபதியையும் குமரவேளையும் அழைத்து இவ்வுலகத்தைச் சுற்றிக்கொண்டு முதலில் தன்னிடம் வருபவர்களுக்கு அக் கனியைக் கொடுப்பதாகச் சொல்ல, குகப்பிரான் மயிலில் ஏறிச் சென்றதாகவும், விநாயகர் சிவபெருமானையும் உமையம்மையாரையும் சுற்றி வந்ததாகவும், அதற்கு அத்திமுகனைச் சிவபெருமான் மெச்சிக் கனிகொடுத்ததாகவும் ஒரு கதையுண்டு. அக்கதையினை நம்பி 3, 8 என்ற பாடல்களில் அமைத்துள்ளார். 13-ல் இவர் பிள்ளையார்மேல் வெண்பா ஒன்று பாடியதாகக் கூறுகின்றார். இது பதினோராந் திருமுறையிற் சேர்க்கப்படவுமில்லை; இதனைப்பற்றிய குறிப்பொன்றும் இப்பொழுதறிவதற்கு மில்லை.

திருப்பண்ணியர் விருத்தம் சிதம்பரத்தின்கண்ணே கோயில்கொண்டிருக்கும் கூத்துகந்த பெம்மான்மீது

பாடப்பட்ட 70 செய்யுட்கள் கொண்டதொரு நூல்.

**கோயில் திருப்பண்ணியர் விருத்தம்**

தொண்ணுற்ருறுவகைப் பிரபந்தங்களுள் ஒன்று. திருவை நமக்குச் செய்கின்றவராக வைத்துச் சிவபெருமானைப் பாடியது. இதனை, 'பொன்றலில்லாவச் செல்வமெய்திட வேண்டுதியேல்' என்ற 70-வது செய்யுளடி விளக்கும். இந்நூலில் கண்ணப்பர் செய்கையை 20, 40-வது செய்யுட்களிலும், சாக்கிய நாயனரது அன்பை 32, 68-வது செய்யுட்களிலும், அதிபத்தரைப்பற்றிய செய்தியை 40-வது செய்யுளிலும், திருநாவுக்கரையர் தம் தலையால் நடந்து கைலைமலையடைந்த கதையை 45-வது செய்யுளிலும், ஏயர்கோன் கலிக்காமநாயனர் திருப்புன்கூர்நாதனைப் பிரார்த்திக்க மழைபெய்ததும், பெய்தமழை அதிகமாகிவிட அதைத் தவிர்க்க வேண்டியபடி தவிர்த்ததும், அதற்காக ஈராறு வேலி விளைவயல் விட்டதுமான கதையை 54-வது செய்யுளிலும், திருச்சிற்றம்பலக் கோவையைச் செய்தவன் திருவாதவூர்ச் சிவபாத்தியன் என்பதை 58-வது செய்யுளிலும், வரகுணன் என்பவன் சிவபெருமானிடத்து அன்புடையனுகிப் போருக்குவந்த பகைவனையும் நோக்காது சிவபக்தியில் மூழ்கியிருக்கப் பகைவன் தோற்ருன் என்ற கதையை 62-வடி செய்யுளிலும் அமைத்துப் பாடியுள்ளார். புராண கதைகளிற் பலவுமுண்டு. 57-வது செய்யுளில் கண்ட 'சிவபாத்தியன்' என்பதற்குச் 'சிவனடியான்' என ஒரு சிலர் உரை காண்பர். இச்செய்யுளை ஆதாரமாகக்கொண்டும், மற்றும் வேறு காரணங்களைக்கொண்டும் திருக்கோவையார் மாணிக்க வாசகர் செய்த நூலல்ல வென்று, சிந்திக்கத்தக்கதொரு கூற்றை வெளியிடுவர் ஒரு சாரார். சேந்தனர் அவிழ்கொடுத்த கதை 26-வது செய்யுளில் காணப்படுகின்றது. அங்ஙனமாயின் திருவெண்காடரது அமைச்சரான சேந்தனரும் இவரும் ஒருவரோ வேருே என்பது ஆராயத்தகுந்தது.

அப்பர் சுவாமிகளை ஆளுடைய அரசு என்றும், சம்பந்தப் பெருமானை ஆளுடைய பிள்ளையென்றும் சுந்தரரை ஆளுடைய நம்பியென்றுங் மாணிக்கவாசகரை ஆளுடைய அடிகளென்றும் கூறுதல் மரபு. அதனால் நம்பியாண்டார் நம்பிகள், ஞானசம்பந்தப் பெருமான்மேல் பாடிய அந்தாதிக்கு ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி எனப் பேரிட்டார். இவ்வந்தாதி பாடியதைத் திருத்தொண்டர் திருவந்தாதியில் சம்பந்தரைப்பற்றிக் கூறுங்கால் 'அடியேன் கொடுத்த அந்தாதி கொண்டபிரான்' என்று பெருமிதத்தோடு கூறுகின்றார். இது கலித்துறையென்ற பாவினத்தாலாகிய நூறுசெய்யுள் கொண்டதொரு நூல். சம்பந்தப்

**ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி**

பெருமான் ஞானப்பாலுண்டதை 73-வது செய்யுளிலும், தன்னைப் பெற்றோர் பால்கொடுத்தது யார் என்று வினவியபோதுஇப்பெருமாட்டியென்று சுட்டிக்காட்டியசெய்தியை 13, 16, 93-வது செய்யுள்களிலும், திருநனிபள்ளி என்ற திருப்பதி பாலையாக இருந்ததை நெய்தலாகப் பாடிய செய்தியை 17-வது பாட்டிலும், திருக்கோலக்காவில் தாளம் பெற்ற கதையை 40, 82-லும், அரத்துறையில் சிவிகை பெற்றதை 40, 83-லும், திருநீலகண்டருக்காக யாழ்முறி பாடியதை 39-லும், தன் தாதை வேள்வி வேட்டற்பொருட்டுப் பொருள் வேண்டுமெனச்சொல்ல, திருவாவடுதுறையிலே எழுந்தருளிய சிவ பெருமானைப் பாடிப் பொற்கிழி பெற்ற செய்தியை 40, 85-லும், அரவு கடித்த செட்டியை விடம் நீங்கி உயிர்பெறச்செய்த கதையை 49-லும், பஞ்சத்தால் வாடிய மன்னுயிரையும், தனது பரிசனங்களையும் காப்பாற்றுவதற்காகக் காசுபெற்ற கதையை 41, 80-லும், நீலநக்கர், முருகரை 71-வது செய்யுளிலும், சிறுத்தொண்டரது அருஞ் செய்கையை 72-வது பாட்டிலும், திருமறைக்காடென்னும் வேதாரண்யத்திலே

திலே வேதங்கள் கடவுளைப் பூசித்து அடைத்த கதவினைத் திறக்கவும், அடைக்கவும் பாடிய செய்தியை 91-வது செய்யுளிலும், மதுரையம்பதி சென்று சமணரை வாதில்வென்று கழுவேற்றின கதையை 66, 81, 94 முதலிய செய்யுள்களிலும், கொங்குநாடு சென்றபோது தன் பரிசனர் பனி நோயால் வருந்திய செய்தியை 67-லும், இந்நூல் தாம் பாடியதென்ற செய்தியை 99-வது செய்யுளிலும், சம்பந்தப் பெருமான் பதினாயிரம் பாடல் பாடினாரென்பதை 15-வது செய்யுளிலும் கூறுகின்றார். பலபாக்களில் [1] திருஞான சம்பந்தப் பெருமானைப் பெருமிதத்தோடு கூறுகின்றார். நம்பி இப்பெருமானது அடித்தொண்டரென்பதை இவ்வந்தாதியில் பலவிடத்தும் கூறியுள்ளார். இவ்வளவு பெருமை வாய்ந்த நூலுள் சில பாடல்களிற் சில வரிகள் காணப்படாமை பெரிதும் வருந்தத்தக்கது. இந்நம்பியின் நூல்களைச் செவ்வனே ஆராய்ச்சி செய்து வெளியிடவேண்டியது சைவ நன்மக்கள் முதற் கடனாகும்.

இதனையடுத்துக் காணப்படுவது திருச்சண்பை விருத்தம் என்ற நூல். சண்பை யென்பது சீர்காழியினுடைய பன்னிரு பெயர்களிலொன்று. சண்பை விருத்தம் எனப் பெயர் காணப்படினும் இது ஆளுடைய பிள்ளையாரின் அருஞ்செய்கைகளைக் கூறுவது. சமணரை வென்றது

**ஆளுடைய பிள்ளையார் திருச்சண்பை விருத்தம்**

முதற்செய்யுளிலும், தலைமயிர் கூட ஒன்றுகூடாப் பருவத்திலே எம்பெருமாட்டி யருள்பெற்ற கதை இரண்டாவது செய்யுளிலும், திருமருகலில் விடம் தீர்த்த கதை 3-வது செய்யுளிலும், நனிபள்ளித் திருப்பதியை நெய்தலாக்கிய கதை 4-லும், தமிழ் நாட்டினர் உய்யத் தமிழ் மறையைப் பாடியது 5, 6-லும், சிறப்பாகவைத்தும், மற்றவைகளைப் பொதுவாகவைத்தும்

[1] 20, 21, 37, 84.

பாடியுள்ளார். இந்நூலில் திருநணிபள்ளிப் பாலை நிலத்தை நெய்தலாகும்படி பாடியதாக 4-வது விருத்தம்கூற, ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி 17-வது செய்யுளில் நணிபள்ளி சூழ்கரை முதலிற் கானகமாக்கிப் பின் வயல்சூழ்ந்த மருதமாக்கியதாகக் காணப்படுகின்றது. சம்பந்தப்பெருமான் பாடிய தேவாரத்தில் இதற்கு ஆதாரமில்லை.

மும்மணிக்கோவை யென்பதும், தொண்ணூற்றுறு வகைப் பிரபந்தங்களில் ஒன்று.

'வெண்பாக் கலித்துறை யகவலந் தாதிப்
பண்பான் முப்பது பகரின் மும்மணி
மாலை யென்று வகுத்தனர் புலவர்'

என்பது மும்மணிக் கோவையின் இலக்கணம். இதனில் ஆசிரியப்பா வெண்பா கலித்துறை யென்ற முறையாகச் செய்யுள் யாக்கப்பட்டிருக்கின்றது. முதலாவது செய்யுளில் பிள்ளையாரைச் சிவபெருமான் உமாதேவியாரது புதல் வனுக் கொண்டிருப்பது உபசார வழக்கு என்று கொள்ளவேண்டும். நாலாவது செய்யுள் சம்பந்தப் பெருமானுடைய திருவிளையாடல்களைத் தொகுத்துக் கூறுவது படித்து பெரிதும் மகிழ்தற்குரியது. பத்தொன்பதாவது செய்யுளில் அப்பொருளை யமைத்ததோடு கூறிய உவமைகள் வியக்கத்தக்கன. இன்னும் இவை போன்றன சில.

ஆளுடைய பிள்ளையார் மும்மணிக் கோவை.

இதனை யடுத்திருப்பது சம்பந்தப்பெருமான் மேற் பாடிய திருவுலா மாலை. இதுவும் பிரபந்த வகையினுள் தனி நிலைச் செய்யுளின்பாற் பட்டது. 'இளமைப் பருவமுற்ற தலைவனைக் குலத்தானுங் குடிப்பிறப்பானும் மங்கலங்களானும் இன்னுனென்பது தோன்றக்கூறி, அணிகலன்களான் அலங்கரித்துக்கொண்டு எழுவகைப் பருவ

**ஆளுடைய பிள்ளையார் திருவுலா மாலை.**

மாதர் நெருங்கிய அழகிய வீதியிடத்து அன்னோன் பவனி வரப் பேதை முதலிய ஏழ் பருவமானார் கண்டு தொழ உலாவந்தது உலா' என்பது இலக்கணம். இரண்டடிகளை ஒரு கண்ணி யென்பர். இந்நூல் நூற்று நாற்பத்து மூன்று கண்ணிகளை யுடையது. பேதை முதலாய ஏழு பருவங்களுமின்றி, தலைமகனது பெருமையைக் கூறி நிறுத்தப்பட்டுள்ளது.

**ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம்**

இதனையடுத்துள்ளது ஆறாவதான ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம், இதுவும் பிரபந்த வகையினுட்பட்டதே. பலவகைப்பாவும், பாவினமும், சிந்து, குறம் முதலான உறுப்புக்களும் வரப்பாடப்படுவது. பொதுவாக 100 செய்யுள்கள் கொண்டதாயிருக்கும்; ஆனால் இது 49 செய்யுள்களே கொண்டது.

**ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை.**

இதனையடுத்துக் காணப்படுவது ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை. இது அறுபத்தைந்துவரிகளை யுடையது. இது முதலில் கலிவெண்பாட்டாகச் சென்று இறுதியில் அகவல் போன்று முடிவது. சம்பந்தர் செய்ததாகக் காணப்படும் அற்புதச் செய்கைகளனைத்தையும் சுருக்கிக் கூறுவது.

**திருநாவுக்கரையர் திரு ஏகாதச மாலை.**

இதனை யடுத்துக் காணப்படுவது, திருநாவுக்கரசு தேவர் திரு ஏகாதச மாலை. இது பதினொரு விருத்தங்களாற் செய்யப்பட்டது. அப்பரடிகளது சரித முழுவதும் காணப்படுகின்றது. 3-வது செய்யுளில் அடிகள் எழுநூறு அரும்பதிகங்கள் ஓதியதாகக் காணப்படுகின்றது. திருநின்றியூர்த் தேவாரத்திலே சுந்தரர் 'இணைகொளேழெழுநூறிருபனுவலீன்றவன்

திருநாவினுக்கரையன்' என்று பாடியிருப்பது சிந்தனைக் குரியது. இவ்வளவே நம்பியால் இயற்றப்பட்டனவாகக் காணப்படும் நூல்கள்*.

---

## 6. காலம்

தேவாரத் திருமுறைகளைத் தமது வழிபடு கடவுளான பொல்லாப் பிள்ளையாரருள் கொண்டு இருக்குமிடம் இஃதெனச் சொல்லியவர் நம்பியாண்டார் நம்பி என்பது முன்னூர்க் கூறினேம். கி. பி. 1070 முதல் 1118 வரை அரசாண்ட முதற் குலோத்துங்கன் காலத்தவரென்று சிலரும், 907 முதல் 947 வரை அரசாண்ட பராந்தகன் காலத்தவரென்று ஒரு சிலரும், இராஜராஜ அபயகுலசேகர மன்னனென்று திருமுறைகண்டபுராணத்திற் கூறப்படுதலால் கி. பி. 985 முதல் 1012 வரை அரசாண்ட கீர்த்திவாய்ந்த முதலாம் இராசராசன் காலத்தவர் என்று ஒரு சிலரும் கூறுவர். இவ்வாறு பலதிறப்படக் கூறுவராயினும், ஒருவராவது அவரவர் கொண்ட கொள்கைக்கு உற்ற சாதனங்கள் இவையென்று கூறவில்லை. அவைகளைத் திட்டமாகக் காணவேண்டியது அவசியமாகின்றது.

நம்பியின் புகழ் அழியாது என்றென்றும் நின்று நிலவுதற்குக் காரணமாயிருப்பது அவர் சைவத்திருமுறைகளைக் கண்டெடுத்ததுவேயாகும். இந்த வரலாற்றைக் கூறும் பாகத்துக்குத் திருமுறை கண்ட புராணம் என்று பெயர். அதன் முதற் செய்யுளிலே,

---

* வெகு பழைமையுடையதான சங்கநூல்களும் அகப்படும் இக்காலத்தில் ஆயிரமாண்டுகட்கு முன் வாழ்ந்த ஒரு பெரியார் இயற்றிய நூல்கள் தகுதிபெற அச்சிடப்படாதது வருந்தத்தக்கது. அவற்றைத் தேடி யெடுத்துத் தகுதிபெற அச்சிடவேண்டுவது சைவர் முதற்கடமையாகும்.

உலகமகிழ் தருசைய மீதுதோன்றி
யோவாது வருபொன்னி சூழ்சோ ணாட்டின்
திலகமென விளங்குமணி மாடவாரூர்த்
தியாகேசர் பதம்பணிந்து செங்கோ லோச்சி
யலகில்புகழ் பெறுராச ராசமன்னன்
அபயகுல சேகரன்பா லெய்து மன்பர்
இலகுமொரு மூவருள் பதிக மொன்றுன்
றேயினிதி னுரைசெய்ய அன்பாற் கேட்டு

என்று காணப்படுகின்றது.

பின்னர், அரசன் கையிரண்டும் உச்சிமேலேறக் கண்ணீர் கரைந்தோட மெய்முழுதும் புளகம் போர்ப்ப ஐயன் மலர்ப்பாதம் உளத்தேகொண்டு போற்றுதற்கரிய திருமுறை தேட, எங்கும் அகப்படாமையினுலே நைந்து வருந்தினுன். இவ்வாறு வருந்திக் கொண்டிருக்கையில், திருநாரையூரில் நம்பியாண்டாரின் அருஞ் செயல் அரசனுடைய காதுக் கெட்டியது. இவராலே தனது எண்ணம் நிறைவேறலாமென்றெண்ணி 'மல்லன்மிகு சேனையுடன் இராசராச மன்னவனும் அந்நகரில் வந்து சேர்ந்தான்'. வந்து தனது குறையை அவரிடம் தெரிவிக்க, பிள்ளையாரருள் கொண்டு நம்பியும் திருமுறைகள் சிற்சபேசன் ஆநந்தத் தாண்டவம் செய்யும் பொன்னம்பலத்தின் மேல் புறமுள்ளதென்று கூற, அதன்படியே திருமுறையும் கண்டுபிடிக்கப்பட்டது என்று முன்னர்க் கூறியுள்ளோம். இதனுலே நம்பியாண்டார் நம்பி காலத்திருந்த மன்னவனுக்கு இராசராசன் என்றும், அபயன் என்றும், குலசேகரன் என்றும் பெயர் வழங்கி வந்ததெனக் கூறலாம்.

நம்பியாண்டார் நம்பி தாமியற்றிய திருத்தொண்டர் திருவந்தாதியிலே,

புலமன் னியமன்னைச் சிங்களநாடு பொடிபடுத்த
குலமன் னியபுகழ்க் கோகன நாதன் குலமுதலோன்

நலமன் னியபுகழ்ச் சோழனை தென்பர் நகுசுடர்வாள்
வலமன் னியவெறி பத்தனுக் கீந்தவொர் வண்புகழே. 50

சிங்கத் துருவனைச் செற்றவன் சிற்றம் பலமுகடு
கொங்கிற் கனக மணிந்தவா தித்தன் குலமுதலோன்
திங்கட் சடையர் தமரவென் செல்வ மெனப்பறைபோக்
கெங்கட் கிறைவ னிருக்குவே ளூர்மன் னிடங்கழியே. 65

செம்பொ னணிந்துசிற் றம்பலந் தேசிவ லோகமெய்தி
நம்பன் கழற்கீ ழிருந்தோன் குலமுத லென்பர் நல்ல
வம்பு மலர்த்தில்லை யீசனைச் சூழ மறை வளர்த்தான்
நம்ப னறுந்தொங்கற் கோச்செங்க ணானெனு நித்தனையே. 82

என மூன்று செய்யுட்கள் காணப்படுகின்றன. இவற்றுள் முதலாவது செய்யுளுள்ளே கோகனநாதனை (சூரியனது மறு பெயரான) ஆதித்தன் வேற்றுப் புலஞ்சென்றும் சிங்கள நாட்டைப் பாழ்படுத்தியும் வந்ததோடு தன் குலத்தையும் மேலாகச் செய்தான் என்பதொரு செய்தி பெறுகின்றோம். இரண்டாவது செய்யுளுள்ளே கோகனநாதன் ஆதித்தன் என்று அறிவதோடு நரசிங்காவதாரமெடுத்த திருமாலைச் செற்றவனாகிய நடராசப் பெருமானது சிற்றம்பலத்தின் மேற்பரப்பைக் கொங்கு தேசத்துப் பொன்னால் அணிந்தவன் என்றும் அறிகின்றோம். மேற்கூறப்பட்ட மூன்றாவது செய்யுளிலே சிற்றம்பலத்தைச் செம்பொன் வேய்ந்த செய்தி உறுதி பெறுவதோடு, செம்பொன் அணிந்த அரசன் சிவபெருமானது திருவடிநிழலை யடைந்து விட்டானென்ற செய்தியும் கிடைக்கின்றது. புலவராயுள்ளார் ஒரு நூல் செய்கின்ற காலத்துத் தம்மை யாதரித்தவனைத் தமது நூலில் இடையிடையே புகழ்ந்து கூறுதல் கவிமரபு என்பர். நமது நம்பியும் இதற்கு விலக்கு ஆகாதவரேயாம். ஆதலால் நம்பியாண்டார் நம்பியை யாதரித்த அரசன் ஆதித்தன் என்றும், அவன் சோழவரச

னென்றும், இருக்கு வேளூரிலிருந்த அரச பரம்பரையைச் சார்ந்தவனென்றும் அறிகின்றோம். ஆயினும் திருமுறைகண்ட புராணத்திலே இராசராசன், அபய குலசேகரன் என்று சொல்லியிருக்க, ஈண்டு, ஆதித்தனென்று காணப்படுவதால் இவன் வேறு அவன் வேறு எனக் கூறலாம்; ஒரே அரசனுக்குப் பல பெயரிருத்தலின் இவன் வேறெனக் கொள்ளலாகாது எனவும் கூடும். ஆகவே நம்பியாண்டார் நம்பி காலத்து அரசன் பெயர்,

1. ஆதித்தனென்றிருக்கவேண்டும்.
2. அவனுக்கே இராசராசன், அபயன், குலசேகரன் என்ற பட்டங்களோ வேறு பெயர்களோ இருக்க வேண்டும்.
3. அவன் சிங்களநாட்டை அழித்தவனாக இருக்க வேண்டும்.
4. பொன்னம்பலத்தைப் பொன் வேய்ந்தவனாக இருக்கவேண்டும்.
5. இவர் காலத்திலேயே அவன் சிவபெருமானது திருவடி நீழலை அடைந்திருக்கவேண்டும்.
6. சோழபரம்பரையினாய் இருக்குவேளூர்த் தலைவர்களோடு உறவுடையவனாக இருக்கவேண்டும்.

இந்த ஆறு விடயங்களிலும் ஒற்றுமையுடையவனே இவர் காலத் தரசனாவான்.

முதலில் ஆறாவதான சோழபரம்பரையையும் இருக்கு வேளூரையும் ஆராய்வோம். இடங்கழிநாயனார் புராணத் திலே,

எழுந்திரைமாகடலாடையிருநிலமாமகண்மார்பில்
அழுந்துபடவெழுதுமிலைத்தொழிற்றொய்யிலணியினவாஞ்
செழுந்தளிரின்புடைமறைந்தபெடைகளிப்பத்தேமாவின்
கொழுந்துணர்கோதிக்கொண்டுகுயிலாலுங்கோனாடு  1

முருகுறுசெங்கமலமதுமலர்துதைந்தமொய்யளிகள்
பருகுறுந்தெண்டிரைவாவிப்பயில்பெடையோடிரையருந்தி
வருகுறுதண்டுளிவாடைமறையமாதவிச்சூழற்
குருகுறங்குங்கோனாட்டுக்கொடிநகரங்கொடும்பாளூர். 2

அந்நகரத்தினிலிருக்கும்வேளிர்குலத்தரசளித்து
மன்னியபொன்னம்பலத்துமணிமுகட்டிற்பாக்கொங்கிற்
பன்னுதுலைப்பசும்பொன்றற்பயில்பிழம்பர்மிசையணிந்த
பொன்னெடுந்தோளாதித்தன்புகழ்மரபிற்குடிமுதலோர் 3

என்று பாக்கள் காணப்படுகின்றன. முதற்பாட்டினால் சோனாடு என்று ஒருநாடு உண்டென்றும், இரண்டாம் பாட்டினால் அந்நாட்டிற்குக் கொடும்பாளூர் என்பது தலைநக ரென்றும், மூன்றாம் பாட்டினால் அதனை ஆண்டவர் வேளிர்களென்றும், அந்தக் கொடியைச் சார்ந்தவனே ஆதித்தன் என்றும் இவர்கள் சோழர்களெனப் பெயர் பெறுவரென்றும் அறிந்துகொள்ளும்படி சேக்கிழார் சுவாமி கள் கூறுகின்றார்கள். இதற்கு அக்காலத்திலே வேறு ஆதாரங்கள் இருந்தனவாவென ஆராய்வோமாயின் அந் நாட்டுக்குக் கடல்கடவாது இலங்கைகொண்ட சோழவள நாடான கோநாடு என்று தெரிகிறது.[1] பல்லவ வம்சத்தி னுகக் கருதப்படும் கம்பவர்மன்[2] காலத்திற் கோனாட் டுக் கொடும்பாளூர் விடேல்விடுகு இளங்கோ வேளார் மனைவி பூதி அரிஞ்சிகைப் பிராட்டியார் திருஓற்றி

[1] 1907-ம் ஆண்டு 137-ம் கல்வெட்டு.

[2] இந்தக் கம்பவர்மனுடைய ஆட்சிக்காலத்திற் சடையன் என் னும் வள்ளல்கள் ஆயிரக்காடிநெல் கொடுத்ததாக ஒரு கல்வெட்டும், ஒரு சமயம் ஐஞ்ஞூறுகாடிநெல் கொடுத்ததாக மற்றொரு கல்வெட் டும் கூறும். இவனைப்பற்றி மதுராந்தக உத்தம சோழனது செப்புப் பட்டய மொன்றிலும் கூறப்பட்டிருக்கிறது. S. I. I. III: தொகுதி பார்க்க.

யூர்ப் படம்பக்கநாதர் கோயிலுக்கு 207 கழஞ்சு பொன் நிவந்தமாக வைத்தாள். விடேல்விடுகு என்பது பல்லவ அரசர்களுடைய பட்டப்பெயர். அரசனது பட்டத்தைச் சேனபதி, சாமந்தர், வேளிர்கள் கொள்ளுவது அந்நாள் வழக்கம். அந்த வழக்கப்படி இப்பெயர் இவர்கட்கு வந்திருக்க வேண்டும். இவ் விடேல்விடுகு பல்லவ அரசர்களோடு உறவுடையவனுகவோ, சம அந்தஸ்து உடையவனுகவோ இருந்தாலன்றி விடேல்விடுகு என்ற பல்லவனது பட்டப்பெயரைத் தரித்திருக்கமாட்டான்.

இராஜகேசரிவர்மனுன சுந்தரசோழ பராந்தகனுடைய மூன்றுமாண்டில் திருமலாபுரம் என்ற ஊரிலுள்ள நாயனுர்க்கு வீரசோழ இளங்கோவேளார் மகன் ஆதித்தன் என்ற பெயருடைய மதுராந்தகன் அச்சபிடாரன் சில நிலங்கள் விட்டான்[3]. இச்சுந்தரசோழன் காலத்திற்பராந்தகன் சிறிய வேளார் இருங்கோ வேளார் என்பவன் திருவியலூர்ச் சிவயோகநாத சுவாமிக்குச் சில தானம் வழங்கினுன்[4]. இவன் திருக்குடித் திட்டையிற் சில நிலம் விட்டான்[5]. இவனே சிங்களச்சண்டைக்குச் சென்று அங்கேயே உயிர்துறந்தவன்[6]. இவனுடைய சகோதரி பூதி ஆதிச்சப்பிடாரி என்பவள் சுந்தரசோழனுடைய மனைவிகளில் ஒருத்தி, முதலாம் பராந்தகனது பிள்ளைகளில் ஒருவனுன

[3] 306 of 06. [4] 317 of 07. [5] 286 of 11. [7] Epigraphist's Report for 09—10, P.89 இந்த வமிசாவளி வருமாறு :-

பரதுக்கமர்த்தனன் [வாதாபி கொண்டவன்]
|
சமராபிராமன் × அனுபமா [சோழன் மகள்]
|
பூதி விக்கிரமகேசரி × வரகுணி ; கற்றளி [பராந்தகன் மகள்]
|
பராந்தன் திருக்கற்றளிபிச்சன். பூதிஆதிச்சபிடாரி. ஆதித்யவர்மன்

பிள்ளையார் அரிகுலகேசரிக்கு இந்த வமிசத்திலேயே தென்னவன் இளங்கோவேளார் மகள் பூதி ஆதிச்ச பிடாரியை மணஞ்செய்திருந்தது.

முதலாம் ஆதித்தன் காலத்தில் இவனுற் செம்பியன் தமிழவேள் என்ற பட்டமும் மற்றும் வரிசைகளும் பெற்ற விக்கி அண்ணன் என்பவனும் கொடும்பாளூர்த் தலைவன். ஆகவே இதுவரையிற் கூறியனகொண்டு கொடும்பாளூர்த் தலைவர்களுக்கும் சோழ அரசர்கட்கும் உறவுமுறை இருந்தது என்று ஏற்படுகிறது, உறவின்முறையாளர் ஆவதற்கு முன்னரே இவர்கள் அந்தக் கொடியைச் சார்ந்தவர்களாயிருந்தாலொழியப் புதியசம்பந்தம் செய்திருக்கமாட்டார்கள். அன்றியும், அவர்களைத் தகுதியான பதவிகளிலும் நியமித்திருக்கமாட்டார்கள். இக்காரணங்களால் சோழர்களும் அந்த வமிசத்தைச் சார்ந்தவர்களாக இருக்கவேண்டும் என்று துணியலாம்.

இனி முதலாவதான ஆதித்தன் என்ற பெயரையும் அவனது மறுபெயர்களையும் பட்டங்களையும் எடுத்துக் கொள்வோம். பிற்காலச் சோழவரசர் பரம்பரையிலே இப்பெயரை யுடையவர்கள் 1. விஜயாலயன்மகன் தொண்டைநாடு பாவிஞனை முதலாம் ஆதித்தன்; 2. முதலாம் பராந்தகன்மகன் இராஜாதித்தன்; 3, இவன் தம்பி சித்தத்தைச் சிவன்பாலே வைத்தவரான கண்டராதித்தர்; 4. சுந்தரசோழ பராந்தகன் மகன் ஆதித்தகரிகாலன். இவர்களே ஆதித்தன் என்ற பெயரை யுடையவர்கள்.

இவ்வடைவினருள் இராஜாதித்தரும் கண்டராதித்தரும் வெறும் ஆதித்தராக இல்லை, ஆனல், கண்டராதித்த தேவர் தாம் பாடிய திருவிசைப்பாவிலே,

வெங்கோல்வேந்தன்றென்னனுடுமீழமுங்கொண்டதிறற்
சேங்கோற்சோழன் கோழிவேந்தன் செம்பியன் பொன்னணிந்த
வங்கோல்வளையார்பாடியாடுமணிதில்லையம்பலத்துள்
எங்கோனீசனெம்மிறையையென்றுகொலெய்துவதே. 8

என்று பாடுகிறார். இதனிலே சிங்களநாடு வென்ற செய்தியும் பொன்னம்பலம் பொன்வேய்ந்த செய்தியும் இறந்த காலத்திற் பெறுகின்றோம். ஆணைமங்கலச் செப்பேட்டுப்படி இவை இவர் தகப்பனை வீரசோழன், வீர நாராயணன் என்ற பட்டங்கள் புனைந்த சோழபெருமானடிகள் முதலாம் பராந்தகதேவர் செய்த செய்கையென்று சோழ அரசாட்சியில் கூறியிருக்கின்றோம். இவரே இவற்றைச் செய்தனரென்று கொள்வோமானால் பராந்தகதேவர் விண்ணுட்டுக் கேகினபின் மூத்தமகனை இராஜாதித்ததேவரோடு இரட்ட அரசனை கன்னரதேவன் என்ற மறுபெயரையுடைய மூன்றாம் கிருஷ்ணனும் அவனது மைத்துனனை பூதுகனும் சண்டை யிட்டுத் தோற்றபின்னர் வஞ்சனையாகத் தக்கோலத்தில் அவரைக் கொன்று சோழநாட்டின் ஒரு பகுதியைக் கட்டிக்கொண்டதால், அச்செய்தியையும் கண்டராதித்தர் சுட்டி யிருப்பார். அப்படிப்பட்ட நாடிழந்த அரசனை மேலே குறித்தபடி நம்பியாண்டார் நம்பி பாடியிருக்க இயலாது. அன்றியும், இவர் கண்டராதித்தர் என்ற பெயருடையவர். நம்பியோ ஆதித்தன் என்றே கூறுகின்றார். ஆகவே பாட்டிற் கூறப்பட்டவர் இவராயிருக்க வியலாது. இவரது தமையன் இராஜாதித்தன்; அடைமொழியோடு இவன் பெயர் கூறப்படுவதாலும், இவன் இரண்டொரு ஆண்டே அரசு செலுத்தினும் பட்டாபிஷேகமின்றி இறந்ததாலும் இவனையும் கவனிக்க வேண்டுவதில்லை. இனி ஆராய வேண்டுவது, முதலாம் ஆதித்தனையும் இரண்டாம் ஆதித்தனையுமே யாகும்.

முதலாம் ஆதித்தனே சோழ இராச்சிய ஸ்தாபகன் என்று சொல்லவேண்டும். இவன், தகப்பனை விஜயாலயன் வென்று பிடித்த நாட்டைத் தான் காப்பாற்றியதோடு தொண்டைநாட்டிலும் தன் வெற்றியைப் பரப்பினவன். இவன் தொண்டைநாடு பரவினவன் என்றே தில்லை

ஸ்தானம்(திருநெய்த்தானம்)கல்வெட்டொன்றுகூறுகிறது. இவனுடைய போரெல்லாம் வடநாட்டிலே நடந்தனவே யொழிய, தென்னாட்டில் நடைபெற்றதாகத் தெரியவில்லை. அன்றியும், இந்த முதலாம் ஆதித்தன் கொங்குநாட்டை அடிப்படுத்தியதாகவும் சரித்திரம் கூறவில்லை. முதன் முதலாகக்கொங்கை யடிப்படுத்தியவன் முதலாம்பராந்தகனே.

இவைகளை யன்றிக் கல்வெட்டும் செப்பேடுகளும் இவனைப்பற்றி என்ன சொல்லுகின்றன வென்று கவனிப்போம்.

(இவனுக்கு (விஜயாலயனுக்கு)ப் பிறகு இவன் மகன், பெரியோர்க்கு ஒரு நிலையம், அறிவிற் பிரகஸ்பதி, மடியென்ப தறியாதவன், மக்கள் துன்பத்தை நீக்குவதிலே நோக்குடையவனை ஆதித்தவர்மன் அரசாண்டான். **திருவாலங்காட்டுச் செப்பேடு, சுலோ 47.**

கன்மூடாக் கடலின்றிரை நுனியிலிருந்து
தவழுவாங்கே களிறு சிந்துங்
கன்னமத மூற்றெடுத்துக் காலொடுசென்று
கலக்குங்கா விரிப்புற மெல்லாம்
வண்ணமுற வாலயம்பல பதாகையென
மணிகண்டற் கமைத்தனன் கல்லாற்
புண்ணியமே உருவாய வொளிமகுடன்
வென்றிபுனை பூர்வா தித்தனே.

**அன்பிற் செப்பேடு சுலோ, 18.**

இப்பூபாலனிடம் (விஜயாலயன்) கீர்த்திவாய்ந்த ஆதித்தன் தோன்றினன். இப்பூவுலகமுழுதும் ஜயித்தான். இவனுடைய அடிகள் மற்றை யரசர்களுடைய மணிமுடியிற் பிரகாசித்தன.

**(ஆனைமங்கலம் செப்பேடு, சுலோ 13.)**

அவன் (விஜயாலயன்) புத்திரன் கோதண்டராமன் என்ற மறு பெயரையுடைய ஆதித்தவர்மன் மதயானையின்மேலிருந்த பல்லவனை (அபராஜிதவர்மனை)க் கொன்றவன்.

**கன்னியாகுமரிக் கல்வெட்டு, சுலோ. 55**

மேற் கூறியவைகளினாலே இவன் சோழநாட்டின் வட திசையிலேயே பல்லவர்களோடு சண்டையிட்டுத் தனது இராச்சியத்தை நிலைக்கவைப்பதிற் கண்ணுங்கருத்துமா யிருந்தானென்று ஏற்படுகின்றதேயொழிய, தெற்கே சென்றதாகத் தெரியவில்லை.

இனி, மற்றொரு ஆதித்தனைக் கவனிப்போம். இவன் சுந்தரசோழனென்னும் இரண்டாம் பராந்தகனுடைய மூத்த மகன். சோழர்கள் கொள்ளும் பட்டப்பெயர்படி இவன் தகப்பன் இராஜகேசரியாகவே இவன் பரகேசரி யாவான். இயற்பெயர் ஆதித்தன். முதலாம் ஆதித்தனி னின்றும் இவனைப் பிரித்துக்காட்ட இவனை ஆதித்த கரிகாலன் என்பர் சரிதக்காரர். இவனது தகப்பன் காலத் திலேயே இவன் சுந்தரசோழனது அத்தைமகனும், சேனா பதியுமான பராந்தகன் சிறியவேளார் என்னும் இருங்கோ வேளாரோடு சிங்களநாட்டின்மேற் படையெடுத்துச் சென்றனனென்றும், அங்கே சிங்களத்தை வென்றும் நாட்டையழித்தும் வருகையில் சேனாபதியான பராந்தகன் சிறியவேளார் இறந்தாரென்றும் கல்வெட்டுக்களில்[1] படிக்கின்றோம். ஆதித்தகரிகாலன், 'பாண்டியன் றலை கொண்ட பரகேசரிவர்மர்க்கு யாண்டு இரண்டு', வீர பாண்டியன் றலைகொண்ட பரகேசரிவர்ம்மர்க்கு யாண்டு இரண்டு' என்பதான மெய்க்கீர்த்தியைக் கூறிக்கொள்ளு கின்றான். இதற்கேற்ப ஆனைமங்கலத்துச் செப்பேடும், 'இந்த மநுவம்ச தீபமான ஆதித்தன் போரிலே வீரபாண் டியனோடு தன் வலிமையறிந்த ஒரு மத்தகஜத்தோடு இளஞ்சிங்கமொன்று விளையாடுவதுபோல விளையாடி னான் என்று கூறுகின்றது. திருவாலங்காட்டுச் செப் பேடு வீரபாண்டியனை இவன் கொன்றானென்றே கூறு கின்றது. ஆகவே இவன் தென்னன் நாடும் ஈழமும்

[1] 116 of 96.

செயித்தானென்பதும், 'புலமன்னியமன்னைச் சிங்களநாடு பொடிபடுத்த குலமன்னியவக் கோகனநாதன்' என்பதும் பெறப்பட்டது. இவனைப்பற்றிச் செப்பேடுகள் கூறுவதைக் கவனிப்போம்:—

இந்த இராஜேந்திரன் (சுந்தரசோழன்) இராஜராஜனை ஆதித்தன் என்ற சூரிய வம்ச குலசேகரனைப் பெற்றான். பராந்தகதேவன் தேவலோகத்தை யாட்சிசெய்யுங்கால் ஆதித்தன் பூலோகத்தை அரசாண்டுவந்தான். இந்த மநுவம்சதீபமான ஆதித்தன் பூலோகத்தை அரசாண்டுவந்தான். இந்த மநுவம்சதீபமான ஆதித்தன் போரிலே வீரபாண்டியனோடு தன் வலிமை யறிந்த ஒரு மத்த கஜத்தோடு இளஞ்சிங்கமொன்று விளையாடுவதுபோல விளையாடினான்.

(ஆனைமங்கலம் செப்பேடு, சுலோ. 26—28)

இவனுக்கு (சுந்தரசோழனுக்கு)ப் பிறகு இவன் மகன் ஆதித்தன் அரசுகட்டிலேறினான். மதனனை அழகில் வென்ற இந்த ஆதித்தன் பாண்டியனை போரிற்கொன்றான். அவன் தலைநகரிலே (மதுரை) ஜயஸ்தம்பம் நட்டு அதனில் பாண்டியன் தலையை நட்டுவிட்டுச் சுவர்க்கத்தைக் காணவேண்டிப் பூமியினின்றும் மறைந்தனன்.

(திருவாலங்காட்டுச் செப்பேடு, சுலோ. 67—68)

இவைகளாலே, இவன் இராஜராஜனென்ற பெயரை யுடையவனென்றும், குலசேகரன் என்றபட்டமு முடையவனென்றும் பாண்டியனைப் போரிற் கொன்று அவன் நாட்டையும் செயித்தானென்றும் ஈழத்தை யழித்தானென்றும் அறிகின்றோம். அபயன் என்ற பெயர் பலராலும் பொதுப்பெயராகக் கொள்ளப்படுவதால் அதைப்பற்றி அதிகமாக ஆராய வேண்டுவதில்லை. ஆகவே இவனே 1, 2, 3 வினாக்களுக்குத் தக்கவிடை யுள்ளவனாகின்றான்.

இனி நான்காவதான பொன்னம்பலம் பொன்வேய்ந்த செய்தியையும் கவனிப்போம். இவனது ஆட்சியில் ஐந்தாண்டுகட்குட்பட்ட கல்வெட்டுக்களே காணப்படுகின்ற

மையில் இவன் நம்பியாண்டார் காலத்திலேயே சிவபெருமான் திருவடி நீழலை யடைந்துவிட்டானென்று கூறவேண்டும். நம்பியும் இரண்டு செய்யுள்களிலே பொன் வேய்ந்தமையும் இறந்தமையும் கூறுகின்றார். இவ்வாறு இவனது இறப்பும், ஈழம் கொண்ட செய்தியும், பெயர் ஒற்றுமையும் பட்டம்கொண்டதும் இவனுக்குப் பொருந்தியிருத்தலினாலே பொன்னம்பலம் பொன் வேய்ந்ததாகத் திருத்தொண்டர் திருவந்தாதி கூறும் செய்தியும் உண்மையாகவே இருக்கலாம்.

ஆயினும், முதலாம்பராந்தகன் பொன்வேய்ந்ததாகக் கூறப்பட்டிருக்கின்றதேயெனின், அவனுக்குப் பெயர் ஒற்றுமையே யில்லை. அவனே முதலாம் ஆதித்தன் மகனாவான். தகப்பன் பெயரும் பிள்ளை பெயரும் ஒன்றாக நம் நாட்டிலே ஓரிடத்தும் கேட்டோமில்லை.

நம்பி காலத்திலேயே இவன் காலமாயினனா? என்று கவனிப்போம். செம்பொன்னணிந்து 'சிற்றம்பலத்தே சிவலோக மெய்தி நம்பன்கழற் கீழிருந்தோன்' என்று நம்பி பாடுகின்றார். இந்த சிற்றம்பலம் சிங்க நோக்காக அமைக்கப்பட்டிருக்கிறதாகத் தோற்றுகிறது. இதற்கேற்ப இந்த ஆதித்த கரிகாலனைப் பொன் மாளிகைத் துஞ்சின தேவர் என்று கல்வெட்டுக்கள் கூறும். பொன் மாளிகையைப் பொன்னம்பலமெனக் கல்வெட்டுத் துறையார் கொண்டது சாலப் பொருந்தும். மாளிகை என்பது கோயிலுக்குப் பேராக அக்காலத்தில் வழங்கி வந்திருக்கின்றது. அம்பலம் கோயிலென்பது இன்றும் மலையாளப் பழந்தமிழ் வழக்கு. ஆகவே நம்பி செம்பொன்னணிந்து சிற்றம்பலத்தே சிவலோகமெய்தி யென்று சொன்னதும் சாலப் பொருந்தும். ஆயினும் 'சிற்றம்பலத்தைச் சிவலோகமெய்தி' என்று ஒரு பாடம் இருக்கின்றது. ஏடுகளில் முற்கண்டவாறுமுளது. காட்டு மன்னார்கோயிலிற் கண்ட ஒரு கல்வெட்டு இவன் உடனிருந்த சில துரோகிகளால் கொல்லப்பட்டதாகக்

கூறுகின்றது. இன்ன இடத்தில் இவ்விதமாகக் கொல்லப் பட்டானென்ற செய்தி இன்னும் கிடைக்கவில்லை. அச் செய்தி கிடைத்தால் இது மேலும் வலியுறுமென்பதில் ஐய மில்லை. எவ்வாறாயினும் இவன் சிதம்பரத்திலோ அவ் வூருக்குச் சமீபத்திலோ இறந்துபட்டானென்பதில் ஐய மில்லை. ஆகவே இவனே நாம் எழுப்பிய எல்லா வினாக் களுக்கும் விடையாக நிற்கின்றான்.

இனி, திருமுறை கண்ட புராணத்திலே நம்பியாண் டார் நம்பி தேவாரத்திருமுறைகளை ஏழாக வகுத்தது மாத்திரமல்லாமல், திருவாசகம், திருவிசைப்பா ஆதியவை, திருமந்திரம், பதினொராந்திருமுறைப் பிரபந்தங்கள் ஆகிய இவைகளையும் தொகுத்ததாகக் கூறியிருத்தலினால் இவர் காலம் ஆதித்த கரிகாலனது காலமாக இருக்கமுடியாதென் றும், திருவிசைப்பாக்காரருள் சிலர் 'அருண்மொழி வர்மனை இராஜ ராஜனுக்குப் பின்னும் இருந்தார்களாகலின் நம்பி யாண்டார் நம்பி காலமும் பின்னே யிருத்தல் வேண்டு மென்றும் சிலர் வாதிப்பர்.

மேலும் இவர்கள், திருவிசைப்பாக்காரர் ஒன்பதின் மரில் ஒருவராகிய கருவூர்த்தேவர் தஞ்சை இராசராசேச் சுரத்தைப் பாடியிருத்தலினாலும், தஞ்சைப் பிருகதீச்சுர மான இராசராசேச்சுரத்தைக் கட்டிய இராஜராஜன் மகன் இராஜேந்திரன் கட்டிய கங்கைகொண்ட சோளேச் சுரத்தை அவரே பாடியிருத்தலினாலும், இப்பாக்களும் திருமுறையிற் சேர்க்கப்பட்டிருத்தலினாலும், நம்பிகாலம் இராஜராஜன் இராஜேந்திரனாதிய அரசர்கட்குப் பின்னால் என்பது உறுதிபெறுகின்றது என்பர். இவைகட்கு ஆதார மாக விருப்பவை,

பண்புற்ற திருஞான சம்பந்தர் பதிகமுந்நூற்
றெண்பத்து நான்னே விலங்குதிரு முறைமூன்று
நண்புற்ற நாவரசர் முந்நூற்றேழ் மூன்றினால்
வண்பெற்ற முறையொன்று நூற்றினால் வன்றொண்டர். 25

ஆகவளர் திருமுறையே மூருட்டிருவா சகமொன்று
மோகமெறி திருவிசைப்பா மாலைமுறை யொன்றுசிவ
போகமிகு மந்திரமா முறையொன்று புகழ்பெறவே
பாகமிகுந் திருமுறைகள் பத்தாக வைத்தார்கள். 26

என்று திருமுறைகண்ட புராணத்திலே காணப்படும் செய்யுட்களாம். இவற்றை யடுத்துக் காணப்படுவன,

வைத்ததற்பி னம்பிகழன் மன்னர்பிரான் மகிழ்ந்திறைஞ்சிச்
சித்திதரு மிறைமொழிந்த திருமுகப்பா சுரமுதலா
வுய்த்தபதி கங்களையு மொருமுறையாச் செய்கவெனப்
பத்திதருந் திருமுறைகள் பதினொன்றாய்ப் பண்ணினார். 27

மந்திரங்க ளேழுகோடி யாதலினால் மன்னுமவ
ரிந்தவகை திருமுறைக ளேழாக வெடுத்தமைத்துப்
பந்தமுறு மந்திரங்கள் பதினொன்று மாதலினா
லந்தமுறை நான்கினொடு முறைபதினொன் றாக்கினார். 28

ஆக்கியபின் திருதொண்டத் தொகையடைவை யருளாலே
நோக்கியபின் னடியன்மார் நடங்கடைவுந் தொழிற்பேறும்
பாக்கியத்தா லிபமுகத்தோ னருள்செய்த பகுதியினால்
வாக்கியல்சே ரந்தாதி நம்பியடை வேவகுத்தார். 29

என்ற 27, 28, 29-ஆம் செய்யுட்கள். 25, 26-ஆம் செய்யுட்களில், 'தேவாரத் திருமுறை எழு, திருவாசகம் ஒன்று, திருவிசைப்பா மாலைமுறை ஒன்று திருமந்திரம் ஒன்று ஆகப் பத்தாக வைத்தார்கள்' என்பது காணப்படுகிறது. வைத்தவர் யாவரென்று காணப்படவில்லை. உலகினர் என்று கொள்ளவேண்டும். இப்பன்மைவினைக்கு வேறு ஒருமை எழுவாய் கொள்வது இலக்கண வழுவாகும். ஆகையால், இந்த 25, 26-ம்ஆம் செய்யுள்கட்கு முன்னுள்ள 23, 24-ஆம செய்யுட்களிலே அரசன் (இராசராச அபயகுலசேகரன்) திருமுறை வகுத்ததாகக் காணப்படுகின்றது. அச்செய்யுட்கள் வருமாறு :—

அந்தமொழி கேட்டலுமே மன்னன் ருனு
மாடினன் பாடினு னலக்கண் யாவுஞ்
சிந்தினு னமுதமுண்டான் போல நெஞ்சந்
தேறினு னம்பிதிரு வடியிற் ருழ்ந்தான்
பந்தமுறு சிவனடியார் கொள்க வென்னுப்
பண்டாரந் திறந்துவிட்டான் பரிவு கூர்ந்தான்
இந்தவகைப் பெருங்களிகொள் மன்னன் ருனு
மெழின் முறையை முன்போல வகுக்கவேண்ணி. 23

மன்னுதமிழ் விரகரெங்கள் காழிவேந்தர்
வகுத்தருளா வமைத்ததிரு முறையோர் மூன்று
மன்னவகை வாகீசர் முறையோர் மூன்று
மாரூர ருரைத்ததிரு முறைய தொன்று
துன்னவகை யேழாகத் தொகுத்துச் செய்தான்
றூயமனு வெழுகோடி யென்ப துன்னித்
தன்னகரி ிருவருளான் மன்னன்ருனுந்
தாரணியோர் வீடுபெறுந் தன்மை சூழ்ந்தே. 24

என்பவற்ருல், இவ்வரசன், 'திருமுறை முன்போல வகுக்க எண்ணி, தூயமனு எழுகோடி யென்பது உன்னி ஏழாகத் தொகுத்துச் செய்தான்' என்று விளங்குகின்றது. இவ்வாறு அரசன் செய்ததை உலகினரும் ஒப்புக்கொண்டனர் என்ருல் அச்செய்தி ஒருவாறு பொருத்தமாக விருக்கும். அவ்வாறின்றி உலகினர் தொகுத்தனர் என்று கொள்ளும்படி 25, 26-ஆம் செய்யுட்கள் அமைந்திருக்கின்றன. 28-ஆம் பாடலோ நம்பி இவ்வாறு வகுத்தாரென்று கூறுகின்றது. இஃதன்றி அரசன் மந்திரங்கள் எழுகோடி என்பதைக்கொண்டு திருமுறைகளை ஏழாக வகுத்தானென்று திரு முறைகண்ட புராணமுடையார் 24-ஆம் பாடலிற் கூறுகின்றனர். எழுகோடி மந்திரங்களாவன :—ஸ்வதா, ஸ்வாகா, நம: வௌஷடு ஆதியவைகளை ஈற்றிலே யுடையன. இவைகளைத் தவிர வேறு ஈற்றினையுடைய மந்திரங்கள்

இல்லை. ஆயினும், 28-ஆம் செய்யுளிலே, 'பந்தமுறு மந்திரங்கள் பதினொன்று மாதலினால், அந்தமுறை, நான்கினோடு முறைபதினொன் றாக்கினார்' என்பது காணப்படுகிறது. பதினொரு மந்திரங்களைச் சங்கிதா மந்திரங்கள் என்பர் சைவர். அவை பஞ்சப்பிரமமும் ஷடங்கமுமாம். இவற்றில் ஏழுகோடி மந்திரங்களும் வருவதில்லை. ஆகவே இப்பதினொரு மந்திரமும் ஏழு மந்திரமும் ஒன்றென்றாவது ஒருவகைப் பட்டன வென்றாவது கூறுவதற்கில்லை. இவ்வாறு பலவித முரண்பாடுகள் பொருள்வகையிற் காணப்படுகின்றன, இனி, இலக்கண முறைப்படி யாராய்வோம்.

i. 24-ம் பாட்டிலே, அரசன் திருமுறைகளை ஏழாகத் 'தொகுத்துச்செய்தான்' என்பது செயப்படுபொருள் குன்றாத ஒரு முற்றுவினை. இம் முற்றுவினையையுடைய செய்யுள் அப்படியே முடிந்து விடுகின்றது. அடுத்த 25-ஆம் பாட்டில் 24-ஆம் செய்யுளிலே கூறிய பொருளே கூறப்படுகின்றது. இது கூறியது கூறல் என்னும் குற்றத்தின்பாற்படும்.

ii. இராசராசமன்னன், தன்பால் வந்த அன்பர்கள் தேவாரத் திருமுறை யாசிரியர்களாகிய அப்பர், சம்பந்தர், சுந்தரர் அருளிச்செய்த பதிகங்களுள் ஒன்றொன்று பண்ணிசையோடு ஓதக்கேட்டு, அன்பால் மனங்கரைந்து மற்றைய பதிகங்களையும் தேடிக்கொண்டிருந்தான். அவை கிடைக்கவில்லை. ஆதலினால் இந்த உபாயத்தைத் தேர்ந்தான். ஆகவே அரசனுக்குத் தேவாரத்தைத் தேடுவதும் தொகுப்பதுமே நோக்கம் என்பது பாக்களிலிருந்தும் விளங்குகின்றது. அவ்வாறு இருத்தலின் திருவாசகம் திருவிசைப்பா, திருமந்திரம் ஆகியவற்றைத் தொகுக்கப் பார்த்திருந்தான் என்றாவது வேண்டினான் என்றாவது கூறுவது 'மற்றொன்று விரித்தல்' ஆகும்.

iii. அரசன் இவ்வாறு திருமுறைகளைத் தொகுத்த பின், அத்திருமுறைகளை யாராய்ந்த நம்பியாண்டானம்பி

திருத்தொண்டத்தொகைப் பதிகத்தைக் கண்டு மகிழ்ச்சி யடைந்து, பொல்லாப்பிள்ளையார் அருளாலே நாயன்மாருடைய அடைவெல்லாம் அந்தாதித்தொடையாக ஒரு நூல் செய்தார் என்று கொள்வது பொருட்டொடர்பும் செய்யுட் டொடர்பு முடையதாக விருக்கின்றது.

iv. நம்பியாண்டார் நம்பி சம்பந்தமூர்த்தி சுவாமிகள் பேரில் அந்தாதி யொன்றே பாடியதாகக் கூறுகின்றார்.

v. பதினோராந் திருமுறையில் இறைவனார் மொழிந்த திருமுகப்பாசுரம் முதலாக நம்பி செய்தனவாகக் கூறப்படும் ஒன்பது நூல்களும் காணப்படுகின்றன. நம்பியின் ஆற்றலை உணராதவர் அக்காலத்து இரார் என்று துணிந்து கூறலாம். அவரைப் பழித்துரைப்போரும் இருப்பது அரிது. ஆகவே, அவர் 'தோன்று தோற்றித் துறை பல முடிப்பினும், தான் தற்புகழ்தல் தகுதியன்று' என்பதை உணராது தம் நூல்களையும் பதினோராந் திருமுறையிற் கோத்தனர் என்று கூறுவது அவர்பாற் செய்யும் ஒரு பெரும்பிழை யென்போம்.

முற்கூறிய காரணங்களான் 25 முதல் 28 வரையுள்ள செய்யுள்கள் திருமுறை கண்ட புராண முடையார் வாக்கு அல்லவென்று கூறவேண்டியிருக்கின்றது, பாக்களையூன்றி நோக்கினால் இவை இந்நூலைச் செய்ததாகக் கருதப்படும் உமாபதிசிவத்தின் வாக்காகவும் தோன்றவில்லை இவைகளாலே பல புராணங்களிலும் காவியங்களிலும் தம் செய்யுட்களை இடைமடுக்கும் புலவரொருவர் இவற்றைப் புகுத்திவிட்டதாகக் காணலாம். இவ்விடைச் செருகற் செய்யுள்களை நூலிலிருந்து களைவோமாயின் மேற்கண்ட இடையூறுக ளெல்லாம் நீங்கும்.

[1] S. I. I. Vol. ii no. 40.


இவைகளெல்லாமன்றி, தஞ்சாவூர்ப் பெரிய கோயில் கல்வெட்டொன்றில்[1] 'பாதாதி கேசாந்தம் இருபதிற்று விரல் உசரத்து இரண்டு கையுடையராகச் செய்த 'தத்தா நமரேகாண்' என்ற மிலாடுடையார் ஒருவர், என்ற தொடர் காணப்படுகின்றது. முதல் இராஜராஜனது காலத்திலும், அவனது மகனான கங்கை கொண்ட சோழன் காலத்திலும் தஞ்சை இராச ராசேச்சுர முடையார் கோவிலதிகாரியாக விருந்த பொய்கை நாடு கிழவன் அக் கோயிலில் எழுந்தருள்வித்த செப்புத் திருமேனிகள் பல. அவற்றுள் இஃதொன்றாகும். இத் திருமேனி அறுபத்து மூவரில் ஒருவரான மெய்ப்பொருள் நாயனாரது உருவம். நம்பி தனது திருவந்தாதியில், 'அவன் நத்தாநமரே யெனச் சொல்லி வானுலகம் பெற்றவன்' என்று பாடுகின்றார். ஆதலின் இவர்காலம் மேற்கூறிய திருவுருவமைக்கப்பட்ட காலத்திற்கு முன்னாகுமென்று ஏற்படுகிறது.

முதலாம் இராஜராஜனே தேவாரப் பதிகங்களைக் கோயிலில் ஓதுவதற்கு ஏற்பாடு செய்திருந்தானென்று கல்வெட்டுகளால்[1] அறிகின்றோம். இதனாலே இவன் காலத்துக்கு முன்னரே தேவாரத் திருமுறைகள் வெளியாகிவிட்டன வென்பது தேற்றம். மேலேகாட்டிய நியாயங்களால் நம்பியாண்டார் நம்பி குறிந்த அரசன் ஆதித்தன் II என்பதும் இவனே திருமுறைகண்டவனென்பதும், இத் திருமுறைகண்ட ஆதித்த கரிகாலன் கி. பி. 966 முதல் 970 வரை யரசாண்டனனென்பதும் பெறுகின்றோம். நம்பி காலத்திலேயே இவ்வரசன் உயிர் துறந்தமையின் அவனுக்குப் பின்னும் நம்பி இருந்திருக்கலாம், ஆகவே இவரது காலம் பத்தாம் நூற்றாண்டின் பிற்பகுதி யென்பது துணியப்படும்.

---

1 தென்னிந்திய கல்வெட்டுக்கள். தொகுதி II 169, 254.

# சோழ வமிசாவளி


1. ஆதித்தன் I
2. பராந்தகன் I
3. இராஜாதித்தன்
4. கண்டராதித்தன்
5. அரிஞ்சயன்
உத்தமசீலி
அரிகுலகேசரி
கற்றளி (பெண்)
8. உத்தமன்
6. பராந்தகன் II
7. ஆதித்தன் II
9. இராஜராஜன் I
குந்தவை
10. இராஜேந்திரன்
மூத்தவன்
11. இராஜாதிராஜன்
12. இராஜேந்திரன்
13. இராஜமகேந்திரன்
14. வீரராஜேந்திரன்
அம்மங்கை (பெண்)
15. அதிராஜேந்திரன்
மதுராந்தகி × கீழைச்சளுக்கிய குலோத்துங்கன் 16.

# 2. சேக்கிழார்

## 1. குன்றத்தூர்

தமிழ் நாட்டிலே சென்னையை யறியாதார் ஒருவருமிலர். சென்னையும் அதனைச் சார்ந்த பிறவூர்களும் தொண்டை மண்டலமென்று சொல்லப்படும். தொண்டைமண்டல மென்ற பெயர் வருவதற்குப் பல கதைகள் கூறுவர், கிள்ளிச்சோழனென ஒருவனிருந்தான், அவன் நாக கன்னிகை யொருத்தியை மணக்க, அவள் 'யான் பெற்ற புதல்வனை யென்செய்வே'னெனக் கேட்ட காலத்து, தொண்டையை அடையாளமாகக் கட்டிவரவிட்டால் அவ னுக்கு அரசுரிமை கொடுப்பதாகச் சோழன் சொன்னதாக வும், அவ்வாறே அந்த நாககன்னிகை தன்மகனை வரவிட்ட பொழுது அம்மகனுக்கு அரசுரிமை கொடுத்ததாகவும், அவனுண்டநாடு தொண்டைநாடு எனப்பட்டது என்ப தாகவும் தமிழில் ஒரு கதை வழங்குகின்றது. கரிகால னுக்கு மகிமான சோடனென்றொரு பிள்ளை யுண்டென் றும், அவனுக்குக் கரிகாலன், தொண்டைமானன், தாச வர்மன் என மூன்று பிள்ளைகளுண்டென்றும், அவர்களி லொருவனுன தொண்டைமான் ஆண்ட நாட்டிற்குத் தொண்டை நாடென்று பெயரென்றும் தெலுங்கு நாடு களில் ஒரு கதை வழங்குகின்றது. எவ்வாருயினும் முற் காலத்தில் இந்நாட்டுக்குத் தொண்டை நாடென்பது பெய ரன்று என்பது தெளிவாகின்றது. அக்காலத்திலே இது இன்ன பெயரோடு வழங்கிற்று என்று சொல்லுவதற் கில்லை.

தொண்டைமண்டலமென்று பெயர்பெற்ற காலத்திலே இந்நாடு மேற்கிலுள்ள பவளமலைக்கும் வடக்கிலுள்ள திருவேங்கட மலைக்கும் தெற்கில் ஓடும் பெண்ணையாற்றுக் கும் கிழக்கிலுள்ள கடலுக்கும் உட்பட்டதாக விருந்தது.

இதுபொழுதும் இந் நிலப்பரப்பைத் தொண்டைநாடெனவே கூறுவர். இந்நாடு இருபத்துநான்கு கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. சென்னை புழற்கோட்டத்திலுள்ளது. சென்னையம்பதிக்கு வேண்டுமான தண்ணீரைக் கொடுக்கும் புழலேறி இருக்கும் ஊரே புழல் எனப்படும். அதுவே அக்கோட்டத்திற்குப் பெயராயிற்று. கோட்டம் என்பது பெரிய நிலப்பரப்பு. ஒவ்வொரு கோட்டமும் பல சிறு பகுதிகளாக வகுக்கப்பட்டு நாடெனப் பெயர்பெறும். இச் சென்னையம்பதி எழுமூர் நாட்டிலுள்ளது. எழுமூர் இதுபோது எழும்பூர் என வழங்குகின்றது. ஒருகாலத்து ஒரு நாட்டின் தலைமைப் பட்டினமாயிருந்த இவ்வெழுமூர் இப்பொழுது ஒரு தலைமைப்பட்டினத்தின் சிறுபகுதியாக விருக்கின்றது. மேற்கூறிய புழற்கோட்டத்தை யடுத்துள்ளது புலியூர்க் கோட்டம்; அது குன்றத்தூர், போரூர், மாங்காடு, அமரூர் என்று பலநாடுகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. குன்றத்தூர் நாட்டின் தலைமைப் பட்டணம் குன்றத்தூர்; அது சென்னையை யடுத்த பல்லாவரத்திலிருந்து மேற்கே ஆறு மைல் தூரத்திலுள்ளது. பரங்கிமலையிலிருந்துஞ் செல்ல நல்ல சாலை யுண்டு.[1]

இக்குன்றத்தூர் இதுபொழுது ஒரு சிற்றூராக விருப்பினும் 10,11-ம் நூற்றாண்டிலே ஒரு பேரூராகவே யிருந்தது. அவ்வூரின் மேல்கோடியில் ஒரு மண்டபமும் அதனை யடுத்து ஒரு சிறு மலையுமிருக்கின்றன. இம்மண்டபம் குன்றின் அடிவாரத்தில் இருக்கின்றது. இது பதினாறு கால்களமைந்த ஒரு சிறு மண்டபமே யாயினும் கால்களின் நான்கு பக்கங்களிலும் பதுமைகள் அழகாக வெட்டப்பட்டுள்ளன. இக் குன்றின் மேலேற பெரிய அகன்ற படிக்கட்டுகளுண்டு. குன்றின்மேலே குறிஞ்சிநிலத் தெய்வமான முருகக்கடவுள் ஆலய மிருக்கின்றது. கோயிலுள்ளே

1 சென்னையிலிருந்தே குன்றத்தூருக்குப் பஸ் செல்லுகிறது.

வள்ளிதெய்வயானையுடன் முருகப்பிரான் வீற்றிருக்குங் கோலம் கோயிலுக்குத் தகுதிப்பட அமைந்துள்ளது. அக் கோயிலின் முன் மண்டபத்தில் சுருங்கை யொன்றுண்டு. அது எங்குச் செல்கிறதென அறிந்தாரொருவருமில்லை. கோயிலுக்கு எதிரில் ஒரு அழகான மண்டபமுண்டு. இக் குன்றே இவ்வூருக்கு இயற்கை யழகினைப் பெருக்குவதா யிருக்கின்றது.

இக்குன்றினின்றுஞ் சுற்றுப் பக்கத்தைப் பார்ப்போமானால் சுற்றுப்புறக் காட்சி வெகு ரமணீயமாக விருக்கும். தெற்கே இதனை யடுத்தடுத்துச் சிறுகுன்றுகளும் அவற்றின் மேல் ஆலயங்களும தோன்றும். மேற்கே நோக்குவோமானால் இக்குன்றையடுத்து ஒரு சிறு பள்ளத் தாக்கு காணப்படும். ஒருபொழுதும் வற்றாததொரு நீர் நிலையிலிருந்து எப்பொழுதும் அறாத கால்கள் ஓடுவ தாலே உழவுத்தொழில் இடைவிடாது நடக்கின்றது, இடையேயோடும் சிறு கால்களை யுடையதான பல சிறு பகுதிகளாக இப்பள்ளத்தாக்கு பகுக்கப்பட்டு உழவுக்குத் தகுதியாகச் செய்யப்பட்டிருக்கின்றது, பங்குனி சித்திரை மாதங்கள் கடுங்கோடை யென்று சொல்லப்படினும் உழவுத்தொழிலால் அக்காலவெப்பம் அங்கே தெரிவ தில்லை பத்தி பத்தியான வயல்களும் அவ்வயல்களிற் சில வற்றில் விதைக்கட்பட்டு விதை முளைத்திருப்பதும், மற்றுஞ் சிலவற்றில் நாற்று நடப்பட்டு அவை வளப்பமுற வளர்ந்து பச்சைப்பசே ரென்றிருப்பதும், சிற்சில உழவிற் காக நீர் நிரம்பி யிருப்பதும் மலைமேலிருந்து பார்ப்போருக் குப் பலவித வன்னங்கலந்த ஒரு கம்பளத்தைப் பூமிமேல் விரித்திருப்பது போற் றோன்றுங் காட்சி வெகு ரமணீய மானது. இத்தோற்றம் பார்ப்போர் மனத்தைக் கவர்ந்து மகிழ்ச்சியை யளிப்பது போன்றே நிலத்துக்கும் இடை யறாது வந்துகொண்டிருக்கும். புதுப்புனல் அப்பயிருக்கு உரத்தைத் தந்து செழிப்பை யுண்டாக்குகின்றது. இதனை

விட்டுக் கீழ்ப்புறம் நோக்குவோமாயின் கண்ணுக்கெட்டிய தூரம் தோன்றுஞ் சோலையினழகும் அவற்றினூடே தோன்றும் வீடுகளும், இவைகளுக்குத் தலைமை வகிப்பவர் தாங்களேயென்று காட்டுவதுபோல் தலை நிமிர்ந்து நிற்கும் தென்னைமரங்களும் தோன்றும். ஆகவே குன்றினின்று காணுங்காட்சி வெகு மனோகரமானது.

அதினின்றும் இறங்கிக் கீழ்புறம் வந்தால் குன்றத்தூர் என்ற ஊர் காணப்படும். இதனை இப்போது நத்தம் என்று சொல்லுகின்றனர். நத்தமென்ற சொல் வீடுகள் அடங்கிய இடம் என்று பொருள்படும். ஒரு ஊரானது நத்தம், மடப்புறம், மடவளாகம், சேரி எனப் பல பிரிவுகளாகப் பிரிக்கப்படும். பெரியார் துறவிகள் வாழுமிடம் மடமாகும், அவரும் அவர் பரிசனரும் வாழுமிடம் மடப்புறம். கோயிலும் அதனைச் சுற்றியுள்ள இடமும் மடவளாகமாகும். இவ்வகையாகவே இவ்வூரும் நத்தம், வளாகம் முதலியனவாகப் பிரிக்கப்பட்டிருந்தன, குன்றத்தூர் நாட்டுக்குத் தலைமையூராகையால் வேந்தனது காரியங்களை நிர்வகிக்கப் பல அதிகாரிகளும் இருந்தனர், அந்நாளிலே அரசனையொத்த முதன்மைக் குடிகளே பல அதிகாரங்களையும் வகித்துவந்தனர் அவர்கட்கு வேண்டிய பரிசனரும் அவர்கள் உறையுமிடத்திற்கு அருகில் வாழ்வர். இவர்களெல்லாம் உறையுமிடம் நத்தமாகும்.

ஊருக்கு வடகீழ்க் கோடியில் சிவாலயம் எடுப்பது வழக்கம். அத்திசைக்கு அதிபன் ஈசானன். இவரைச் சிவபெருமானது கூறு என்று பெரியார் கூறுவர். இந்த நத்தத்திற்கு வடகீழ்த் திசையில் ஒரு கோயிலுண்டு. அங்கே எழுந்தருளியுள்ள கடவுளுக்கு நாகேசுரர் என்று பெயர். அதற்கு வேண்டிய காரியங்களை நிர்வகிக்க ஏற்பட்ட அதிகாரிகளும் பரிசனரும் அவ்வாலயத்தைச் சுற்றி வாழ்ந்து வந்தனர். இதனை மடவளாகம் என்ற பேரால் அழைத்து வந்தனர். நத்தமும் மடவளாகமும் சேர்ந்ததே குன்றத்தூர் என்ற பெயருடையதாக விருந்தது.

# 2. அருண்மொழித் தேவர்

இக்குன்றத்தூரிலே மலையைச் சார்ந்து ஒரு பள்ளத் தாக்குண்டென முன்னர்க் கூறினேம். இப்பள்ளத்தாக்கு பல பாகங்களாகப் பகுக்கப்பட்டிருந்தது. குன்றத்தூர் முதலிய ஊர்களிலுள்ள காணியெல்லாம் முன்னொரு காலத்தில் பெருவளத்தானென்னு மரசன் காடு கெடுத்து நாடாக்கித் தென்னாட்டினின்றும் நற்குடி நாற்பத்தெண் ணாயிரவரைக் கொண்டுவந்து குடியேற்றிவைத்த குடிகளுக் குச் சொந்தம். அவர்களே எல்லாக் காணிக்கும் உரிய ராய் முதன்மைப் பட்டமும் எய்தினார்கள். அவ்வாறு கொண்டுவந்து குடியேற்றப்பட்டவர் கிழாரென்று அழைக் கப்படுவர். அவர்கள் காணிக்கு உடையவர்களாக அவர் களுக்குக்கீழ் உழுவித்துண்போரும் பலருண்டாயினர்.

இவ்வாறு குன்றத்தூரிலே குடியேறியவர்களுள் கூடல்கிழான், புரிசைகிழான், வெண்குளப்பாக்கிழான்,[1] குளத்துழான்[2], சேக்கிழான்[3] என்ற பல முதன்மைக்குடி கள் வாழ்ந்துவந்தனர். இக்குடிகளிலுள்ளார் அறிவு

---

[1] சிதம்பரம் கோயிலிலுள்ள கல்வெட்டொன்று புலியூர்கோட் டத்து குன்றத்தூர்நாட்டுக் குன்றத்தூர் வெண்குளப்பாக்கிழான் அரையன் தில்லைநாயகரான நந்திபன்மன்' என்று கூறும். S. I. I. iv. 227.

[2] பல்லவராயன் பேட்டைக் கல்வெட்டு 'ஜயங்கொண்ட சோழ மண்டலத்து ஆமூர்க்கோட்டத்துச் சிறுகுன்றநாட்டுக் காரிகைக் குளத்தூர் குளத்துழான் திருச்சிற்றம்பலமுடையான்' என்று கூறும். No. 433 of 1924.

[3] சேக்கிழார் மரபினர் பலவிடங்களிலுமிருந்திருக்கின்றனர். மூன்றாம் குலோத்துங்கன் காலில் ஆமூர்க்கோட்டத்தில் புரவு வரி திணைக்களம் சேக்கிழார் ஒருவர் இருந்தார். சேக்கிழார் அம்மையப்ப பராந்தக தேவனென்பான் திருக்கடையூரில் கோயிலுக்கு நிலம்விட்ட விஷயம் அவ்வூர் கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது.

ஒழுக்கம், சீலம், வாய்மை முதலிய நற்குணங்களில் மேம்பாடுடையரா யிருந்ததோடு சிவபத்தியிலுஞ் சிறந்திருந்தனர்.

சேக்கிழார் குடியிலே இருந்தவர்க்கு ஓர் ஆண்மகவு உண்டாயிற்று. அப்பிள்ளைக்கு அருண்மொழியெனப் பெயரிட்டனர். அருண்மொழி யென்பது அக்காலத்து அரசரின் திருநாமம்.[1] அரசருடைய காரியங்களை நிர்வகிப்பவர்களும் அவரிடத்து அன்புடையவரும் அரசரது பெயரைத் தம் மக்கட்கிடுவது மரபு. இந்த அருண்மொழி யென்ற பெயரைக்கொண்ட அரசரைச் சரித்திரக்காரர்கள் இராஜராஜ ராஜகேசரி யென்றும் முதல் இராஜராஜனென்றும் சொல்வார்கள். இவ்வரசன் தமிழகம் முழுவதும் அடிப்படுத்திச் சக்கராதிபதியாக வாழ்ந்துவந்ததோடு சிறந்த சிவபத்திமானுமாவான். அதனாலே இச்சேக்கிழார் குடியினரும் தம்மருமைப் புதல்வனுக்கு அரசனது பெயரை யிட்டனர். இப்பிள்ளைக்குப் பிறகு இச்சேக்கிழார் குடியினருக்கு மற்றுமொரு பிள்ளை பிறந்தது. அதற்கு அவர்கள் பாலறுவாயரெனப் பெயரிட்டனர்.[2]

இவ்விரு குழந்தைகளும் போற்றப்பட்டுச் சீருஞ் சிறப்புமாய் வளர்க்கப்பட்டு வந்தன. அக்கால வழக்கப்படி ஐந்துவயதானவுடன் பிள்ளைகள் பள்ளியில் வைக்கப்பட்டு கல்வி பயின்று வந்தன. காலந்தோறும் கல்வியும் வேறுபடுவது இயல்பு. அதனையனுசரித்தே இப் பிள்ளைகளும் கல்வி பெற்றன எனக்கூறுதல் மிகையாகாது. சிலர் எழுதப் படிக்கத் தெரிந்தாற் போதுமென நினைப்பதுண்டு.

---

[1] அலைபுரியும் புனற்பொன்னி யாறுடை சோழனருண்மொழிக்கு யாண்டிருபத் தொன்ற வதென்றுங்—திருமலைக்கல்வெட்டு.

[2] **சேக்கிழார் சுவாமிகள் சரித்திரம்** என்ற வசன நூலிலே அருண்மொழித்தேவரது பெற்றோருக்கு முறையே, வெள்ளியங்கிரி முதலியாரென்றும், அழகாம்பிகை யென்றும் பெயரென்று எழுதப்பட்டிருக்கிறது. அதற்கு ஆதாரமொன்றும் தெரியவில்லை.

சிலர் அதனோடு தங்கள் காரியங்களைச் செவ்வனே நடத்தக்கூடிய அறிவு வேண்டுமென விரும்புவதுண்டு. வேறு சிலர் தம்மக்கள் கூர்த்த அறிவினரா யிருக்கவேண்டுமென்றும், அவையிலே முன்னிடம் பெறக்கூடியவராகத் தம் பிள்ளைகள் ஆகவேண்டுமென்றும் விரும்புவதுண்டு. பொதுக் கல்வியோடு சமயக் கல்வியும் இருக்கவேண்டுமென வேறு சிலர் விரும்புவர். அக்கூட்டத்தினைச் சேர்ந்தவர் இச் சேக்கிழார் குடியினர். தம்மக்கட்குப் போதிய பொதுக்கல்வி பயிற்றுவிக்கத் தகுதியான ஏற்பாடு செய்திருந்ததோடு சமயக் கல்வியும் தன்னுலியன்றவரை பயிற்றுவித்திருந்தார். இவ்வுண்மை சேக்கிழார் சுவாமிகள் பெரிய புராணம் பாடிய புலமையால் விளங்கும். அருண்மொழி பிறப்பதற்கு சில வாண்டுகட்கு முன்னர்த்தான் அப்பர், சம்பந்தர், சுந்தரரென்னும் சைவப் பெரியார் திருவாய் மலர்ந்தருளிய திருப்பாட்டுகள் வெளிப்படுத்தப்பட்டன. அவற்றைச் சைவ நன்மக்கள் வெகு ஆவலோடும் ஆர்வத்தோடும் அன்போடும் கற்பாராயினர். அத்திருமுறைகள் பலபடி யெடுக்கப்பட்டன. இப்பிள்ளைகளும் தேவாரத் திருமுறைகளை நன்கு ஓதியுணர வைக்கப்பட்டிருந்தனர். இவைகளோடு நம்பியாண்டார்நம்பி பாடிய திருத்தொண்டர் திருவந்தாதி முதலிய சைவ சமயாசார நூல்களையுங் கற்றறிந்தனர். ஆகவே இவ்வருண்மொழியும் அவரது இளவலான பாலறாவாயரும் நல்லறிவுச்சுடர் கொளுத்துவதற்கான கலைகளோடு சமயக் கல்வியைப் பெருக்குவதற்கான நூல்களையுங் கற்றிருந்தனர்.

# 3. அமைச்சு

அக்காலத்திலே அரசாண்ட அரசர் தம் குடிகளுள் கல்வி, அறிவு, ஒழுக்கங்களிற் சிறந்திருப்பவர்களையே தம் மதி யமைச்சராக அமைத்துக்கொள்வது வழக்கம். அதற்காக ஒற்றர் தூதுவர்களையேவி நாட்டிலுள்ள நன்மக்களை யறிந்துகொள்வர். பின்னர் அவர்களுள் சிலரை வர வழைத்துத் தம்மிடத் திருத்திக்கொண்டு பலவிதத்திலும் பரிசோதனை செய்து பார்க்க அவர்கள் அச்சோதனையில் தேறுவார்களாயின் அன்னாரைத் தமக்கு மந்திரிகளாகச் செய்துகொள்வர். அவ்வாறே அருண் மொழியினது திற மையை ஒற்றரால் அறிந்த அரசன் அவரை இராச சமூகத் துக்கு அழைத்துவரச் செய்து சோதனையில் வைத்திருந் தான்; அவரது நற்குண நற்செய்கைகளைக் கண்டு மந்திரி பதவியைக் கொடுத்தான். அவருக்கு 'உத்தம சோழப் பல்ல வன்' என்ற பட்டமும் அளித்தான் அரசன்.

உத்தமசோழ பல்லவன், மூவேந்த வேளான், தென்ன வன் பிரமராயன், மும்முடிச்சோழ பிரமராயன், பிரமாதி ராஜன் பல்லவராயன், தொண்டைமான் போன்ற பட்டங் கள் அரசரால் தம்மமைச்சருக்குக் கொடுக்கப்படுவன வற்றுள் சில. இப்பட்டங்களெல்லாம் போரில் தலைமை யாக நின்று வெற்றி பெற்றவர்கட்கும் அமைச்சருள் தலைமையானவர்கட்கும் வழங்கப்படுவன. மும்முடிச்சோழ பிரமாதிராயன், தென்னவன் மூவேந்த வேளான், இராஜ ராஜ மூவேந்தவேளான் என்பன போன்றவை இராஜ ராஜன் காலத்து வழங்கிய பட்டங்கள். இராஜராஜ னுக்கு மும்முடிச் சோழனென்றொரு பெயருண்டு. அது போல் அவன் மகன் இராஜேந்திரனுக்கு உத்தமசோழ னென்றொருபெயர். அப்பெயராலே சேக்கிழாருக்கு உத் தம சோழப் பல்லவன் என்ற பட்டம் வழங்கினான்.

அருண்மொழி உத்தமசோழப் பல்லவன் என்ற பட்டத்தோடு நல்லமைச்சாய் நாட்டின் நன்மைக்கான காரியங்களைப் பார்த்துக்கொண்டு வந்தனர். வினை வந்துழிப் பகைவர்க்குத் துணையாயினாரை அப்பகைவரின்று பிரித்தும், தம்பாலாரை, கொடை இன்சொல் முதலியவற்றான் சேர்த்துப் பேணிக்கொண்டும், தம்மினின்றும் வேறுபட்டுப் பிரிந்தாரை மீண்டும் சேர்த்துக்கொண்டும் ஆட்சியைச் செவ்வனே நடத்தி வந்தார். இவருடைய ஆளுகையின் திறனைக் காட்டக்கூடிய சான்றொன்றும் கிடைத்திலதெனினும் இவர் 'அறிந்து சொல்லியாரது அறிவையுமழித்து அரசன் தானுமறியாது செய்யின் அக்குற்ற நோக்கி யொழியாது அவனுக்கு உறுதியாயின கூறுதல் அமைச்சன் முறைமை என்பதை நிரூபிக்கத் தக்க வழியில் நடந்துளாரென்று கூறத்தக்க சான்று ஒன்று உளது. அரசன் பொய்க் கதைகளைக் கேட்டு மதிமயங்கி நின்றவிடத்து அவனை இடித்துரைத்து நல்லாற்றுப்படுத்து மாற்றலிருந்ததெனக் கேட்கப்படுதலினால் அவரது அமைச்சு முறைமையும் இன்ன படித்தா யிருக்குமென ஒருவாறு மனக்கண் கொண்டு அறியலாம். அரசன் அறிந்தேனும் அறியாதேனும் சில வேளைகளில் தீநெறியிற் செல்லுவான். அவனுக்குத் தான் செய்யப்புகுந்த காரியம் நன்மை பயக்கும் தீமை பயக்கும் அல்லது இழிவை யுண்டாக்குமென் றறிந்துகொள்ளப் போதிய அவகாசமிராது. ஆதலினாலே அமைச்சராயிருப்பவர் அரசன் செய்யப் புகுந்த காரியத்தையறிந்து, அது அரசனுக்கும், குடிகளுக்கும் நன்மை பயக்குமாவென்று ஆராய்ந்து பார்ப்பர். நன்மை பயவாதென அறிவாராயின் அரசன் அக்காரியத்தில் முனைந்து செல்லாதபடி தடுப்பர். அருண்மொழியான உத்தமசோழப்பல்லவராயரும் அவ்வாறு செய்தார்.

அக்காலத்தில் அரசன் மண்ணாசையினால் வேற்று நாடுகளை யடிப்படுத்த வேண்டுமென்ற அவாவுடையவ

னுகப் போரிலே நாட்டமுடையவனு யிருந்தான். அரசன் அயல்நாட்டாரோடு பொருவதே தொழிலாக இருந்ததால் நாடாட்சி இவரையே சார்ந்தது. அக்காலத்திலே வேறு ஒரு விதமான துன்பமும் மக்களனுபவித்ததாகக் கேட்கப் படாமையாலே இவரது நாடாட்சித் திறனும் குடிகள் மாட்டுவைத்த அன்பும் ஒருவாறு விளங்கும்.

---

## 4. பக்திப் பெருமை

அருண்மொழித் தேவராகிய சேக்கிழார் பெருமான் சமயத்திலே சைவராவர். சமயமென்பது ஒருவன் ஆராதிக்குந் தெய்வத்தினை நோக்கிக் கூறுவதாகும். மிக்க அறிவுடையோனும் தன்னைப் படைத்த கடவுள் ஒருவருண்டென்று கூறுவானே யன்றிக் கடவுளில்லை யென்று கூற மாட்டான். அவ்வாறு கடவுளென ஒருவருண்டாயின் அவருக்கும் மக்களாகிய நமக்கும் என்ன உறவு உண்டென ஆராய்வோமாயின் அவருடைய அருளுக்கு நாம் பாத்திரமாக முயலுவதே யாகுமென அறிவோம். இந்நாட்டிலுள்ள மக்கள் 'எல்லாம் கடவுள் செய'லென நம்பும் இயல்புடையவராகலின் அந்நம்பிக்கையைப் பெற வழி எதுவெனத் தேடுவது மக்கள் இயற்கை. அவ்வாறு வழி தேடுபவர்கள் தாம் தாம் வழிபடுங் கடவுளை யொரு மங்களகரமான பெயரிட்டழைப்பர். இந்நாட்டிலே யொரு சாரார் தாம் வணங்கும் கடவுளுக்கு மகேசுரன், சிவபெருமான் என்று பெயரிட்டுள்ளார். அவரைத் தலைமைத் தெய்வமாக வழங்கும் சமயத்துக்குச் சைவ சமயமென்று பெயர்.

இச்சைவ சமயமாவது 'வெகு புராதனமானதென ஒரு சாராரும், வேத காலத்திலிருந்து வந்ததென ஒரு சாராரும் கூறுவர். தென்னாட்டிலே வாழ்ந்த மக்கள் ஒரு குறியுமின்றித் தத்துவாதீதமான எல்லாங் கடந்த, மன

துக் கெட்டாத ஒரு பொருளை வணங்கி வந்தனரென்றும் அதுவே நாளடைவில் சிவபெருமானெனப் பெயர் பெற்றதென்றும் கூறுவர் ஒருசாரார் வேதத்திலே கேட்கப்படும் உருத்திரப் பெயருடைய தெய்வம் பயத்தைக் கொடுக்கக்கூடியதாயிருந்து நாளடைவில் பல வேண்டுகோள்களாலும், பிரார்த்தனைகளாலும் திகழ்ந்து வேண்டியவற்றை யளிக்க வல்லமையுடையதாக மாறிற்றென்றும், அது நாளடைவில் பல பெயர்களைப் பெற்றது என்றும் கூறுவர். அதன் தோற்ற மெவ்வாறாயினும் நம்முடைய சரித்திர புருடரான அருண்மொழித் தேவராகிய சேக்கிழார் வாழ்ந்த காலத்துக்கு முன் சைவ சமயம் எவ்வாறிருந்ததெனக் கவனிப்பாம்.

அது சைவசமயாசாரியரென்று சொல்லப்படும் அப்பர், சம்பந்தர், சுந்தரராகிய தேவாரத் தலைவர்களும் மாணிக்கவாசகரும், மற்றைய திருவிசைப்பா திருப்பல்லாண்டு முதலிய நூல்களின் ஆசிரியரும் தோன்றியகாலம். அவர்கள் மற்றைய சமயங்களைவிட சைவசமயமே உயரியது; அதன் அதிதெய்வமாகிய சிவபெருமானைச் சரியை, கிரியை, யோகம் ஞானமென்கின்ற நான்குவழிகளிலும் தொண்டாற்றி அவரது அருளைப் பெறக்கூடும் என்றும் சிவபெருமானிடத்தும் அவருடைய அருள் பெற்றாரிடத்தும் அன்பு பூண்டொழுகியும் அருளைப் பெறலாமென்றும் கூறியதோடு, அன்புகனிந்த தோத்திரப் பாக்களையும் பாடினர். இப்பாக்கள் முறையாக மக்களால் இன்னிசையோடு ஓதிவரப்பட்டன. கோயில்களிலும் இசையோடு இவைகளை ஓத ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இவ்வாறு அன்பே சிவம் என்பதாகச் சைவசமயம் தழைத்தோங்கி வளர்ந்துவந்தது. காலம் செல்லச்செல்ல அத்தேவாரப் பதிகங்களும் பிறவும் அருகத் தலைப்பட்டன. எனினும் சைவசமயப்பற்று குறையவில்லை. பின்வந்த சோழ அரசர்கள் சைவர்கள். அவர்களுட் சிலர் தமிழில் வல்ல

வரா யிருந்ததோடு அவர்கள் பாடல்களும் சைவத்திரு முறையிற் கோக்கப்படும் பெருமை வாய்ந்தனவாக விருந் தன. பின்வந்த சோழனொருவன் தேவாரத் திருமுறை களை வெகு பிரயாசைப் பட்டுத் தேடியெடுத்து மூவர் முதலிகளது பெருமை விளங்கும்படி செய்தான். அவன் சிவபதம்பெற்று வெகுகால மாகிவிடவில்லை. தமிழ்நாட்டி னர் இத்திருமுறைகளைப் பேணிவந்ததோடு அவற்றி லுள்ள பொருள்களையும் நன்கறிந்தனர். இவைகளெல் லாம் சைவசமயம் வளர்வதற்கு ஆதரவாக விருந்தன.

உத்தமசோழப் பல்லவரான அருண்மொழித்தேவர் மேற்கூறியாங்குச் சைவசமயம் உயரியநிலை யடையுங்காலை யிற் றோன்றியவர். அவரும் சைவ சமயத்தவர்; சமய நூல்களைச் செவ்வனே கற்றவரென்று முன்னரே கூறி யிருக்கின்றோம். இவைகளே பிற்காலத்தில் இவர் பெயர் என்றும் நின்று நிலவுவதற்குக் காரணமாகவிருக்கும் நூலைச் செய்வதற்கு உதவியாயின. ஒவ்வொரு சிவதலத் தில் அன்பு உண்டாவது மனித இயற்கை. அதுபோலவே இவரும் கும்பகோணத்துக் கடுத்த திருநாகேசுரத்து எழுந் தருளியுள்ள பெருமான்மீது ஆரா அன்புடையவரானார். அவ்வன்பு முற்ற முற்ற, தம் பிறப்பகமான குன்றத்தூரி லும் ஒரு கோயிலெடுக்க வேண்டுமெனத் தீர்மானித்தார். ஊருக்கு வடகீழ்க்கோடியில் ஒரு கோயிலெடுத்து அதற் கும் திருநாகேசுரமெனப் பேரிட்டார். தஞ்சைத் திரு நாகேசுரத்துச் சிவபெருமானுக்கு நித்தபூசையும், அதிகப் படி விசேட பூசையும் நடப்பது போலவே குன்றத்தூர் திருநாகேசுரப் பெருமானுக்கும் நித்த பூசை முதலியவை ஏற்படுத்தினர். அதற்காக வேண்டும் பொருளையும் நிலங் களையும் வைத்தார். அவற்றைக் கண் காணிக்கவும் பரிபாலிக்கவும் மடவளாகத்தையும் உண்டாக்கினார். திரு விழாவைச் சிறப்புற நடத்தினார். அவர் ஏற்படுத்திய சிவாலயமும் மடவளாகமும் வளர்பிறைபோல வளர்ந்து

இன்றும் நின்று நிலவுகின்றது. இஃதொன்றே இவரது பக்திப் பெருக்கைக் காட்டப் போதியசான்றாய் நிற்கின்றது.

இங்ஙனம் இவரது கடவுள் பக்தி இவ்வாறிருக்க, அடியார் பக்திகளின் நிலையைச் சிறிது ஆராய்வாம். அடியார் பக்தியாவது சிவபெருமானிடத்துக் காட்டும் பக்தியை போல அவரது அன்பர்களிடத்தில் காட்டும் பக்தி. சிவபெருமானது தொண்டர்கட்கு அடியாரென்பது பெயர். இவர் அடியாரிடத்து வைத்திருந்த பத்திப் பெருமையை இவரியற்றிய பெரிய புராணத்துள் பார்க்கக் காண்கின்றோம். இவர் எவ்வாறு சிவபெருமானிடத்து அன்பு பூண்டொழுகுவரோ அவ்வாறே அடியார்களிடத்தும் அன்புடைவரென்பது இவர் அடியார்களைக் கூறுமுறையினின்றும் அறிந்து கொள்ளலாம். இதனைக் காட்ட இரண்டோர் உதாரணம் காட்டுவோம்.

கண்ணப்பநாயனார் புராணத்திலே கண்ணப்பர் திருக்காளத்தி மலையைக் கண்டமாத்திரத்திலே அவருக்கு மிக மிகப் பெரிதான ஆசை மேன்மேலும் பொங்கிற்று. அவ்வன்புடைவள்ளல் திருக்காளத்தி மலையைப் பார்த்தமாத்திரத்திலே என்பும் நெகிழ்ந்து உருக மனத்திலே உண்டாகும் அளவு கடந்த ஆசையோடும் மலையிலே யேற முற்பட்டார்1 என்றும், மலையின் மேலே சென்று குடுமித்தேவராம் திருக்காளத்தி நாதரைக் கண்டபோது, வெகுநேரம் பெருமூச்சுவிட்டுக்கொண்டுநின்றுவிட்டுஉடம்பிலேமயிர்க்கால் ஒவ்வொன்றும் நிமிர்ந்து நிற்க மகிழ்ச்சி மேன்மேலுண்டாக மலர்போன்ற அழகிய கண்ணினின்றும் ஆனந்தத்தாலுண்டான நீரானது அருவிபோலப் பாய நின்று அடிமைக்கு இந்தக் கடவுள் அகப்பட்டது மிக அதிசய

1 மன்பெருங் காதல் கூர வள்ளலார் மலையை நோக்கி
யென்பு நெக்குருகி யுள்ளத் தெழுபெரு வேட்கையோடும்.

மாகுமென்று சொல்ல இப் பூமண்டலத்தி லொருவருக்கு முண்டாகாத பரிவே இவருக்கு வடிவமாகத் தோன்றிற்று[1] என்றும் கூறியுள்ளார். அவ்வாறாயினும் சிவபெருமானது அருளிருந்தாலன்றி மக்கள் கடைதேறமாட்டார்களென்பதையுங்காட்ட, கண்ணப்பர் 'காளத்தி மலையேறிக் கடவுளைக் கண்டமாத்திரத்திலே அவர் திருநோக்கால் முன் செய்த வினைகளெல்லாம் பறந்தோடின;[2] அவரும் அன்புருவமானார்' என்கின்றார். இஃதன்றி, சண்டேசுர நாயனார் புராணத்திலே பிரமசாரி 'முன்னாள் செய்த நல்வினையின் பயனாக விளையாட்டாக எம்பெருமான் பூசனையை ஆரம்பிக்க, அது மேன்மேலும் வளர்ந்தெழும் அன்பின் பெருக்கமாக, சிவபெருமான் திருமுடி மீது வாசனையுடைய மாலைகளைச் சாத்தித் திருமஞ்சனமாகப் பசுக்கள் தாமே வந்து கறந்த மிக்க மதுரம் பொருந்திய பாற்குடங்களையெடுத்து ஆட்டிவந்தார். இவ்வாறு இவர் சிவபெருமானை வழிபட, அதனாலே அவரிடத்து அன்பு உண்டாகும் பரிவும் முன்னாட் செய்த பயனும் சேர, சிவசாயுச்சியத்தையடையத் தகுதியடைந்தாரென்ற பெருமை வெளிப்படவும், சிவபெருமானது கருணையாமிதுவென்று சொல்லவும் தன் வசமழிந்து பூசை புரிந்தார்'[3] என்று கூறுகின்றார். இவ்வாறு அடியார்களைக் கூறும் பண்புக்கும், அவர்களிடத்து வைத்த அன்புக்கும் எடுத்துக் காட்டுக்கள் பல கொடுக்கலாம். ஆகவே இவரது பக்தியின் பெருமையை இவைகளினின்றும் ஒருவாறு அறியலாம்.

---

1 நெடிதுபோதுயிர்த்து நின்று நிறைந் தெழுமயிர்க்காலூறும்
வடிவெலாம் புளகம் பொங்க மலர்க்கணீ ரருவிபாய
அடியனேற்கிவர் தாமிங்கே யகப்பட்டாரைச்சோவென்று
படியிலாப்பரிவுதானோர் படிவமாம் பரிசுதோன்ற 106.

2 கண்ணப்பர் 104.

3 சண்டேசுர நாயனார் புராணம் 47. 58.

## 5. பெரியபுராணம் இயற்றிய வரலாறு.

உத்தமசோழப் பல்லவராகிய அருண்மொழித் தேவர் 'சென்னி குலோத்துங்கன் அநபாய சோழனுக்கு முதன் மந்திரியாய் அவனது நாட்டின் காரியங்களைத்' தமதாக நினைத்துக் கற்றோரும் மற்றோரும், பகைவரும் நண்பரும், உற்றாரு மற்றோரும் போற்றி யேற்றுமாறு அரசுமுறையை நடத்திவருங் காலத்திலே அரசன் கவலையின்றித் தன்காலத்தைக் கலாவினோதத்தில் கழித்து வந்தான். அக்காலத்திலே 'சிலப்பதிகாரம், பாரதம் போன்ற உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுட்களும், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை முதலிய சங்க நூல்களு மிருந்தனவேனும், காலத்தை யறிவுவழியிற் செலுத்தாதது வினோதமாகவும், மகிழ்ச்சியாகவும் போகக்கூடியதாக விருந்தது சீவகனது சரித்திரமான சிந்தாமணி யென்ற நூலாம். இது திருத்தக்க தேவரென்ற சைனமுனிவராலியற்றப் பட்டதொருநூல், காவியரசனை யெல்லாம் அமையப்பெற்றது. அக்குலோத்துங்கசோழன் பல பாவலர்களோடு கூடி இந்நூலைப்பதித்துக் காவியரசனையையடிக்கடியனுபவித்துக் கொண்டிருந்தான். அமைச்சருக்கு எங்கு தன்னரசன் அருகமதத்தைத் தழுவிவிடுவானோவென்ற பயம் உண்டாயிற்று. அவ்வாறு அரசன் புறச்சமயம் புகாவிடினும் அச்சமயத்திற் பற்றுண்டாயின் சைவசமயத்துக்குக் குறை யேற்படக்கூடுமென்றெண்ணினார். ஆதலினால் இவர் அரசன் வழுவியவழி அவனை இடித்துரைத்து நல்லாற்றுப்படுத்த வேண்டியது தம் கடமை யென்றெண்ணினார். எண்ணின எண்ணத்தை நிறைவேற்றுபவனே நல்லமைச்சனாகலின், இவர் அரசனிடம் சென்று அவன் இப்பொழுது அநுபவித்துவரும் காவியவின்பம் அவலமானது, இம்மைக்குமாகாது மறுமைக்குமாகாது; நெல்லிருக்க உமியைக் குற்றிக் கையிளைப் பாரில்லை யென்று அவனுக்கு எடுத்துக்காட்டினர். அரசன்

அவ்வாறாயின் இம்மைக்கும் மறுமைக்குமாகும் கதைகளு முண்டோவென்று கேட்க, 'சைவசமயத்தில் பலபெரியார் விளங்கியிருந்து சிவபெருமானது திருவடிநீழலை யடைந் தனர்' என்று கூற, 'அங்ஙனமாயின் அவர்கள் வரலாற் றினைச் சொல்லுக' வென்று கேட்டனன், அமைச்சர் பெருமானாரும் சுந்தரமூர்த்திநாயனார் சொல்லிய திருத் தொண்டத்தொகை யடைவைப்பிடித்து நம்பியாண்டார் நம்பி செய்த திருத்தொண்டர் திருவந்தாதி யினைக் கொண்டு நாயன்மாருடைய சரித்திரங்களைச் சுருக்கமாகக் சொன்னார். அவருள் கூன்பாண்டியனாயிருந்து தன்னைச் சுற்றியிருந்தாரால் புறச்சமயம் புகுந்து அல்லற்பட்டு சைவசமயம் புகுந்ததனால் நின்றசீர்நெடுமாறநாயனார் ஆனவரின் புராணத்தையும் அழுத்தமாகக் கூறினார். இவைகளைக் கேட்ட அரசன் மகிழ்ச்சிப் பெருக்கடைந்து இவ்வளவு பெருமை பொருந்திய செய்திகள் நாடெங்கும் விளங்கச்செய்யவேண்டும். அச்செய்திகளை யெல்லாம் ஒருசேரத் திரட்டிப் பெருங்காவியமாக இயற்ற வேண்டுவது அவசியமாகுமெனச் சொன்னான். இப் பெருங் காவியத்தைச் செய்தற்குத் தமது பேரமைச்சரான சேக்கிழார் பெருமானாரே தகுதியுடையாரென முடி விட்டான். அவ்வாறே செய்துமுடிக்குமாறு அமைச்சர் தலைவரை வேண்டினான்.

அரசன் வேண்டுகோட்கிணங்கிய உத்தம சோழப் பல்லவரும் ஒருப்பட்டு அதனை இயற்றத் தகுதியானவிடம் தேவாரத் திருமுறைகள் தேடி யெடுக்கப்பட்ட பொன் மாளிகையான சிதம்பரமே ஏற்றதென உட்கொண்டு அரசனுக்கு அதனை அறிவித்தார். அரசனும் அதற் குடன்பட்டு அமைச்சர் பெருமானுக்கு வேண்டிய நிதியத் தோடு அப்பணிக்குத் தக்க பணியாளரையும் நியமித் தான். விடைபெற்று அமைச்சரும் சிதம்பரத்தைச் சென் றடைந்தார்.

அங்குச் சென்று சிவபெருமானது திருவருட்டிறத்தையும், அடியார்களது பெருமையையும் பக்தியையும் அறிந்தவாறு எழுதவேண்டியதற்காக அவர்கள் விளங்கிய ஊர்களையும், அவர்களது வரலாறுகளையும் பின்னும் செவ்வனே ஆராய்ந்தறிந்தார். மூவர் முதலிகள் அருளிய தேவாரங்களை யாராய்ந்தார். அவருக்குத் தோன்றியவைகளையும், கேட்டவைகளையும் ஒருங்குசேரத் திரட்டி, 'நாள் செய்வது நல்லோர் செய்யார்' என்னும் பழமொழிக்கிணங்க நல்ல நாளிலே சிவபெருமானது சந்நிதியையடைந்து இந்நூலை யாரம்பித்தற்குத் திருவருள் கூடவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். இப்பொழுது முதற் செய்யுளாகவும் காப்பாகவும் உள்ள பாட்டின் முதற்சீரான 'உலகெலாம்' என்றசீர் அச்சமயம் அசரீரியாகக் கேட்டது என்று புராணம் கூறும். 'உலகெலாம் என்று தொடங்கி, சுந்தரமூர்த்திப், பெருமானது திருத்தொண்டத் தொகையைப் பதிகமாகக் கொண்டு தாம் சிறந்த விரி நூல் ஒன்று பாடினார்.

இந்நூலைச் சித்திரை மாதம் திருவாதிரை நாளிற் றொடங்கி மறு ஆண்டு சித்திரைம்தி ஆதிரை நிறைய விருத்தப்பாவால் பாடி முடித்தார். இலக்கணவமைதி தவறாமலும் காவியச் சுவை கெடாமலும் புராணம் இன் சுவை பெற இனிது நிறைவேறிற்றென்ற செய்தி அரசன் செவிக் கெட்டியது. அதனையறிந்த அரசன் தன் பரிவாரம் புடைசூழ சிதம்பரக்ஷேத்திரத்தை யடைந்தான். நாவலர் பெருமானாக விளங்கும் சேக்கிழார் பெருமானும் எதிர்கொண்டு அரசனை வரவேற்று உபசரித்தார். நூல் இனிது நிறைவேறிய செய்தியைக் கேட்ட அரசன் ஆநந்த பரவசமடைந்து நல்லோரையிலே நடராசப் பெருமான் சந்நிதியிலே அதனை அரங்கேற்றம் செய்வித்து, நாவலர் பெருமானையும் நூலினையும் யானைமேலேற்றி ஊர் வலஞ் செய்வித்தான். கூத்துகந்த பெருமானது திருமுன்னர்

அந்நூலினைக் கொணர்ந்து திருக்களிற்றுப் படிமேல் வைத்ததும் முன்னமே யமைச்சர் தலைவராயிருந்து உத்தம சோழப் பல்லவன் என்ற பட்டத்தினை யுடைய நாவலர் பெருமானுக்குத் 'தொண்டர் சீர் பரவுவார்' என்ற பட்டமுமளித்து உபசாரம் செய்தான்.

அன்று முதல் அவரைத் தொண்டர்சீர் பரவுவாரென்ற பெயராலும், அவருடைய குடிப்பெயரான 'சேக்கிழார்' என்ற பெயராலும் மாந்தர் மகிழ்ந்து கூறுவாராயினர். அவரும் தாமியற்றிய பெரியாரது சரித்திரங்களடங்கிய திருத்தொண்டர் புராணத்தைப் படித்து பொருள் விரித்துரைத்துக்கொண்டும், சிவபெருமானது தொண்டில் ஈடுபட்டும் காலங்கழித்து வந்தார். இவ்விதமாக வாழ்ந்து வந்த சேக்கிழார் சிதம்பரத்திலேயே சிவபெருமானது திருவடிநிழலை யடைந்தார்.

---

## 6. பெரியபுராணத்துக்கு ஆதாரங்கள்

சேக்கிழார் பெருமான் பெரியபுராணம் பாடப் பெருஞ் சாதனமாயிருந்தது தேவாரத் திருமுறைகளாகும். இவர் அத்திருமுறைகளை நன்குகற்று அவற்றைச் செவ்வனே அறிந்திருந்தாரென்று 'கல்வி' என்ற தலைப்பின்கீழ் முன்னரே குறிக்கப்பட்டது. ஆசிரியரே திருமலைச் சிறப்பினீற்றில், 'இதற்குப் பதிகம் வன்றொண்டாதாம் புற்றிடத் தெம்புராணர் அருளினாற் சொற்ற மெய்த் திருத்தொண்டத் தொகை' யெனச் சொல்லி, 'நம்பியாண்டார் நம்பி புந்தியாரப் புகன்ற வகையினால், வந்தவாறு வழாமலியம்புவாம்'' என்று சொன்னாராயினும், அவை ஒரு சிறிதளவே உதவியாயிருந்தன வென்பதை இரண்டொரு உதாரணங்களால் காட்டுவாம்.

சைவசமயத்துக்குப் புறச்சமயமாகிய பௌத்த மதத்திற் புகுந்த சாக்கியநாயனாரை எடுத்துக்கொள்

வோம். இந்நாயனாரைப்பற்றித் திருத்தொண்டத் தொகையிலே, 'உமையம்மையாரைப் பக்கத்தேயுடைய சிவபெருமானது திருவடிகளை மறவாது கல்கொண்டெறிந்த சாக்கியர்க்கும் அடிமை[1] யென்று காணப்படுகின்றது. அப்பர் திருக்குறுக்கைப் பதிகத்தில், 'சாக்கிய நாயனார் கல்லெறிந்த பின்னரே தாமுண்ணும் வழக்கமுடையார்; அவரை நெற்சோறுண்ணுமே அமுதுண்ட தேவர்களது விசும்பை யாளவைத்தார்'[2] என்றும், திருவீழிமிழலைத் திருத்தாண்டகத்தில், 'புத்தன் எறிந்த கற்களெல்லாம் அன்றுபூத்த நாண்மலர்களாகச் செய்தான்'[3] என்றும் தோத்திரஞ் செய்தார். இதனை நம்பியாண்டார் நம்பி, 'தகடன ஆடையணிந்த சாக்கியன் பெருங்கல்லான கைலையங்கிரியிலே உமாதேவி தன்னைத் தொடலாற் குறைந்த திண்ணிய தோளையுடைய சிவபெருமானை ஏகம்பனது அழகிய திருமேனியிலே செங்கல்லாலடித்துச் சிவபெருமானதுலகில் புகுந்து நற்கதிபெற்றான்; அப்படிப் பட்டவன் பிறந்தவூர் சங்கமங்கையா'[4] மென்றார். இவைகளை மனத்திற்கொண்டு சேக்கிழார் சுவாமிகள் 18ச் செய்யுளிலே புராணத்தை விரிவாகக் கூறினார்; முதற்பாட்டில் அவையடக்கமாகத் தாமறிந்தபடி இக்கதையைச் சொல்வேனென்றார். இரண்டாவதுபாட்டிலே மேற்குறித்தபடி சங்கமங்கை யென்னுமூரில்வேளாளர் குலத்திலேபிறந்து சீலமுடையராய் ஒருவர் வாழ்ந்து

1. வார்கொண்ட வனமுலையா ளுமைபங்கன் கழலே
மறவாது கல்லெறிந்த சாக்கியர்க்கு மடியேன்.

2. கல்லினாலெறிந்து கஞ்சிதா முண்ணும் சாக்கியனார்
நெல்லினாற் சோறுண்ணுமே நீள்விசும் பாளவைத்தார்.

3. புத்தனெறி சல்லி புதுமலர்க ளாக்கினான்காண்.

4. தகடன வாடையன் சாக்கியன் மாக்கற் றடவரையின்
மகடனந்தாக்கக்குழைந்ததிண்டோளர்வண்கம்பர்செம்பொன்
றிகழ்தரு மேனியிற் செங்க லெறிந்து சிவபுறத்துப்
புகழ்தரப் புக்கவ னூர்சங்க மங்கை புவனியிலே.

வந்தாரென்றார். தான் நன்ஞானம் பெறுதற்கேற்ற ஊர் காஞ்சிமாநகரமென்று தெளிந்து அந்நகரை யடைந்து அவர் அங்கே சாக்கியர் சொல்லிய அறநெறியிற் புகுந்து நின்று அந்நெறி தவாப்பிறப்பீனு மார்க்கமல்லவென்று கண்டு, அதனைவிட்டுச் சன்மார்க்கத்தைத் தேடுவாரா யினார் என்று மூன்றும் பாட்டிற் குறித்தார். புறச் சமயங்கள் நல்வழி யளிக்கவல்லன அல்ல வென்றும் சிவநெறியே மேலான தென்று மறிந்தாரென்று நான்காவது செய்யுளிற் கூறினார். செய்வினையும், செய்வானும், வினைக்குத்தக்க பயனும், அதனை யனுபவிக்கக் கொடுப்பானும் வேறுவேறென்றும், இவைகளே சைவசமயத்தின் அடிப்படையான கொள்கைகளென்றும், இவற்றை நடத்துவிப்பவனே சிவபெருமானென்ற தனது துணிவும், சைவ சமயத்தின் அடிப்படையான கொள்கைகள் இவையாமென மக்கள் அறிதற்பொருட்டும் இடமறிந்து ஐந்தாவது செய்யுளிற் காட்டினார். ஆறு ஏழாவது செய்யுட்களில் இவர் சாக்கியர்களது கோலத்தோடு நின்றமையை நாயன்மார்களும் நம்பியும் கூறியதை மனத்திற் கொண்டு, 'எந்த நிலையில் நின்றாலும், எக்கோலங் கொண்டாலும் வேண்டுவது ஈசன்றாள் மறவாமையே' யென்றெடுத்துக் காட்டினார். எட்டு ஒன்பதாவது விருத்தங்களிலே வாக்கின் மன்னவனார், 'கல்லினால்லெறிந்து கஞ்சி தாமுண்ணும்' என்று கூறியதை மனத்திலுட்கொண்டு, அருவுக்கும், உருவுக்கும் காரணமென்பதும் ஒருவராலு மறியப்படாதவ ரென்பதுந் தோன்ற வெழுந்த தழற்பிழம்பின் அறிகுறியாவது சிவலிங்க மென்று கண்டு அதனைப் பூசித்துண்ணும் வழக்கங் கொண்ட படியினாலே சிவலிங்கத்தைக் தேடிச்செல்ல, வழியிலே சிவலிங்கமொன்று காண, அதைப் பூசித்தற்கு யாதொன்றுங் காணாராக, பக்கத்திலே செங்கற்சல்லியொன்று கண்டு அதனை யுவகையொடு எடுத்து அச் சிவலிங்கத்தின்மே லெறிந்தாரென்றார். 'புத்த னெறி

சல்லி புதுமலர்களாக்கினன்கா' னென்ற தனையும், கண்ணப்பர் செய்கையும் மனத்திலுட் கொண்டு தம்மக்கள் எது செய்தபோதும் அதனை மகிழ்வுடன் காணுந் தந்தைமாரையும் பிறர் வெறுக்கக்கூடிய காரியமாயினுங் குழந்தைகள் அதனை மகிழ்ச்சியுடன் செய்வ ரென்பதனையும் கூறி, அவ்வாறே சிவபெருமானும் இதனைக் கொண்டாரென்றும் பத்தாவது பாட்டில் சுட்டினர். பதினொன்று முதல் பதினான்கு பாட்டு வரையில் அன்பர் செய்கைகள் எவ்வகைப் பட்டனவாயினும் அவற்றைச் சிவபெருமான் விருப்புட னேற்பனென்றும், கண்ணப்பர் காலைத் தலைமேல் ஏற்கவில்லையோ வென்றும் அஃதேபோல் சாக்கியார் எறிந்த சல்லியு மலராயிற்றென்றுங் கூறினர். பதினைந்தாவது செய்யுளில் மறதியினாலே அடியார் ஒருநாள் சுவாமி தரிசனஞ் செய்யாது உணவு கொள்ளப் புகுந்தார்; புகுந்தவளவிலே தமக்குக் கடவுள் நினைவுவர உடனே வெளிச்சென்றார் என்றார். கடவுளைக் காணப்போனவருடைய மனவுறுதியைக் கண்டு சிவபெருமான் இடபாரூடராய்க் காட்சி தந்து, முத்திகொடுத்தா ரென்று பதினாறுவது பதினேழாவது செய்யுள்களிற்கூறிப் புராணத்தை முடித்தார். எப்பொழுதும் கடைசிப் பாட்டில் அந்த அடியாருக்கு வணக்கங் கூறு முறைப்படி வணக்கங்கூறினர். ஆகவே இதனில் மிகைபடவாவது, கதைப்போக்கைக் குறைத்தாவது கூறினரல்லர்.

மற்றுமொரு கதையைக் கவனிப்போம். நமிநந்தியடிகள் சரிதத்தை யெடுத்துக் கொள்ளுவோம். 'அருநம்பி நமி நந்தி யடியார்க்கு மடியேன்' என்றார் வன்றொண்டார். ஞானப்பாலுண்டார், 'ஆன்மா அறியும்படி பஞ்சாட்சர மான மந்திரத்தை யுச்சரித்துச் சிவபெருமானே எல்லா வற்றையும் செய்பவராகையா லவரே நம்மை யாதரிப்பா ரென்று சொன்ன நமிநந்தி யடிகளுக்குச் சிவபதங் கொடுத்

தவ[1] னென்றார். 'தொண்டரையறிய ஆணிப்பொன் போன்றவரென்றும், தொண்டருக்குக் காணியாக வுடையவரென்றும், தொண்டர் கடவுளுக்கு ஆணியென்றும் பல பெருமைப் பொருள் பயக்கக்கூடிய சொற்களாலே திருவாரூர் நாதன் பெருமை சொல்லி அப்படிப்பட்ட சிவபெருமான் பவனியைப் பங்குனி'யுத்திரத்திலே கண்டவரும் நீராலே திருவிளக்கேற்றியவருமான பெரியோராகிய நமிநந்தி யடிகளை இப்பெரும் நாடெல்லா மறியு[2] மென்றார் வாக்கின் மன்னவனார். 'ஆரூரிலுள்ளவர்க ளெல்லாம் சிவகணங்களாகையால், ஆரூரிற் பிறந்தார்களெல்லார்க்கு மடியேன்' என்றார் நம்பியாரூரர். வாகீசர் 'கொடிகள் விதானம்'[3] என்ற திருப்பதிகத்திலே திருவாரூரிலே யுள்ளா ரெல்லாம் கடவுட்டன்மை யுடையாராயினும் சிவபெருமான் புறப்பாடில் அவர் முன்னே இவர்கள் இருளொப்பரென்றார். ஆரூரிலுள்ள அரநெறியப்பருக்கு அருகர் மனையிற் சென்று விளக்கெரிக்க நெய்கேட்டவிடத்துக் கொடாமையினாலே தெள்ளிய நீரை வார்த்து விளக்கெரித்தவன் ஏமப்பேரூரிலுள்ள நமிநந்தி' யென்றார் நம்பியடிகள். இவற்றாலே விளங்குவன ஏமப் பேரூரிலுள்ள ஒரு வேதியர் திருவாரூரிலுள்ள அரநெறியப்பரிடத்து அன்புடையவராக, திருவிளக்கிட்டு மகிழ்வாராயினார். அத்திருவாரூரில் சமணர் மிகுதியாக விருந்தனர்.

1 ஆவி தனிலஞ் சொடுக்கியங் கணனென்றுதரிக்கும்
நாவிரல்சீர் நமிநந்தியடிகளுக்கு நல்குமவன்

2 ஆராய்ந் தடித்தொண்டராணிப் பொனாரூரகத்தடக்கிப்
பாரூர் பரிபத்தம் பங்குனியுத்திரம் பாற்படுத்தான்
ஆரூர்நறுமலர் நாதனடித் தொண்டனம்பிநந்தி
நீராற்றிருவிளக் கிட்டமை நீணாடறியுமன்றே.

3 கொடிகள் விதானங்கவரிபறை சங்கங்கைவி ளக்கோ
டிடிவில் பெருஞ்செல்வ மெய்துவரெய்திய மூனமில்லா
அடிகளு மாரூரகத்தினராயினு மந்தவளப்
பொடிகொண்டணிவார்க் கிருளொக்கும் நந்திபுறப்பாடிலே.

அவர்களிலொருவரை விளக்குப்போட நெய் கேட்ட போது அவர் கொடுக்க மறுத்தனர். நீரைக்கொண்டு விளக்கேற்றியதும், நடந்த விருத்தாந்தமும் உலகமெல்லாம் அறிவதாயிற்று. இவ்வாறு செய்துவருகையில் அவர் சிவபெருமானது திருவிழாவையும் பங்குனியுத்திரச் சிறப்பையுங்கண்டு ஆநந்தமடைந்தார். அவர் தியாகப் பெருமான் பவனி கண்டு விட்டுத் தம்மில்லத்தை யடைந்த போது, பல மக்களும் கூடின விடத்துத் தாஞ் சென்றமையால் வீழ்ப்புண்டாயிற்றென்று கருதினர். ஆனால் திருவாரூர்ப் பிறந்தாரெல்லோரும் சிவகணங்களாகத் தோன்றினர் என்பதாம். இவ்வரலாற்றினையே சேக்கிழாரடிகளும் கூறினரே யன்றி கூட்டியும் குறைத்தும் கூறினரில்லை.

நமிநந்தியடிகள் புராணம் முப்பத்துமூன்று பாக்களாலாயது. ஆசிரியர் முதற்பாட்டில் ஏமப்பேரூர்[1] சோழநாட்டிலுள்ள தோரூரென்றார். அடுத்த இரண்டுபாட்டில் அவர் அவ்வூரின் வளங்கூறினார். நான்காவது பாட்டில் நமிநந்தியடிகள் அந்தணர் குலத்திலுதித்தாரென்றார். ஐந்தில் திருநீறும் திருவடியுமே துணையென்று அடிகள் கொண்டாரென்றார். அதன்பொருட்டுத் திருவாரூரை யடைந்து புற்றுடைய பெருமானுரை வணங்குதலே பெருமூதிய மெனக்கொண்டு பலநாள் ஒழுகினாரென்று ஆறாவது திருப்பாட்டிற் கூறினர். அடுத்த இரண்டுபாகக்களில் அரநெறிசென்று வணங்கியதும் ஆண்டு விளக்கிடு திருப்பணி செய்ய நினைந்ததும் கூறினர். உடனே நமிநந்தி அப்பணியைச் செய்ய நினைந்து வெளியிற் சென்று ஒருமனையிற் புகுந்து நெய்வேண்ட, அது அருகர் மனையாகலின் அவ்வீட்டினர் கையிற் றீயுடையார்க்குப் பிறிதொரு விளக்கு மிகையென்று ஏளனஞ்செய்ய, அதனைப் பொறுக்காது எம்பெருமான் முன்னின்று ஓலமிட்டார் அடியார்; இடவே 'நீராற்றிருவிளக்கிடுக' என்று வானிழல்

1. இப்பொழுது எமப்பூர் என்று வழங்குகிறது.

கேட்டது என்று 9-12-ல் கூறினர். ஞானப்பாலுண்டா ரும் அப்பரும் கூறியதை மனதில்வைத்து, நந்தியடிகள் குளத்திலேபுகுந்து சிவபெருமானுடைய அஞ்செழுத்தோதி நீரை முகந்து வந்து உலகோ ரதிசயிப்ப அகலுள்பெய்து விளக்கேற்றினர்; அவை நன்றாக எரியவே அதுபோலப் பலநாளுஞ் செய்வாராயினர்; இதனை நாடு எல்லாமறிந்த தென்று 13-17 செய்யுட்களிற் கூறினர். 18-வயது செய்யுளிலே திருவாரூரிலுள்ள அமணரழிந்தனர் என் றார். நாடுகாக்கும் வளவன் புறநிடங்கொண்டார்க்கு வேண்டும் நிபந்தங்க ளமைத்தானென்பது 19-வது செய் யுள். 20-வது திருப்பாட்டு அவர் பங்குனி யுத்திரத் திருநாள் செய்யு முரிமை பெற்றதைக் கூறும். தியாகப் பெருமான் விழாவினீற்றில் திருமணலிக் கெழுந்தருளுவ தைச் சேவித்துவிட்டு, அவர் இல்லமேகி, புறந்திண்ணை யிற் றூங்கியகாலத்தில் மனைவியார் உள்ளே வந்து பூசை முடித்து, அமுதருந்த வேண்டினபோது தம்மைத் தீட்டுத் தொடக்கிற்றாகையான் நீராட நீர் கொணர வேண்டு மென்றார்; நீர் வருமளவும் திண்ணையிலுட்கார்ந்தவர் வந்த அயர்ச்சியாலோ அருளாலோ கண்மூட, சிவபெருமான் திருவாரூரிலுள்ளா ரனைவரும் தமது கணங்களெனக் கனவிற் காட்டினர் என்று 21-27-வது செய்யுட் கூறும். 28, 29-வது செய்யுட்களில் சிவபெருமான் பூசனையை முடித்துப் புலர் காலையில் திருவாரூரை நோக்கிச்செல்ல, ஆண்டு எல்லோரும் சிவகணங்களாக விருக்கக்கண்டா ரென்றார். அடிகள் தாமும் திருவாரூர் புகுந்து வாழ்வா ராயினர் என்பது அடுத்த பாட்டு. 31-வது பாட்டிலே திரு நாவுக்கரசு தொண்டர்க்காணி யென்று கூறியதைக் குறித் தார். 32-ல் முத்தியடைந்ததைக் கூறினர். 33-வது செய்யுள் சருக்க முடிவாகையாலே சுந்தரமூர்த்தி சுவாமி கள் துதியாகும். இவ்வாறாகச் சொல்லியதெல்லாம் முன்னூலாதாரங் கொண்டேயா மென்பது தெளிவு.

கணம்புல்ல நாயனார் சரிதையைக் கவனிப்போம். அப்பர் தமது திருக்கழிப்பாலைப் பதிகத்தில் 'எண்டோளார் எண்ணிறைந்த குணத்தினாலே கணம்புல்லன் கருத்துகந்தார்' என்றும்; திருக்குறுக்கைப் பதிகத்திலே 'நல்லருந்தவத்த கணம் புல்லர்க்கருள்கள் செய்து காதலாமடியார்க்கென்றும் குணங்களைக் கொடுப்பார்போலும்' என்றும் பாடினார். அவரைப்பற்றி நம்பியாரூர் 'கறைக் கண்டன் கழலடியே காப்புக்கொண்டிருந்த கணம்புல்ல நம்பிக்கும் காரிக்கு மடியேன்' என்றார். நம்பியாண்டார் நம்பி 'நல்ல நகரமான இருக்குவேளூரிலே ஏழ்மையடைந்து, அதனைவிட்டுப் பொன்னம்பலத்தையடைந்து அந்நகரிலுள்ள புலீச்சரத்தின் கண்ணே கோயில்கொண்ட பெருமானுக்குப் புல்லால் விளக்கெரித்தான் கணம்புல்லன்' என்றார். இவைகளைப் படித்தறிந்த குன்றை நகராளி கணம்புல்லர் சரிதத்தை ஒன்பது பாட்டில் விரித்தார். இருக்குவேளூர் வடவெள்ளாற்றின் தென்கரையிலுள்ளதென்றும், அப்பதியிலே மிக்க செல்வத்தோடு வாழ்ந்து வந்தவர் கணம்புல்லரென்ற சிவபக்தரென்றும் முதவிரண்டு பாக்களிற் கூறினார். நம்பி என்று சுந்தரர் கூறியதே நமது சுவாமிகள் கணம்புல்லரைக் குடிமுதல்வரென்றும், 'கறைக்கண்டன் கழலடியே காப்புக்கொண்டிருந்த' என்ற தொடர் 'மெய்ப்பொருளாவன வீசர்கழல்' என்றும் கூற ஆதாரமாயிற்று. மூன்றாவது செய்யுளிலே 'செல்வம் பெற்றதன் பயன் சிவபெருமானுக்குத் திருவிளக்கிடுதலென்றுகொண்டு அப்பணியைத் தம் நகரிற் செய்து வரும்போது யானையுண்ட விளங்கனிபோற் செல்வமெல்லாம் இல்லாமற்போக, தம்மூரைவிட்டுத் தில்லைநகரையடைந்தா' ரென்றது, நம்பியாண்டார் 'நன்னகராய விருக்குவேளூர்தனி னல்குரவாய்ப் பொன்னகராய நற்றில்லை புகுந்து' என்று கூறியதைக் கொண்டேயாம். மேலும் 'ஆண்டு புலீச்சரத்து எழுந்தருளி யிருக்கும் சிவ

பெருமானுக்குப் புல்லால் 'விளக்கெரித்தார்' என்றார் நம்பி. இதனைச் சேக்கிழார் உளத்திலமைத்துக்கொண்டு 4, 5-வது செய்யுள்களில் கணம்புல்லர் தம்மில்லத்திலுள்ள பொருள்களை மாறிப் புலீச்சரத்து நாயனார்க்கு விளக்கெரித்து வரும் நாளில் செல்வமெல்லாஞ் சென்று போக, அயலார்பால் இரக்கவஞ்சி, நல்ல புல்லரிந்துவந்து விற்ற விலைப்பணத்தைக்கொண்டு விளக்கிட்டு வந்தார் என்றும், அப்புல்லும் ஒருநாள் விற்காமல் போகவே அதனையே கொண்டு விளக்கெரிப்பாராயினார்' என்றும் சொன்னார். அதனால் இதுவரையில் நம்பியினாதாரம் காணப்படுகின்றது. தான்கொண்ட கருத்திற் கிசையுமட்டும் அப்புல் வாராது ஆகிவிடவே தனது தலைமுடியை முறுத்து எரித்தாரென்றார். இவ்வொரு பாட்டு இவரது விசாரணையாற் றெறிந்துகொண்ட விடயமென் றேற்படுகின்றது. எட்டு ஒன்பதாவது செய்யுள் முத்தியடைந்ததைக் கூறுவன. ஆகவே இவர் தாமாக வொன்றும் கூறினாரல்லர் என்பது உறுதிபெறுகின்றது.

முருகநாயனார் புராணத்தை யெடுத்துக்கொள்வோம். 'முருகனுக்கும் உருத்திர பசுபதிக்கு மடியேன்' என்றார் நம்பியாரூர். ஞானபோனகர் 'அடியவராகிய முருகர் நீராடிப் பூவெடுத்து மாலைகளை அழகுறக் கட்டிக் கடவுளுக்குச் சாத்தியும் சாந்தமணிந்தும், நறும்புகையிட்டும் பணிசெய்து அடிபரவி நிற்க மகிழ்பவர்'[1] என்றும், 'வண்டுகள் நெருங்க மொய்த்து ரீங்காரஞ் செய்கின்ற கொன்றை மலரை முருகன் எடுத்து மாலைகட்டி முப்போதுஞ் சாத்த முடிமேலே வாசமலருடைய கடவுள்'[2]

1 தொண்டர் தண்கயமூழ்கித் துணையலுஞ் சாந்தமும் புகையும்
கொண்டுகொண்டடிபரவிக் குறிப்பறி முருகன்செய்கோலம்
கண்டுகண்டு கண்குளிரக் களிபரந்தொளிமல்கு கள்ளார்
வண்டுபண்செய்யும் புகலூர் வர்த்தமானீச்சரத்தாரே.

2 பூசுமாசில் வெண்ணீற்றர் பொலிவுடைப்பூம்புகலூரில்
மூசுவண்டறை கொன்றைமுருகன் முப்போதுஞ்செய் முடி
மேல் வாசமலருடையார்.

என்று பாடினார். 'பதிகத்திலே பாடப்பெற்றவன், பஞ்சாக்கரம் பயில்பவன், சிவபெருமானுக்கு மலர்மாலை தொடுத்துச் சாத்துந் திருப்பணி யுடையவன், அடியேன் மிகமதித்துத் துதிக்கும் ஞானசம்பந்தனுக்கு நண்பனாகிய முருகனென்னு மந்தணன் சுந்தரர் பொன்னதிகம் பெற்ற திருப்புகலுடையார்'[3] னென்றார். இவற்றையெல்லாம் மனதிற்கொண்ட சேக்கிழாரடிகள் முருகர் சரிதத்தைப் பதின்மூன்று திருவிருத்தங்களாற் பாடினார். பதினான்காவது செய்யுள் துதிப்பாட்டு ஒன்றுமுதல் நான்கு வரையிலுள்ள பாக்கள் திருப்புகலூரின் வளப்பத்தைக் கூறுவன. ஐந்தாவது செய்யுளிலே முருகனார் அந்தணர் குலத்திலுதித்துச் சிவபெருமானிடத்து அன்பு பூண்டொழுகுபவரென்றார். அடுத்தபாட்டில் சிவபெருமானுக்குத் திருப்பள்ளித் தாமஞ் சாத்தும் நியமமுடையாரென்றார். ஏழாவது செய்யுளிலே திருமாலைக்கு வேண்டிய பூக்கொய்யும் வழக்கு இவ்விதமெனக் கூறினார். அதற்குமொரு தேவாரப் பதிகமாதாரம்.[4] எட்டாவது செய்யுளிலே பூவெடுப்பார் மனம் வேறு பலவற்றிலுஞ் சிதறலாகாதென்பது பற்றிச் சிவநாம மோதுவது மரபென்றும், மலர்கள் நால்வகைப்படுமென்றும், இவையிவை சிவபெருமானுக்கென விதிக்கப்பட்டன வாகையால், அவற்றைத் தெரிந்தெடுப்பது நியதியென்றும் குறித்தார். அடுத்த பாட்டில் பூக்களை மாலைக்கல்விற் சேர்த்தலும் இன்னின்ன மாலைகள் கட்டப்

---

3. பதிதங் திகழ்தரு பஞ்சாக் கரம்பயி லுவினன்சீர்
மதியஞ் சடையார்க் கலர்தொட் டணிபவன் யான்மகிழ்ந்து
துதியங் கழற்சண்பை நாதற்குத் தோழன் வன்றொண்டனம்
னதிகம் பெறும்புகலூர் முருகன்னெனு மந்தணனே. [பொன்

4. பெரும்புலர் காலை மூழ்கிப் பித்தர்க்குப் பத்தராகி
அரும்பொடுமலர்கள் கொண்டங்கர்வத்தை யுள்ளேவைத்து
விரும்பி நூல்விளக்குத் தூபம் விதியினாலிட வல்லார்க்குக்
கரும்பினிற்கட்டி போல்வார் கடவூர் வீரட்டனாரே.

படுதல் வழக்கமென்பதனையுஞ் சொன்னார். இவ்வாறு திருத்தொண்டு செய்துவந்த முருகனார் ஞானப்பிள்ளையை வரவேற்று உபசரித்துக் காவலளவில் முத்தி பெற்றதை 11-13 செய்யுட்களில் கூறினார். ஆகவே இவர் மிகைபடக் கூறியதொன்றையும் காணோம்.

சிறிய சரித்திரங்கள் போகப் பெரிய சரித்திரங்களாயுள்ளவற்றிற்கும் தேவாரங்களில் போதிய ஆதாரமுண்டு அப்பர், சம்பந்தர், சுந்தரராகிய முதலி மூவர்க்கோ அவரவர்கள் பாடிய தேவாரங்களிலேயே போதிய ஆதாரங்களிருக்கின்றன. மற்றய சரித்திரங்கட்கும் அத்தேவாரப் பதிகங்களே யாதாரமாயினும், மேலே காட்டியவாறு சிற்சில சுருக்கமான குறிப்புகளை யுடையனவாயும், சில மிகுதியான குறிப்புகளை யுடையனவாயுமுள்ளன. அவைகளைப் பின்பற்றியே குன்றைமுனியும் கதைகளைச் சுருக்கியும் பெருக்கியுஞ் சொல்லிச் சென்றார். அவ்வாறே மிகுதியான குறிப்புகளையுடையதாகப் பெருக்கிச் சொன்னதற்கு ஒரு எடுத்துக் காட்டாகச் சண்டேசுரநாயனார் புராணத்தை ஆராய்வோம். இப் புராணமானது ஐம்பத்தொன்பது செய்யுள் கொண்டது. 60-வது செய்யுள் சருக்க ஈற்றில் கூறும் சுந்தரர் துதியாகும். முதற்பாட்டிலே சேய்ஞலூர் புனனாட்டிலே மண்ணியின் தென்கரையிலுள்ள தென்னூர். தான் எடுத்துக்கொண்ட சரித்திர ஆசிரியரது ஊர் சேய்ஞலூரென்று திருத்தொண்டர் திருவந்தாதியிலே நம்பி கூறிய 'குலமேறிய சேய்ஞலூரிற் குரிசில்' என்பதனாலும், திருச்சேய்ஞலூர்ப் பதிகத்திலே திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் சேய்ஞலூர்ப் பிரானைச் சண்டீசனுக்குத் தலைமைகொடுத்த காரணமென்னவென்று கேட்பதினாலுமே யாம். இரண்டு முதல் ஒன்பது பாட்டு முடிய ஊர்ச் சிறப்பும், அவ்வூர் சோழர் முடிசூட்டும் பதிகளிலொன்றென்பதும் கூறினார். அவ்வூரிலே காசிப கோத்திர அந்தணர் குலத்திலே எச்சதத்த னென்றொரு மறையோ

னிருந்தான் : அவன் மனைவி பதிவிரதை யென்பாள். அவர்கட்கு ஒருபுதல்வர் தோன்றினர். அப்பிள்ளை உரிய பருவத்தே உபநயனம் செய்விக்கப்பெற்று வேதமோதி வந்தனர். அதன் பயன் சிவபெருமான் சேவடிக் கன்புபூண் டொழுகுவதென அவர் அறிந்து ஒழுகிவந்தார்; அப்படி நாட்கள் பல சென்றுவருகையில் ஒருநாள் அவ்வூரானிரை மேய்ப்பான் ஒரு பசுவினை யடிக்கக்கண்ட அவர் அதனைப் பொறுது உளமுடைந்து அவ்வாயனுக்கு நற்புத்தி புகட்டினர்; ஆக்கள் தேவகுலமாக கருதப்படவேண்டுமென்று சொல்லி அன்றுமுதல் தாமே பசுமேய்க்கும் கருமம் பூண்டு அத்தொழிலை இனிமைபெற செய்துவந்தார்; அதனாலே ஆவெல்லாம் மனைதொறும் பாலதிகமாகக் கொடுத்து வந்தன' என்று பத்து முதல் இருபத்தொன்பதாவது செய்யுள் முடியச் சொன்னார். இவைகட்கு ஆதாரம் தேவாரப் பதிகங்களிற் காணப்படவில்லை யாயினும், அவ்வூரிலே வழங்கிவந்ததொரு கதையாக விருக்கக்கூடும். அன்றியும் பின்வருஞ் செய்திகளாலும் முற்செய்தியிப்படி யிருக்கக்கூடிய தெனவும் ஊகிக்கலாம். அடுத்த முப்பதாவது செய்யுளிலே பசுக்கள் கன்றைவிட்டுப் பிரிந்தும், அவற்றை நினையாமல் அவைகளைப் பாதுகாப்பவரைக் கண்டதும் அன்புபெருகி பால்சொரியத் தலைப்பட்டன வென இயற்கைச் செய்தியைக் கூறினர். அவற்றைக் கண்டபொழுது, இவருக்குச் சிவபிரான் மீது இருந்த அன்பின் பெருக்கத்தா லிவை சிவபெருமானை யாட்டுவதற்குப் பெரிதும் உபயோகப்படு மென்ற எண்ண முண்டாயிற்று என்று முப்பத்தாருவது பாட்டில் கூறினர். இச் செய்யுள் பின்வருங் காரியங்களிலிருந்து காரணமா யொழுந்தது அடுத்த செய்யுளிலே 'முன் பிறப்பிலே செய்த செய்கையின் றொடர்ச்சியாக அன்பின் பெருக்கத்தாலே மண்ணியாற்றின் கரையில் ஆத்தியின் கீழ் மணலால் இலிங்கம் ஒன்று அமைத்து அதனைச் சுற்றிச் சிவாலயம், கோபுரம் முதலியன வமைத்தா' ரென்றார். இதற்கு ஆதாரம் திருக்

குறுக்கைத் தேவாரத்திலும் பிறவற்றினு முண்டு.[1] முப்பத்து மூன்றாவது பாட்டிலே பக்கத்திலேயுள்ள புறவில் பூத்துள்ள ஆத்திமலர் முதலாய சிவபெருமானுக்குகந்த மலர்களும், தளிர்களும் ஆராய்ந்தெடுத்துக் கொண்டுவந்து பணைந்தங்கிட வைத்தாரென்றார். இதற்கு ஆதாரம் ' அர்ச்சனைகள் செய்து பூமலிகொன்றைசூட்ட, வென்பதாம். இதற்குமேல் நான்குபாட்டில் புதிய குடங்களைக் கொண்டு வந்து நாணற்காட்டிலும் மற்றைய விடத்திலும் மேயும் பசுக்களை நண்ண, அவை தாமே கனைத்துப் பால்சொரிய, அவற்றைக் குடங்களில் நிறைத்துக் கொணர்ந்து, கடவுளுக்குத் திருமஞ்சன மாட்டியும், இல்லாதன அன்பினாலே நிறைத்தாட்டியும் மலர்சாத்தி அர்ச்சனை செய்து மகிழ்கின்றார் என்றார். இவற்றிற் கெல்லாம் தேவாரத்திலேபோதிய ஆதாரங்கள் காணப்படுகின்றன.[2] இவர் ஆவின்பாலைக் கறந்தாட்டினாலும், ஆக்கள் மனையிற் கொடுக்கும் பாலிற் குறைவுபடுவதில்லை யென்றதொரு செய்தியைக் காரிய காரணப் பொருட்டா யமைத்தார். இப்படிப் பலநாள் நடந்து வருகையிலே

---

1. தழைத்ததோராத்தியின்கீழ்த்தாபரமணலாற்கூப்பி;நாவுக்
வந்தமணலாலிங்கமண்ணியின் கண்; திருக்கோளிலி;திருஞா.
தோத்திரமாமண லிங்கந்தொடங்கிய;திருவேட்டகுடி,திருஞா.
கொண்டவன்குறிப்பினாலேகூப்பினான்றாபரத்தை; ஆப்பாடி;நா.

2 i கோதனங்களில்பால்கறந்தாட்டக்கோலகவண்மணற்
சிவன்றன்மேல்; திருப்புன்கூர், சுந்தரர். தக்கேசி 3
ii இழைத்தங்கேயாவின்பாலைக் கறந்துகொண்டாட்ட; குறுக், நா,
iii பீறடைந்த பாலதாட்ட; சேய்ஞலூர், திருஞா.
iv ஆனிரையிற்பால் பாத்திரமா வாட்டுதலும்: திருவேட், ஞா.
v ஆமலிபாலு நெய்யுமாட்டியர்ச்சனைகள்செய்து;சாய்க், நாவு
vi பாலாட்டும்; கோளிலி, திருஞா.

இவற்றை யறியாதாரொருவன் ஊராரிட மறிவித்தான். அவர்கள் ஊர்ச்சபை கூடி எச்சதத்தனுக்கு அறிவித்தார்கள். அவனும் தான் ஒன்று மறியாதவனென்றும், இனியும் அப்படி நேரில் குற்றந் தனதே யென்றுஞ் சொல்லி விடைபெற்றுவந்து பொழுது புலர்வதை யெதிர் பார்த்திருந்தான் என்பது 39-44-வது செய்யுட்களின் கருத்து. அந்நாளிலே மறையோரிருப்பைச் சதுர்வேதி மங்கல மென்பர். ஊர்ச் சபையோர் வழக்குகளைக் கேட்பதும் அவ்வழக்குகளைத் தீர்ப்பதும் அவர்களி லொருசாரார் வேலையென்பதும் அக்காலவழக்கமாகும். இவைகளைப்பற்றிய முறைகளைப் பல கல்வெட்டுக்களிற் காணலாம்.[1] அதன்படியே இதுவும் முன்பின் செய்திகளைக் கொண்டு அவ்வாறே நடந்திருக்க வேண்டுமெனச் சேக்கிழார் ஊகித்திருக்கவேண்டும். எச்சதத்தன் விடிந்தபின்னர் நடப்பதென்ன வென்றறிவதற்காக ஒருவரு மறியாமற் சென்று ஒரு குரவமரத்தின்மேலேறி ஒளித்திருந்தான். பிரமசாரியோ அன்பு தலைநிற்ப, நீராடியபின் வழக்கம்போல பூசனைசெய்ய வாரம்பித்துப் பூக்கள் கொணர்ந்து பாலாற் றிருமஞ்சன மாட்டிப் பூசையிலே கண்ணுங் கருத்துமாயிருந்தார். இவற்றைக்கண்டதும் எச்சதத்தனுக்குக் கோபம் பொங்கிற்று. அவன்மரத்திலிருந்து கீழிறங்கிவந்து தன் மகன் முதுகிலே கோல் கொண்டடிக்க, அவர் அவற்றினை யறியாது, தான் செய்யுஞ் சிவத்தொண்டிலேயே கருத்தூன்றியிருந்தார், தாதை பின்னுங் கோபங்கொண்டு திருப்பாற்குடங்களை இடற, அதனைப் பொறுத அடியார் இடறியவர் தன் தாதை யென்றறிந்தும், அச்செய்கையைக் கண்டிக்கப் பக்கத்திலேயிருந்த கோலை யெடுத்தெறிந்தார். அதுவே மழுவாயிற்று. தாதையும் காலற்றுக் கீழே

---

1. S. I. I. Vol vi. Epigraphist's annual report 1914.

தடுத்தாட்கொண்ட புராணம் காண்க.

விழுந்தானென்றனர். 45-51-வது செய்யுட்களில், இவற்றிற்கும் தேவாரத்தில் பல ஆதாரங்களுண்டு[1]. 52-வது செய்யுளிலே மேற்கூறியவாறு சிவபூசையிலிடையூறு செய்த தன்றாதை தாளை மழுவினாலெறிந்த பின்னர் முன்போ லர்ச்சிக்கத் தொடங்குதலும், சிவபெருமான் விடையின்மேல் உமாதேவியோடு தோன்றினா ரென்றார். 53-54-ல் சிவபெருமான் தன் பரிவாரங்களோடு தோன்ற, அடியவர் அடியின்மிசைப் பணிதலும், உம்பர்பிரான் வணங்கிய அன்பினரை யெடுத்துச்சிமோந்து தடவி இனி யுனக்குத் தாதை தானென்றதும், அடியார் எல்லாம்வல்ல முழுமுதற் கடவுளாற் றீண்டப்பட்டவுடன் சிவமேயாய் விளங்கினாரென்றதுங் கூறினார். 56-வது பாட்டிலே அண்டர்பிரான் அடியவரைத்தொண்டர் தமக்கதிபனாக்கித் தாமுண்ட பரிகலமும், உடுப்பனவும், சூடுவனவு மளித்துச்சண்டேசுரனெனு பதமு மளித்தாரென்றார். இவையவ்வாறே பல தேவாரங்களிலும் காணப்படுகின்றன.[2]

---

1. i. ......பாலைக்கறந்து கொண்டாட்டக் கண்டு
பிழைத்ததன் றாதைதாளைப்பெருங்கொடு மழுவால்வீச ;
திருக்குறுக்கை, நாவு.
ii. தாதைதாளெறிந்ததண்டி ; திருப்புன்கூர், சுந்தரர்.
iii. கண்டவன்றாதைபாய்வான்காலறவெறியக்கண்டு ; ஆப் நா.
iv. பீரடைந்த பாலதாட்டப் பேணாதவன் றாதை
வேரடைந்து பாய்ந்ததாளை வேர்த்தடிந்தான் ; சேய்ஞ,ஞா
v. பூமலி கொன்றைசூட்டப் பொறாததன் றாதைதாளைக்
கூர்மழு வொன்றாலோச்ச ; சாய்க்காடு, நாவு, நேரிசை 6.
vi. சிந்தைசெய் வோன்றன் கருமந்தேர்ந்து சிதைப்பான்
வருமத் தந்தைதனைச் சாடுதலும் ; கோளிலி, ஞான.

2. i. தாதைதாளனவெறிந்ததண்டிக்குன்சடைமிசை
மலரருள் செயக்கண்டு, திருப்புன்கூர், சுந்தரர்.

அடுத்த மூன்றுபாக்களில் உலகோர் அடைந்த மகிழ்ச்சியும், எச்சதத்தன் முதலாயினோர் நற்கதியடைந்தமையும், பிரமசாரி அரன்மகனாயினதும் கூறப்படுகின்றன. ஆகவே சேக்கிழாரடிகள் கூறும் முக்கிய செய்திகளொவ்வொன்றிற்கும் தேவாரத்தில் ஆதாரமுண்டென்பது உறுதிபெறுகின்றது.

---

ii. அணிகொளாடையும்பூணணிமாலையமுது செய்தமுதம்
பெறுசண்டி. திருநின்றியூர் - ஷை

iii. சண்டியார்க்கருள்கள்செய்ததலைவராப்பாடியாரே. நாவு.

iv. வேர்த்தடிந்தான்றனக்குத்தாரடைந்தமாலைசூட்டித்
தலைமைவகுத்ததென்னே. சேய்ஞலூர், திருஞா.

v. எண்டிசையோர்மகிழவெழின்மாலையும்போனகமும்
பண்டுசண்டிதொழவளித்தான். திருவூரல், திருஞா.

vi. விண்டதாதையைத் தாளறவீசிய
சண்டநாயகனுக் கருள்செய்தான். திருமங்கல, நாவு

vii. கூர்மழுவொன்றாலோச்சக்குளிர்சடைக்கொன்ற
தாமநங்சண்டிக்கீந்தார்சாய்க்காடுமேவினாரே; நா(மாலைத்

viii. சண்டேசனென்றருளிக்கொந்தணவுமலர்கொடுத்தான்;
கோளிலி.

ix. தாருஞ்சடைக்கிலர்போலுஞ்சண்டிக்கருளிலர் போலும்;
காழி, ஞா.

---

# 7. பெரியபுராண ஆராய்ச்சி

பெரியபுராணம் பாடி யரங்கேற்றிய பின்னர் ஆசிரியர் சிதம்பரத்திலே இருந்துகொண்டு இப்புராணத்தைப் படித்துப் பொருள் விளக்கினாரென்றும் அப்பொழுதே பலரும் படி யெடுத்துக் கொண்டனரென்றும் சேக்கிழார் புராணம் கூறுகின்றது. அன்று முதல் இப் பெரிய புராணம் நின்று நிலவி வரினும் பனையோலை ஏட்டிலேயே யிருந்தது. இதனை ஏட்டிலிருந்து பெயர்த்தெழுதி முதன் முதல் அச்சுவாகன மேற்றியவர் காஞ்சிபுரம் சபாபதி முதலியார். இவர் இதனை ஆங்கிலவாண்டு 1860-க்குச் சரியான 'சித்தாத்திரியாண்டு ஆனிமீ' வெளியிட்டார். இவர் இந்நூலைத் திருவாரூர் சிதம்பரம் முதலிய ஊர்களிலுள்ள ஏடுகளைப் பார்த்து அச்சிட்டார். இவர் திருவாரூரிலே அக்காலத்திலே புலவர் திலகராக விளங்கிய வித்வான் தியாகராசதேசிகரிடம் இப்புராணம் முதலிய பல சைவ நூல்களையும் படித்தவர்.[1] இதுவே இவர் இந்நூலை யச்சிடுதற்குப் பெருஞ் சாதனமாயிருந்தது. இவர் பதிப்புக்குப் பின்னர், திருமயிலை சுப்பராய ஞானியார் இற்றைக்கு அறுபது ஆண்டுகட்கு முன்னர் பிரமோ

பெரியபுராணப் பதிப்புக்கள்

---

1. சபாபதி முதலியார் பெரியபுராணப் பதிப்பிலே கூறும் குருவணக்கத்தில் காணப்படுவது :

உலகெலாம் போற்றுமூ மொளிர்பூங் கோயிலுள்
நாதன் பூசை நாடொறும் புரிவோன்
தூய்மைசேர் சேக்கிழார் சுவாமிக ளருளிய
வாய்மைசேர் புராண மறைப்பொரு டன்னொடு
உற்ற திருவா சகத்தி னுண்மையுஞ்
சிற்றறி வுடையேன் றெளிய வுணர்த்திய
**தியாக ராச தேசிகன் ;**

தாத ஆண்டு ஒரு பதிப்பு வெளியிட்டனர். இதற்கு ஒன்பது ஆண்டுகழிந்தபின், பிரமாதி வருடத்தில் சிதம்பரம் இராமலிங்கம் பிள்ளை ஒரு பதிப்பு வெளியிட்டார். இவைகளெல்லாம் புராணத்திற் கூறப்படும் தேவாரப் பதிகங்களோடும் கதைச்சுருக்கத்தோடும் தோன்றின. பின்னர் யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலர் தேவாரப்பதிகங்களும் கதைச் சுருக்கமுமின்றி யொரு பதிப்பு வெளியிட்டார். அது பல பதிப்புக்கள் பெற்று இப்பொழுதும் நின்று நிலவுகின்றது. இதனில் கதைச்சுருக்கத்திற்குப் பிரதியாகச் சூசனமென் ஒன்று எழுதப்பட்டிருக்கின்றது. மற்றைய பதிப்புக்களுக்கும் நாவலர் பதிப்புக்கும் சில வேறுபாடுகள் காணப்படுகின்றன.[1] சென்னை பக்தஜன சபையார் 1886-87-க்குச் சரியான ஜய-விஜய வருடங்களில் கையடக்கமாக விருக்கும்படி ஒரு பதிப்பு வெளியிட்டனர்; இது நாவலர்பதிப்பின் பிரதியேயாகும். இவ்வாறு பலபதிப்புக்களும் உலவுங்காலத்தே திருமயிலை செந்தில்வேலு முதலியார் ஆங்கிலவாண்டு 1903-க்குச் சரியான சுபகிருது ஆண்டு ஒரு பதிப்பு வெளியிட்டார். இவர் பன்னிரண்டு திருமுறைகளையும் ஒரே யளவில் வெளியிட்டுள்ளார். இது நாவலர் பதிப்பிற் கிணங்கப் பதிக்கப்பட்டதா

1. ஒரே ஒரு உதாரணம் குறிக்கப்படுகின்றது. நாட்டுச் சிறப்பின் பின்னர் நகரச்சிறப்பு காணப்படவேண்டியது காவிய முறை. அவ்வாறே பெரியபுராணத்திலுமிருக்கவேண்டும், மற்றைய பதிப்புக்களிலும் நான் பார்த்த பல ஏட்டுப்பிரதிகளிலும் திருநாட்டுப் படலத்தின் பின்னர்த் திருநகரப்படலம் என்ற பேரே காணப்படுகின்றது. அதற்கேற்ப முதற்செய்யுளும், 'சொன்ன நாட்டிடை ......திருவாரூர்த் திருநகர்' என்னும், 'இனையவகை யறநெறியி லெண்ணிறந்தோர்க் கருள்புரிந்து—முனைவரவர் மகிழ்ந்தருளப் பெற்றுடைய மூதூர்மேற்—புனையுமுறை நம்மளவிற்புகலலாந்தகைமையதோ' வென்றும் பாடுகின்றார். ஆகவே திருநகரச் சிறப்பென்றே யிருத்தலமையும்.

யினும், இப்பதிப்பினில் நாவலரால் விடப்பட்ட தேவார மேற்கோளும் கதைச்சுருக்கமும் சேர்க்கப்பட்டுள்ளன.

இப்பெரிய புராணத்தைத் தவிர நமது ஆசிரியர் வேறு நூலொன்றும் செய்திருப்பதாகத் தெரியவில்லை. இவ்வொரு நூலுமே அவரது கல்வித்திறனுக்குப் போதிய சான்றாகும். இந்நூற்கு ஆசிரியரிட்ட பெயர் திருத்தொண்டர் புராணமென்பதாம். இதனை, 'இங்கிதனுமங் கூறின்...திருத்தொண்டர் புராணமென்பாம்' என்று ஆசிரியர் கூறுவதாலறியலாம். இப்பெயர் பல நூல்களிலும் வழங்கிவந்ததாயினும்[1] இதனைப் பெரிய புராணமென்றே சனங்கள் வழங்கலாயினர். இப்பெயரே இன்றும் நின்று நிலவுவதாயிற்று.

நூலின் பெயர்

திருத்தொண்டர் புராணமென்பது திருத்தொண்டர்களுடைய புராணமெனவிரியும். தொண்டாவது கடவுளிடத்து மாறாத அன்புகொண்டு அடிமையாவது. அது சரியை, கிரியை, யோகம், ஞானமென நான்கு திறப்படும். அந்நான்கு திறத்தினருடைய சரிதையும் இப்புராணத்துள் வருவதால் இது திருத்தொண்டர் புராணமாயிற்று. பெரியர்புராணம் என்பது ரகரம் கெட்டுப் பெரியபுராணமாயிற்றென்றும், சில பெரியாருடைய சரித்திரங்களைக் கூறுவதால் பெரிய புராண மாயிற்றென்றும், பல சிறு புராணங்களைத் தன்னுள் அடக்கிய தொகுதியாக விருப்பதால் அப்பெயர் பெற்றதென்றும் கூறுவர். இந்நூல் வெண்பா, அகவல்

பெயரின் பொருள்

1. i பார்கொண்ட தொண்டர்வரலாறு சொல் புராணம். மகாவித்வான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை யவர்கள்.

ii. தோற்றுதில்லை நடராசர் முதலருளத் திருத்தொண்டர் திருப்புராணம். திருவாவடுதுறை ஆறுமுக சுவாமிகள்.

கலி, வஞ்சியென்னும் பாக்களின் இனமான நால்வகை விருத்தங்களாலுமாயது. விருத்தங்களெல்லாம்சங்ககாலத்திற்குப் பிறபட்டன. சங்ககாலத்திலக்

**செய்யுட் போக்கு**

கியமென்று சொல்லப்படுவன வெல்லாம் முதற்பாவென்று சொல்லப்படும். வெண்பா, அகவல், கலிப்பா என்பவைகளால் யாக்கப்பட்டவை. பாவினங்களுள் கலித்துறையே சிறுபான்மை வரும். பிறகாலத்தாற் பிறபட்டன. அகவல் விருத்தம் மிக மிகப் பிந்தியது. விருத்தங்களாலியன்ற முதல் நூல் சிவகனது சரித்திரமான சிந்தாமணி யென்பர். சிலர் தோலாமொழித் தேவரது சூளாமணியையுங் கூறுவர். இவற்றின் பின்னெழுந்த பெரிய காவியம் கம்பனது இராமாயணம். அதற்குப்பின் இப்பெரிய புராணம் பாடப்பட்டது. இந்நாலும் பல்வகை விருத்தங்களாலமைந்ததொன்றும்.

இந்நூலானது இரண்டு காண்டங்களாகவும், பதின்மூன்று சருக்கங்களாகவும் பகுக்கப்பட்டிருக்கின்றது. இந்நூலின் மொத்தப்பாடற்றொகை நாலா

**பாடற்றொகை**

யிரத்திருநூற்று ஐம்பத்துமூன்று. சிலர் பெரிய புராணப் பாடற்றொகை நாலாயிரத்திருநூற்றெண்பத்து மூன்றென்பர். அதற்குச் சரியான ஆதாரங்கள் கிடையா[2]. அச்சிடப்பட்ட புரா

---

1. 'காண்டமிரண் டாவகுத்துக் கதைப்பரப்பைத் தொகுத்துக் கருதரிய சருக்கங்கள் பதின்மூன்று நிலையிட்—டிணடுரைத்த புராணத்திற் திருவிருத்த நாலா யிரத்திருநூற் றைம்பத்து மூன்றுகவமைத்து' என்பது சேக்கிழார் புராணம், 43.

2. தொண்டை மண்டல சதகம் 19-வது செய்யுள் மேற்கோள் வருமாறு :—

கொண்டறவழ் தண்டலைசூழ் குன்றநகர்ச் சேக்கிழா
ரொண்டரணி யோருய்ய வோதினர்—தண்டலில்சீ
ரேன்றபுகழ் நாலா யிரத்திருநூற் றெண்பத்து
மூன்று திருவிருத்தமும். இவ்வெண்பா இருக்கும்

நூலின்னதென்று குறிக்கப்படவில்லை. ஆதலால் ஆராய இடமில்லை. எண்பந்து என்பது ஐம்பந்து என்றுமிருக்கலாம்.

ணங்களெல்லாம் பற்பல பாடற்றொகையைக் காட்டு கின்றன. அவற்றையெல்லாம் ஒருவாறு சிக்கறுத்துச் சேக்கிழார் புராணமுடையார் கூறியாங்கு இது 4253 செய்யுள்களுடையதென்றும், இவையிவை இடைச்செரு கலா யிருத்தல் கூடுமென்றும் முன்னரே வரையறுக்கப் பட்டிருக்கின்றது.[1] மேற்கூறிய பதின்மூன்று சருக்கங்க ளாவன 1. திருமலைச் சருக்கம், 2. தில்லைவாழந்தணர் சருக்கம், 3. இலைமலிந்த சருக்கம், 4. மும்மையாலுல காண்ட சருக்கம், 5. திருநின்ற சருக்கம், 6. வம்பறு வரி வண்டுச்சருக்கம் 7. வார்கொண்ட வனமுலையாள் சருக் கம் 8. பொய்யடிமையில்லாத புலவர் சருக்கம், 9. கறைக் கண்டன் சருக்கம், 10. கடல்சூழ்ந்த சருக்கம் 11. பத்த ராய்ப் பணிவார் சருக்கம், 12. மன்னியசீர்ச் சருக்கம், 13. வெள்ளானைச் சருக்கம் என்பனவாம். சருக்கப் பெயர்கள் திருத்தொண்டத் தொகையின் முதற் சொல் வழியாக அமைக்கப்பட்டுள்ளன. திருமலைச் சிறப்பையும் பிறவற்றையுங் கூறுவதால் திருமலைச் சருக்கமென்றும், முடிவில் சுந்தரர் கயிலைக்கு வெள்ளானை மேற் சென்ற தால் வெள்ளானைச்சருக்கமென்றும் பெயரிட்டார். இந் நூலாசிரியர் இந்நூலை இரண்டு காண்டமாக வகுத்தற் குரிய பாகுபாடு செய்வதனை விளங்கவில்லை. இப்பொழுது அச்சிடுவோரெல்லாம் நமிநந்தியடிகள் புராணத்தோடு முதற் காண்டமென்றும், திருஞான சம்பந்தர் புராண முதல் வெள்ளானைச் சருக்க மீறாக இரண்டாங்காண்ட மென்றும் அச்சிடுகின்றனர். சம்பிரதாயம் அப்படி யிருப்பதாகத் தெரியவில்லை. இவ்வாசிரியர்மேல் பிள் ளைத்தமிழ் பாடிய நாவலர் பெருமானான மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சேக்கிழார் பிள்ளைத் தமிழ் முதற்செய்யுளிலேயே, 'உலகெலாமெனுஞ்சுருதி நாப்பண்ணு மீற்றும் பொருத்தி' யென்று சம்பிரதாய

1. செந்தமிழ் 17-20-ம் தொகுதிகள் பார்க்க.

மிருப்பதைக் கூறியிருக்கின்றனர். 'உலகெலாம்' என்பது திருஞான சம்பந்தர் புராணம் 216-வது செய்யுளின் ஈற்றில் காணப்படுகிறது. அப்பாட்டு 'சோதி முத்தின் சிவிகை.. ஏறினாருய்ய வுலகெலாம்' என்று முடிகிறது. இதனைப் பல்லக்குப் பாட்டு என்றுங் கூறுவதுண்டு. அப்பாட்டே இரண்டாங் காண்டத்தின் காப்புச்செய்யுளென்பர். இவ்வாறு ஒரு வழக்கு உண்மையின் அதனைப் பின்பற்றியே காண்டம் வகுக்கப்பட வேண்டும்.

**இன்னவகை நூல் என்பது**

இந்நூல் முதல்,வழி,சார்பு என்னும் மூவகை நூலுள் முதனூலின் பாற்படும். தொகை, வகை, விரியில் பின்னதின் பாற்படும். ஆயினும் இதற்கு முதல் நூல் திருத்தொண்டத் தொகையென்றும், வழிநூல் நம்பியின் திருவந்தாதியென்றும், இது சார்பு நூலென்றும் ஒரு சாரார் கூறுவர். ஆசிரியர் சேக்கிழாரடிகள் இந்நூற்குப் பதிகம் திருத்தொண்டத்தொகை யென்று கூறினார். திருத்தொண்டர் புராண அட்டவணை திருத்தொண்டத்தொகை யென்று பொருளாகுமே யன்றி அது முதல் நூலென்று கொள்ள வேண்டுமென்பதன்று. நம்பியின் றிருவந்தாதியோ ஒரே செய்யுளில் அவரறிந்த வரையில் நாயன்மார் வாழ்ந்தவிடம், அவர் செய்த திருத்தொண்டு முதலியவற்றைச் சுருக்கமாகக் கூறும். இப்பெரிய புராணமோ காப்பிய இலக்கணமெல்லா மமையப் பெற்று, நாயன்மாருடைய திருத் தொண்டுகளையும், பிறவற்றையும் விரிவாகக் கூறுவது. ஆகவே இது முதல் நூலின் பாற்படும். இனி, ஒரு சாரார் வடமொழியினின்றும் இப்புராணம்மொழி பெயர்க்கப்பட்டதென்று கூறுவர். வடமொழிப் புராணங்களாவன அகத்திய பக்த விலாசமும், உபமன்னிய பக்த விலாசமுமாம். இவை யிரண்டும் சென்ற நூற்றாண்டி னிறுதியில் திருத்தொண்டர் புராணத்தினின்றும், வடமொழியில் பெயர்த்தெழு

தப் பட்டனவென்று பலரும் அறிந்ததொரு செய்தியாம். அந் நூற்களுள்ளேயே பல அகச்சான்றுகளுமுள.

ஒரு நூலைப் பெருநூலென்றும் சிறுநூலென்றும் பிரிக்கலாம். சிறு நூலெல்லாம் பாட்டுடைத் தலைவனுடைய ஒரு பகுதிச் செயல்களைக் குறித்துப் பேசும். பிள்ளைத்தமிழ் என்பது பிள்ளைப் பருவத்தைப் பற்றியும், மற்றுஞ் சில குறிப்புக்களையும் காட்டும்; உலாவென்பது அரசன், தலைவன் முதலாயினர் வீதியிற் பவனி செல்லுங் காட்சியினையும், அவர்கள் செய்த வீரச் செயல் முதலியவற்றையும், சூழவிருக்கும் சுற்றத்தையுங் குறிக்கும். பெருநூல் பாட்டுடைத்தலைவன் வாழ்கின்ற நாட்டியல், நகரவளம் கூறிப் பின்னர்ச் சொல்லவேண்டிய விடயங்களை முறைபடக் கூறும். இப்பாகுபாட்டின்படி பெரியபுராணம் காவியத்தின்பாற் படுவது காண்க.

காவிய இலக்கணம்

ஆயினும் இந்நூல் பல பெரியாரது சரிதங்களைக் கூறுமொரு நூலாகலின் பாட்டுடைத்தலைவர் பலராகவே, இது எந்த நாட்டைக் கூறுமெண ஒரு ஐயமுண்டாகலாம். இது நியாயமானதொரு ஐயமேயாம் இந் நூலை உலகிற்குக் காட்டியவர் நம்பியாரூரர். அவரது திருத்தொண்டத் தொகை யில்லையாயின் பெரிய புராணமும் கோவைப்பட எழுந்திராது. ஆயினும், அவர் பிறந்தவூர் திருநாவலூர்; அடிமையானது திருவெண்ணெய் நல்லூர்; இவை யிரண்டும் திருமுனைப்பாடி நாட்டிலுள்ளன. அந் நாட்டை விவரிக்கவேண்டியது நியதி. ஆனால் அவர் வாழ்ந்தவிடம் நிறைசெல்வத் திருவாரூர். அது சோணாட்டிலுள்ளது. யார் எங்கிருந்து பெருமை பெறுகின்றனரோ அந்த நகரத்தையும், அந்த நகரமுள்ள நாட்டையும் விவரிப்பதும் முறை. இரண்டாவதாக இப்பெரியபுராணம் பாடக் காரணமாயிருந்தவன் சோழவரசன். அவனது நாட்டையும், இராசதானியையும் விவரிப்பது ஒருமுறை. அதுவே கவி மரபு. ஆகவே இவைகளைக்கொண்டு சேக்கிழார் சோழ நாட்டையும் திருவாரூரையும் வர்ணித்தார்.

நாடு நகரம்

இனி, நாடு சோழ நாடாயினும், நகரம் தஞ்சை நகர மன்றோ எனின், தஞ்சை அருண்மொழியான இராசராச மன்னவன் காலத்திலேதான் தலை நகராயிற்றென்று கொள்ளவேண்டியிருக்கிறது. அவனே தஞ்சை யிராச ராசேச்சரத்தைக் கட்டியது மன்றி,[1] தியாகப் பெருமானை ஆடவல்லானையும் எழுந்தருளப்பண்ணினான். இவன் மகன் கங்கை கொண்ட சோழனான மதுராந்தகன் அதனையே இராஜராஜ நாடகமென ஒரு நாடகமாக நடிக்க ஏற்பாடு செய்தான். இவர்கள் திருவாரூரோடு இதனையும் ஒரு தலைநகரமாகக் கொண்டனரே யன்றி இதுவே தலை நகரமன்று. திருவாரூர் தலைநகரா யிருந்ததற்குப் பல ஆதாரங்களுண்டு. 'மன்னவர் பெருமான் அநபாயன் வருந்தொன்மரபின் முடிசூட்டுந் தன்தம நிலவு பதியைந்தினொன்று' என்பது சண்டேசுர நாயனார் புராணம். 'நிலமகட்கு அழகார் திருநீணுதற்றிலக மொப்பது செம்பியர் வாழ்பதி' என்பது திருவாரூர்ச் சிறப்பு. மனு இருந்து அரசாட்சி செய்ததென்பது பழமையான சரித்திரம். திருவிசைப்பா பாடிய ஒன்பதின்மருள் ஒருவரான கண்டராதித்த தேவர் மாதேவியார் செம்பியன் மாதேவியார் அரநெறியப்பரது முன் மண்டபம் கட்டினார்.[2] இராஜேந்திர தேவன் காலத்தில் ஆடவல்லானை தியாகேசரது கோயில்

---

1. இவனுடைய 18-வயது ஆட்சிவருஷத்திற்குப்பின் கட்ட ஆரம்பித்திருக்க வேண்டுமென்றும், ஸ்தூபி கி.பி. 1007-ல் கொடுத்ததாக ஒரு கல்வெட்டிருப்பதால் இவனுடைய ஆட்சியிலே கட்டப்பட்டதென்றுங்கூறுவர். S. I. I. ii part 5. Indroduction p. p 12, 13.

2. ஸ்வஸ்தி ஸ்ரீ கோராஜகேசரி பன்மற்கு யாண்டு 7-வது ...நாள் ஈாஈ-னல்சோழநாட்டுக் காவிரி தென்கரை(ய்) திருவாரூர் கூற்றத்து.........திருவாரூர்-அரனெறி ஆள்வார்கோயில் திருக்கற்றளி எழுந்தருளிவிச்சு உடையபிராட்டியார் செம்பியன்மாதேவியார் இக்கோயிலில் எழுந்தருளுவிச்சது. (திருவாரூர்க் கல்வெட்டு)

புதுப்பிக்கப்பட்டது. சோழ அரசன் தன்னைப்போன்ற செப்புச் சிலையொன்று வைத்தான்.[1] இன்றும் அவ்விக்கிரகம் விசயதசமியன்று அலங்காரம் செய்யப்பட்டுத் திருவுலாப் போகின்றது. இராஜேந்திரனும் விசய ராஜேந்திரனும் திருவாரூர்க் கோயிலைப்பொன்வேய்ந்தான்.[2] இவ்வாறு சோழ அரசர்கட்கு இராசதானியாகவும், பிறகு மிக்க அபிமான முடைய ஊராகவுமிருந்தது திருவாரூர். இந்நகரைப் பெரியபுராண ஆசிரியர் சிறப்பித்தது முறையேயாகும்.

ஆசிரியரது சரித்திர அறிவு

நமது சரித்திர ஆசிரியர் நல்லமைச்சராயிருந்து சோழ அரசனது செங்கோலைச் சீர்பெற நடத்தியு நன்மையினாலே அறுபான் மும்மை நாயன்மாரது பிறப்பிடங்கள் தெரிந்த அளவிற்கு இன்னின்ன நாட்டிலுள்ளனவென்றும், தெரியாதவைகளைத் தாங்கேட்டவாறும் குறித்துள்ளார். இவ்வறுபத்து மூவருள் 37 பேர் சோழ நாட்டினராகவும்

1. No 680 of 19

2. உடையார் ஸ்ரீ விசைய ராஜேந்திர தேவர்க்கு யாண்டு 34 ஆவது ஜெயமாணிக்க வளநாட்டு திருவாரூர் கூற்றத்து திருவாரூர் உடையார் வீதி விடங்கதேவர்க்கு எழுந்தருளியிருக்க பொன்மண்டபம் செய்க என்று அதிகாரி............ராஜராஜன் காசுநிறை கல்லால் பொன்.........செய்வித்த பொன்னின் திருமண்டபம். (தியாகேசர் கர்ப்பக்கிரகக் கல்வெட்டு)

.........உடையார் ஸ்ரீ ராஜேந்திர சோழதேவர்க்கு யாண்டு 20-ஆவது உடையார் ராஜேந்திர சோழதேவர் அணுக்கியார்பரவை நங்கையார் க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டு திருவாரூர்க் கூற்றத்து திருவாரூர் உடையார் வீதிவிடங்க தேவர்க்குத் திருக்கற்றளி எடுப்பித்து உடையார் வீதிவிடங்கதேவர் கோயிலில் அணுக்கியார் பரவை நங்கையார் யாண்டு 18-ஆவது நாள் 318-முதல் நாள் 199 வரை முன் மண்டபம்.........மொன்மேய்ந்தும்.........(மற்றொரு தியாகேசர் கர்ப்பக்கிரகக் கல்வெட்டு)

ஒருவர் மழ நாட்டினராகவும், ஐவர் திருமுனைப்பாடி நாட்டினராகவும், ஒருவர் சேதி நாட்டினராகவும், ஐவர் தொண்டை நாட்டினராகவும், ஒருவர் பொத்தப்பி நாட்டினராகவும், நால்வர் பாண்டி நாட்டினராகவும் கூறப்பட்டிருக்கின்றனர். ஐயடிகள் காடவர்கோனும், கழற்சிங்கரும் பல்லவ அரசர்கள் என்பதனாலே இவர்கள் தொண்டை நாட்டினர் என்று கொள்ளல்வேண்டும். கூற்றுவ நாயனாரைக் களந்தை முதல்வனாரென்றும், மாறனை இளையான்குடிப் பதி மாறனார் என்றும், பொதுப்படக் கூறுவதாலே இவர்கள் நாடு இன்னது என்று அவரே அறிந்திலர் என்பது தோன்றுகிறது. புகழ்த்துணையார் செருவிலிபுத்தூருடையார் என்பதே யன்றி இன்ன இடத்துள்ளது என்று கூறவில்லை. நேச நாயனார் காம்பீலி நகரத்தார் என்று மாத்திரம் குறிப்பதாலே அந்நகரம் இன்ன பக்கத்துள்ளது என்று கூறவில்லை. நிச்சயித்தற்கும் இயலவில்லை. ஆயினும் 'கம்பிலிச் சயத்தம்ப நட்டதும்' என்று கலிங்கத்துப்பரணி ராஜபாரம்பரியம் கூறுவதாலும், கல்வெட்டுக்களும் கம்பிலியில் சோழர்களுக்கும் சாளுக்கியர்களுக்கும் போர் நிகழ்ந்தது என்று கூறுவதாலும், அவ்வூர் மகாராட்டிர தேசத்தில் உள்ளதாலும் காம்பீலி காம்பிலியாயிருக்குமாயின் அது மேற்கூறிய மகாராட்டிர தேசத்திலுள்ள தென்று கொள்ளலாம். திருமூலர் நந்தியெம்பெருமான் வழிவந்த யோகி என்று கூறுகின்றார். ஆசிரியர் சேக்கிழாரடிகள் சோழ நாட்டு நாயன்மாரைக் கூறும்போது 'பொன்னி நன்னாட்டு, பூந்தண்பொன்னி யெந்நாளும் பொய்யாதளிக்கும் புனனாட்டு, சோழர் நீர்நாட்டிடை' என்பது போன்ற தொடர்களாலேயே சுட்டுவர். நகரங்களைக் குறிக்குங்கால் 'சென்னியார் திருவாரூர்த் திருநகர், மருத நீர்நாட்டு வளம்புகார் நகரம், பொன்னி நாடெனும் கற்பகப்பூங்கொடி மலர்போனன்மை சான்றது நாகப்பட்டணத் திரு

நகரம்' என்றுங் கூறுவர். ஒரே பெயருடைய ஊர் ஒன்றுக்கு மேற்பட்டதுண்டாயின் அதனை இன்ன நாட்டிலுள்ளதென்று கூறுவர். 'மேற்காநாட்டு ஆதனூர், மிழலைநாட்டுப் பெருமிழலை, பொன்னி நீர்நாட்டு மருகனாட்டுத் தஞ்சாவூர்' என்பவைகளை யெடுத்துக் காட்டலாம். ஒருவாறு யாதொரு அடையுமின்றிச் சோழநாட்டூர்களைக் கூறுவதாலே தொண்டசீர் பரவுவாரான சேக்கிழார் தமிழ் நாட்டினர் சோழநாட்டு ஊர்களை நன்கறிந்தவர்களென்றே கொண்டனர் என்பது தெளிவாகின்றது. தான்பிறந்த நாடாகிய தொண்டைநாட்டைப் பற்றிக் கூறும்போது 'தூய மாதவஞ் செய்தது தொண்டை நன்னாடு', 'நன்மைநீடிய நடுநிலை யொழுக்கத்து நயந்த தன்மை மேவிய தலைமையால் பெருங்குடி தழைப்பத் தொன்மை மேன்மையி னிகழ்பெருந் தொண்டைநாடு', உலகினி லொழுக்கம் என்று முயர்பெறுந் தொண்டைநாடு', 'சொல் விளங்குசீர்த் தொண்டை நன்னாடு' என்று பெருமிதத்தோடு கூறுவர். ஊர்கள் இன்ன இடத்துள்ளன வென்றுஞ் சுட்டுவர். வேற்காடு என்னு மூர்பாலியின் வடபாலுள்ளதென்பர். கண்ணப்பரைப் பொத்தப்பிநாட்டு உடுப்பூரினர் என்பர். இவ்வாறு கூறும் ஆசிரியர் மாறனாயனாரை யாதொரு அடைமொழியுமின்றி இளையான்குடிப்பதிமாறனார்' என்றும், புகழ்த்துணையாரைச் செருவிலிபுத்தூர் மன்னும் சிவமறையோர்' என்றும் பொதுப்படக் கூறுவதாலே அவர்கள் வரலாறு மிகப் பழமையானதென்றும், அவற்றினை யவர் அவ்வளவே அறிந்துளாரென்றும் சொல்லவேண்டியிருக்கின்றது. தாம் அரசனது அமைச்சராகையாலே அவனது பழமையைப் பலவிடத்தும் பாராட்டுவதோடு இன்னின்னாருக்கு உறவுடையானென்பர். கோச்செங்கட் சோழ நாயனாரைப்பற்றிக் கூறுகையில் அவரது பிதா சுபதேவரென்றும் தாய் கமலவதியென்றுங் கூறுவர். 'வள்ளல் கொடை அநபாயன் முந்தை

வருங் குலமுதலோன்' என்பர். புகழ்ச்சோழநாயனாரை 'மன்னுதிருத் தில்லைநகர் மணிவீதி யணிவிளக்குஞ் சென்னிநீ டனபாயன் திருக்குலத்து வழிமுதலோர்' ரென்பர். இடங்கழி நாயனாரை, 'பொன்னெடுந் தோளாதித் தன் புகழ்மரபிற் குடிமுத' லென்பர்.

சோழர் 'மகமேரு மலையிலே புலி முத்திரையைப் பொறித்தும், காவிரிநீர் கிழக்கில் வராது மேல்புறமாக ஓடுதலும் அதனை அணையிட்டுத் தடுத்துக் கிழக்கே யோடும்படியுஞ் செய்தனர்'[1] என்ற சரித்திரச் செய்திகளைக் கூறினார். இச்செய்தி விக்கிரம சோழனுலாவிலும் காணப்படுகின்றது.[2] இவ்வாறு செய்தவன் கரந்தமன் என்று ஊகிக்க வேண்டி யிருக்கின்றது. புகழ்ச்சோழ நாயனார் புராணத்திலே புகழ்ச்சோழர் கருவூருக்குச் சென்றிருந்த காலையில் சிற்றரசர்கள் திறை கொண்டுவந்து செலுத்தினராவென்று தேசவிசாரணை செய்கையில், அதிகமான் மாத்திரம் திறை செலுத்தவில்லை யென்று அமைச்சர் தெரிவித்தனரென்று சொல்லப்படுகின்றது. சோழவரசன் சேனையை யனுப்பி இவனை யடிப்படுத்தியதாகவும் அதே புராணம் கூறும். அதிகமான்கள் இப்போது தர்மபுரி என்று வழங்கும் தகடூரைத் தலைநகராகக்கொண்டு ஆண்டவர்கள். இங்கே கூறப்பட்டவனுடைய முன்னோனே சங்கநூல்களிற் காணப்படும் அதிகமான் நெடுமான் அஞ்சி யென்பவன். இந்தப் போரைப்பற்றிய சரித்திரமொன்றும் இப்பொழுது தெரியாவிடினும். காலஞ் செல்லச் செல்ல அது வெளிப்படுதல் கூடும்.

---

1. பொன்மலை புலிவென்றோங்கப் புதுமலை யிடித்துப்போற்றும் அந்நெறி வழியேபோக அயல்வழி யடைத்த சோழன். எறிபத்தர் 2.

2. —மேற்குயரக்

கொள்ளுங் குடகக்குவ டூடறுத் திழியற்
தள்ளுந் திரைப்பொன்னி தந்தோனும்.

திருநகரச் சிறப்பிலே சோழர்களது முன்னோனை மனு என்பான் தன்மகன் தேரேறிச் செல்லும்போது தேர்க்காலில் பசுங்கன்றொன்று அரைபட, அதன் தாய் ஆராய்ச்சிமணியை யடித்தது. அதனை யறிந்த அரசன் தன் மகனைத் தேர்க்காலில் இடும்படி கட்டளையிட, அதனைச் செய்யமாட்டாத நல்லமைச்சனொருவன் தான் அதற்குப் பலியானான். ஒன்றின்மே லொன்றாக வந்த இரு தீச்செயல்களுக்குப் பதிலாகத் தன் மகன்மேல் தேரை ஏற்றுவித்துத் தானும் தேர்ச்சக்கரத்தில் விழும்போது கடவுள் அத்துணைப்பேரையும் உயிர்ப்பித்தாரென்பது புராண வரலாறு. இதனைத் திருவாரூர்க் கல்வெட்டொன்றில்[1] படிக்கின்றோம். ஆண்டுள்ள கற்றேரும் காராம்பசுவும் சான்றாக இன்று முள்ளன.

திருக்குறிப்புத்தொண்ட நாயனார் புராணத்திலுள்ள 94-வது செய்யுள் 'பொன் மயமானமழையேயன்றி நவமணிமழையும் காஞ்சிநகரில் பெய்தது'[2] என்று கூறும். இச்செய்தியைக் கவிச்சக்கரவர்த்தியான சயங்கொண்டாரும், கலிங்கத்துப்பரணியிற் கூறுவர்.[3] காஞ்சிப் புராணமும் இச்செய்தியை வலியுறுத்தும். திருக்குறிப்புத்தொண்டர் புராணம் 30-வது செய்யுளிலே மறத்தொழிலையுடைய அரசனொருவன் கோயில் முதலான அற நிலையங்களுக்கு விட்டிருந்த நிவந்தங்களை நீக்கி அவற்றின் வருமானங்களைப் பொக்கிஷசாலையிற் சேர்க்க உத்தரவிடுகையில், அவ்வுத்தரவில் ஒற்றியூர் நீங்கலென்று வரிபிளந்து ஒற்றியூர்க் கடவுளா லெழுதப்பட்டிருந்ததென்று ஒரு செய்தி

---

1. திருவாரூர் கல்வெட்டு S. I. I. V. No. 456

2. நற்கனக மழையன்றிக் காஞ்சியெல்லை நவமணி மாரியும் பொழியும் நாளும் நாளும்.

3. பாரெலாமுடையன பயன்கொடைப் பங்கயக்கரமொட்டு வனம் பண்டொர்நாட்——காரெலாமெழுந்தேழரை நாழிகைகாஞ்சனம் பொழி காஞ்சி யதன்கணே. 301.

தியைச் சேக்கிழார் பெருமானார் சொல்லுகின்றார்[1]. இதனையே மறுபடியும் அவர் ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் 205-வது செய்யுளிலும் கூறுவர். இவ்வாறு செய்தவன் இரட்டவேந்த னொருவனென்று சரித்திரத்தா லறியக் கிடக்கின்றது. இச்செய்தி திருஒற்றியூர்க் கல்வெட்டொன்றிலும்[2] காணப்படுகின்றது. திருநாவுக்கரசுநாயனார் திருத்தமக்கையரான திலகவதியம்மையை ஒத்த குலத்தினரான கலிப்பகையா ரென்பார்க்குத் திருமணம் முடிப்பதாகத் தீர்க்கப்பட்டிருந்தது. மணச்சடங்கு நடப்பதன்முன் வடபுலத்தரசர் இந்நாட்டின்மேற் படையெடுத்து வந்தனர். கலிப்பகையார் அரசன் சேனாதிபதியருள் ஒருவராகையால் அவர் போருக்குப் போகவேண்டிய தவசியமாயிற்று. போரிலே சென்ற அவர் அமரிட்டு நின்று உயிர்துறந்தா ரென்பர் சேக்கிழாரடிகள். இதனைக் கேட்ட திலகவதியாரும் இளவலான மருணீக்கியார் வேண்டுகோட்கிணங்கிக் கைம்மைநோன்பு நோற்றாரென்பர் ஆசிரியர்[3]. மருணீக்கியாரான அப்பரது காலம் மகேந்திர வர்மனது காலமென்பதாலே இந்த மகேந்திரவர்மனுக்கும் மேலைச்சளுக்க வேந்தர்களுக்கும் சண்டை யுண்டாயிற்றென்பதும், முதற்சண்டையின் துவக்கத்தில் மகேந்திர

---

1. மருட்கொடுந் தொழின் மன்னவனிறக்கியவரியைச்
நெருக்கிமுன் றிருவொற்றியூர் நீங்கலென்றெழுதுமொருத்தர்.

2. பிரகாரம் மேல்புறம் மதில்:—ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனசக்கரவர்த்திகள் ஸ்ரீ ராஜராஜ தேவர்க்கு யாண்டு 7-வது; வீரநரசிங்க தேவனை யாதவராயன் ஜயங்கொண்ட சோழமண்டலத்து புழற் கோட்டமான வீரசோழவளநாட்டு உடையார் திரு ஒற்றியூருடைய நாயனார் கோயில் கொத்தர் கண்டு திரு ஒற்றியூர் தேவமண்டலம் முற்காலத்திலே யிறங்கலென்ன, உடையார் திரு ஒற்றியூருடைய நாயனார் நீங்கலென்று திருவெழுத்திட்டருளின யிவையிற்றில்...

3. திருநாவுக்கரசுநாயனார்புராணம் 23, 24, 31, 32.

வர்மன் எதிர்நிற்கமுடியாது போயினன் என்பதும் கல்வெட்டுக்களாலறியக்கிடக்கின்றன.[1] திருநாவுக்கரசர் காலத்திலிருந்த பல்லவ அரசன் சைனர்கள் பேச்சைக் கேட்டுக்கொண்டு, அவருக்குப் பல தீங்குகளை யிழைத்தானென்றும், பின்னர் அவ்வரசன் தனக்குண்டான பழவினைகள் நீங்கவும் துன்பங்கள் தொலையவும் திருவிரட்டானமான திருவதிகையை யடைந்து நாவுக்கரசினை வணங்கி, சைவசமயத்திற் புகுந்து சமணப் பாழிகளை யிடித்து அக்கற்களைக் கொண்டு திருவதிகையிலே குணதரவீச்சரமெனத் தன்பெயரா லொரு ஆலயமெடுத்தானென்றும் பெரியபுராணம் கூறும்.[2] இவைகளெல்லாம் சரித்திரத்திற் காணப்படும் செய்திகள். இவனே முதன்முதல் செங்கற்கோயில்களை நீக்கி மலைப்பாறையில் குகைக் கோயில்கள் குடைய ஆரம்பித்தவனென்பர். இவன்

---

1. வடபுலத்திலே சளுக்க வேந்தர்களுள் மிக்க பலசாலியான இரண்டாம் புலிகேசியின் அய்கொளே கல்வெட்டில் பின்வருமாறு காணப்படுகின்றது—புலிகேசியின் பலத்தை யெதிர்த்த பல்லவாதிபதியின் பெருமை புளகேசியின் சேனை செல்லும் தூசிகளால் மறைக்கப்பட்டுக் காஞ்சிபுரத்தின் மதிலுக்குள் மறைந்தது (29) சோழர்களைச் செயிக்கச் சென்றபோது காவிரி குறுக்கிட இவனுடைய யானைப்படையின் மதநீர்காவிரியின் ஆற்றுநீரைக் கடலில் விழாதபடி தடுத்துவிட்டது. ஆண்டு சோழ கேரள பாண்டியர்கட்கு க்ஷேமமுண்டாகும்படி பல்லவப் பனிக்குச் சூரியனை இரண்டாம் புலிகேசி வேண்டியன செய்தான். (30-31) ஆயினும் புலிகேசியை மகேந்திர வர்மன் புல்லலூரென்றவிடத்தில் தோற்கடித்துத் தனதூர் செல்லச் செய்தானென்று காசாகுடிச் செப்பேடு கூறுகின்றது.

2. பெரியபு. நாவு. 145, 146; இந்த மகேந்திர வர்மனுக்குக் குணபரன் மத்தவிலாசன் புருஷோத்தமன் சத்துருமல்லன் சத்துருசந்தன் எனப் பல பட்டங்களுண்டு.

சைனசமயம் விட்டுச் சைவ சமயத்தை யடைந்ததையும் இவனது திரிசிராப்பள்ளிக் கல்வெட்டு கூறுகின்றது.[1] இவன் கி. பி 600-630 வரை யாண்ட பல்லவ அரசன்.

மேற்கூறிய மகேந்திரவர்மனுக்குப்பின் அவன் மகன் நரசிங்கவர்மன் பல்லவ அரசனானான். இவனைக் கழற்சிங்கன் என்பர் சேக்கிழாரடிகள். கழற்சிங்க நாயனார் புராணத்திலே 'பல்லவ வமிசத்திலே வந்த கழற்சிங்கர்தாமும் அமரிற்சென்று கூடலர் முனைகள் சாய வடபுலங் கவர்ந்து கொண்டு நாட்டற நெறியில்வைக நன்னெறி வளர்த்துவந்தா ரென்று கூறினார் ஆசிரியர். இவனுக்குச் சிம்மவிஷ்ணு, நரசிங்கவர்மன், மகாமல்லன், ஸ்ரீநிதி, ஸ்ரீப்ரன், ரணஜயன் என்ற பல பட்டங்களுண்டென்றும், இவனது காலம் உத்தேசம் கி.பி. 630 முதல் 660 வரையிலென்றும் சரித்திரக்காரர் கூறுவர். இவன் காலத்திலேதான் செருத்தொண்டரான சிறுத்தொண்டர், 'மன்னவர்க்குத் தண்டுபோய் வடபுலத்து வாதாவித் தொன்னகரம் துகளாக்கி' யானைப் படையை வெட்டி, 'பன்மணியும் நிதிக்குவையும் பகட்டினமும் பரித்தொகையும் இன்ன எண்ணில கவர்ந்து'[2] அரசன் முன் வைத்தனரென்றார். இச்செய்யுளே திருஞானசம்பந்தர் காலத்தை ஆணித்தரமாக நாட்ட முதன்

1. 'குணபர நாமாநி ராஜன்யநேக லிங்கேன லிங்கிநி ஞானம் ப்ரததாஞ்சிராய லோகே விபட்ச வ்ருத்தேஷ் பராப்ருத்தம்' என்பது சுலோகம். இதன் பொருளை திரு. பி. தி. சீநிவாசய்யங்கார் குறித்துள்ளபடி குறிக்கின்றேன். குணபர அரசன் லிங்கத்தைப் பூசை செய்வோனாதலால் இலிங்கபூசைக்கு எதிர் முறையிலுள்ள விபரீத பக்ஷத்திலிருந்து திரும்பிவந்த இவனது ஞானம் (இந்தக் கோயிலில் அவன் ஸ்தாபித்துப் பூசை செய்த) லிங்கத்தால் உலகமெல்லாம் பரவட்டும். அதாவது சைனமதம் புறப்புறச் சமய மாகையால் இவன் அதனை விபரீத பட்சமென்றானென்பர்.

2. சிறுத் தொண்டர் புராணம் 6.

முதலில் உதவியாக விருந்தது. இவனே இரண்டாம் புலிகேசியைத் தோற்கடித்து அவன் நகரத்தையழித்தவன் வாதாபியில் இவனது கல்வெட்டுக்கள் அகப்படுகின்றன.[1] இவனுடைய பட்டமகிஷியே திருவாரூரில் செருத்துணை நாயனாரால் மூக்கறுபட்டவள்[2]. பெரியபுராணம் தொண்டர் சரிதங்களை விரிக்க வந்ததாகையால் அது அரசரது சரிதங்களையும் வீரச் செயல்களையும் அதிகமாகக் கூறவில்லை.

'பூசலார் ஏழ்மைத்தன்மையாலே கற்கோயிலெடுக்க முடியாமற்போக மனத்திலே அன்பு என்னுங் கற்கள்கொண்டு ஆலயமெடுத்து ஒரு குறிப்பிட்ட நன்முகூர்த்தத்தில் கடவுளைத் தாபிக்க நினைத்திருந்தார்; அக்காலத்திலே அரசனையிருந்த காடவர்கோமான் கச்சியிலே கற்றளியொன்றெடுத்துப் பூசலார் நினைத்திருந்த நாளிலேயே, அதே முகூர்த்தத்தில் மாலு நான்முகனு மறியாதாரை அக்கோயிலில் தாபிக்க ஓலைபோக்கி யிருந்தான்; அதற்கு முதனாளிரவில் ஏடலர் கொன்றைவேய்ந்தார் அரசன் கனவிற்றோன்றி நாளைத் தாம் நின்றவூர் பூசலா ராலயத்துப் புகுதப்போவதால் மற்றொருநாளை நிச்சயிக்கவேண்டும் என்று சொன்னதாகப் பூசலார் நாயனார் புராணம் கூறும். இக்கச்சிக்கற்றளி யென்பது காஞ்சிபுரத்திலுள்ள கைலாசநாதர் கோயிலென்பர். ஐராவதேசுரமென்றுங் கூறுவர். இது காகேசுரர் கோயிலுக்குப்போகும் வழியிலுள்ளது என்பர். இக் கைலாசநாத ராலயம் எடுத்தவன் கழற்சிங்கன் கொட்பேரன் இராஜசிங்கன் என்னும் பேருடைய இரண்டாம் நரசிம்மவர்ம னென்பர். இவனது தகப்பன் பரமேசுரவர்மனாவான். இக்கோவில் கல்வெட்டொன்று, 'இந்த (பல்லவ) வமிசத்திலே புராரியான பரமேசுரன் குகனைப்

1. வேலூர்ப்பாளையம் செப்பேடு **S. I. I. ii, 511.** இண்டியன் ஆண்டிகுவேரி ix.

2. செருத்துணை 5. கழற்சிங்கர் 5—7.

பெற்றதுபோல, ரண ரஸிக (சளுக்க விக்கிரமாதித்த)னை வென்று அவன்பட்டணத்தை யழித்த உக்ர தண்டனிட மிருந்து பல்லவர் தலைவனுன அத்யந்தகாமன் தோன்றி னன். பகுநயன்; கெட்ட மதங்களைப் போக்கிச் சைவசித் தாந்த மார்க்கத்தைப்பரப் பினவன். கிரேதா யுகத்தில் கண் வர்போன்ற இருடிகளை யடுத்த துஷ்யந்தன் முதலானோர் அசரீரி வாக்குகளைக் கேட்டது அதிசயமல்ல; ஆனல் இந்த நல்லோர் விலகியிருக்கும் கலியிலே ஸ்ரீபரன் அசரீரி கேட்டது மிக்க ஆச்சரியத்தை விளைவிக்கக்கூடியது" என்று கூறுகின்றது. இந்தச் செய்தியைக் கொண்டும் ஆலயமெடுத்ததைக் கொண்டும் இவன்[1] தான் நின்றவூர்ப் பூசலார் காலத்தவன் என்பர்.[2] இந்த ஸ்ரீபரன் என்ற பெயர் முதலாம் நரசிம்மவர்மனுக்கு மிருப்பதனுலும், அவன் திருவாரூர்க் கோயிலில் தன் மனைவி கையை வாங் கியபோது தேவர் மலர்மழை பொழிந்தனரென்று காணப் படுவதாலும் ஐயமுண்டு. எனினும் ஈண்டுக் கூறிய ஸ்ரீபரனின் தகப்பன் உக்ரதண்டனென்றும் சளுக்கிய விக்கிரமாதித்தனைத் தோற்கடித்தவனென்று கூறுவ தாலே இரண்டாம் நரசிம்மவர்மனென்றே கொள்ளலாம். இவன் கி.பி. 690 முதல் 710 வரை யரசாண்டானென்பர்.

'பல்லவர்க்குத் திறைகொடா மன்னவரை மறுக்கஞ் செய்யும் புலியூர்ச் சிற்றம்பலத்தே' என்ற தேவாரப் பதி கத்தாலும், உலகெலாங் காக்கின்ற பெருமான் கழற்சிங் கன், என்று சுந்தரர் ஒரு பல்லவனைக் குறிப்பிடுகின்ரு ரென்பதாலும், அவன் இரண்டாம் நந்திவர்மனென்றும் கூறுகின்றனர். இச்செய்தியை முதன் முதற் சொல்லிய வர் தஞ்சை சீநிவாச பிள்ளையாவர்.[3] இந்தச் செய்தி உறுதிபெறுமாயின் இவனுடைய காலம் கி. பி. 717 முதல்

1. S. I. I. I. p 12.
2. பி. தி. ஸ்ரீநிவாசய்யங்கார். பல்லவ சரித்திரம் 79-80.
3. தமிழ் வரலாறு.

779 வரையிலாகும். ஆகவே நமது ஆசிரியர் சோழ பல்லவ அரசர்களது சரித்திரங்களைத் தானறிந்தவரை கூறியுள்ளாரென்பதும், மந்திரத் தலைமைக் கேற்பச் சரித்திர அறிவுடையாரென்பதும் விளங்கும்.

நமது ஆசிரியர் தாம் எடுத்துக்கொண்ட விஷயத்தைச் சொல்வதில் வெகு சமர்த்தர், நாட்டிலுள்ளாரது நடையுடை பாவனைகளை நன்கு அறிந்தவரென்பதோடு இடனறிந்து சொல்வதிலும் வல்லவர். இதற்கொரு எடுத்துக்காட்டாகக் கண்ணப்ப நாயனார் புராணத்தை யெடுத்துக் கொள்வோம். கண்ணப்பர் வேடர்மரபினரென்பது யாவருமறிந்ததே. அவ்வேடர் மரபினரது வாழ்க்கையை எடுத்துச் சொல்லியிருக்குந் தன்மை யாவராலும் வியக்கற்பாலதொன்றாகும். வேட்டுவர் வாழ்வது குறிஞ்சி நிலமாகையால் அந்நிலத்தில் ஓரூரான உடுப்பூரிலுள்ள குன்றவர் வாழ்க்கையை விவரிக்கின்றார். வீடுகளின் மூன்றிலே நேரே நிமிர்ந்த காதுகளையுடைய நாய்கள் படுத்திருக்கும்; வலைகள் ஒரு பக்கத்திலே தொங்கும். வேடர் வேட்டையாடிக் கொன்று கொண்டு வந்த பன்றியினிறைச்சி, புலி, கரடி, மான், கடமைத்தோல் முதலியவற்றோடு ஐவனமென்னுங் குளநெல்லும் மற்றொரு பக்கம் காயும், வேட்டுவச் சிறுவர் புலிக்குருளையோடும் யானைக்கன்றினோடும் விளையாட, வேட்டுவச் சிறுமிகள் மான் பிணையோடு விளையாடுவர். வேட்டுவரோ கூட்டங்கூட்டமாகச் சென்று கொல், எறி, குத்து என்று ஆர்ப்பரித்துச் சத்தமிட்டு வேட்டையாடித் திரிவர். அங்கு அவர்கள் துடிப்பறையைக் கொட்டி, கொம்பு, ஆகுளி முதலியவற்றை யூதிக் கல்லென்ற ஒலியை யெழுப்புவர். இவ்வேடருடைய மற்றொரு தொழில் ஆறலைத் துண்ணலாகும். அதனை வழிப்பறித்தலென்பர். இதனோடு அவர்களுக்கு ஆனிரை கவர்தலுமுண்டு. இவர்கள் உடை தோலாலானது. உணவு தேனும்

ஆசிரியரின் உலக அறிவு

ஊன்புழுக்கலுமாகும். ஐவனமென்னும் குள்நெல்லான சோறு, பாற்சோறு, தினைச்சொன்றி, மூங்கிலரிசியாலான அமுது, கிழங்கு முதலியன விழாநாட் சோறுகும். அணிகளுள் கழுத்தணி புலிப்பல்லோடு மனவு இடையிடை கோத்த கோவை, சோழியும் மணியுங் கரடி மூட்களும் கலந்து கோத்த கோவை, சன்னவீரம் முதலியனவாம். தந்தி மணித்திரள் மாலையாகும். சங்குச்சுருள் பெண்கள் காதணி, புலிநகத்தாற் கட்டி, தலைமயிர் கட்டுதற்கு மயிற்பீலியோடு சேர்ந்த கயிறு, நெற்றியிற் கட்டுவதற்கு மயிற்பீலிக்குருந்து சேர்ந்த கயிறு இவை தலையணி. கைச்செறி, தோள்வலையம், கங்கணம் முதலியன கையணி. பச்சையணியும் பொன்மணியுங் கூடிய சதங்கை, அரதனங்களைச் சேர்த்திழைத்த பல்வகை மணிகள் கோத்த அரைஞாண், வார் முதலியன இடுப்பணி. யானை மருப்பாலான தண்டை குதம்பை முதலியன காலணி. காலிற் தோலாலான செருப்பிடுதலுண்டு. தெய்வம் குறிஞ்சிநிலக் கடவுளான குமரவேள். அத்தெய்வத்தை வேண்டுதல் பராய்க்கடனென்பர். கோழிச்சேவலும், மயிற்குலங்களும் வாங்கிக் கோயிலுக்கு விடுதல், மணிகள் கட்டுதல், மாலை சாத்துதல் முதலியன வேண்டுகோட்பணி. குரவைக்கூத்து ஆடுதலுமுண்டு. குரவைக் கூத்தாவது மகளிர் கடவுளை வேண்டிக் கைகோத்தாடுதல். இது பெருவிழாவிலே செய்யுப்படுவது. தெய்வங்கொள்பவளொரு முதுமகளிருப்பாள். அவளுக்குத் தேவராட்டி யென்று பெயர். அவள் காடு பலி யூட்டுவாள். காடு பலி யென்பது காட்டிலுள்ள தெய்வங்களுக்குப் பலியிடுதல். இதனை இக்காலத்தார் வனபூசை யென்பர். அது வனதேவதைகட்குத் தேன் தசை, தேறல், சரு, பொரி முதலியன வைத்துப்படைத்து அத்தேவதைகளை நன்மை செய்யும்படி வேண்டுதலாம். தேவராட்டி தலையிலே இளந்தளிர்க் கண்ணியும், காதிலே மான் கொம்பை அரிந்து செருகிய குழை (ஓலை) யும்

நெற்றியில் அரிதாரத் திலகமும், கழுத்தில் மயிற்குருந்தோடு கூடிய மனவுமணிவடமும், இடுப்பில் மரவுரியும், அதன்மேல் தழைப்பீலியும் அணிந்திருப்பாள், கையில் சேடையரிசி வைத்திருப்பாள். அவளை வேண்டியவரை அச்சேடையரிசியிட்டு வாழ்த்துவாள். குழந்தைகட்குத் திருட்டி கழித்தல், ஐயவிப்புகை யூட்டுதல் தாலாட்டித் தூங்கவைத்தல், காலையிலுணவு கொடுத்தல் முதலான பழக்க வழக்கங்களுண்டு. பெரியோரது இருக்கை புலித்தோல். அவர்களைச் சிறியார் வணங்குவதுண்டு.

இப்படிப்பட்ட கானவர் வாழ்க்கையே குறிஞ்சி நிலமாக்கள் வாழ்க்கையாகும். இனி இவர்களுக்குத் தலைவன் செல்வாக்கும் தலைமையின் சிறப்பும் கூறும் விதத்தைக் கவனிப்போம். பொத்தப்பிநாடு தொண்டை மண்டலத்திலே வேங்கடமலைப் பக்கத்திலேயுள்ளது. அந்நாட்டிலே உடுப்பூர் இருக்கின்றது. இந்நாட்டுக்குத் தலைவன் நாகனென்பவன். அவனுக்குப் பிள்ளைப்பேறில்லை. அதன் பொருட்டு வரையுரங் கிழித்த வடிவேலண்ணலான முருகவேளுக்குப் பராய்க்கடன் முதலியன செய்தான். செவ்வேள் அருளாலே ஒரு தவமகன் பிறந்தான். இச்செய்தியைக் கேட்ட எயினர் யானைப்பரு மருப்போடு அதனினின்றுண்டான முத்துக்களும், மலைகளிற் கிடக்கும் பல்வகை அரதனங்களும் காணிக்கையாகக் கொண்டுவந்து குவித்தனர். கடவுளை வணங்கினர்; தலைவனை வாழ்த்தினர். மகிழ்ச்சி கொண்டாடினர்.

இவ்வாறு பெருமையுறப் பிறந்த பிள்ளைக்கு வில்வித்தை பயிலுங்காலம் வந்தது. இதனை ஊராருக்குப் பறைமூலம் நாகன் அறிவித்தான். அதனைக்கேட்ட மறக்குலத் தலைவரெல்லாம் இரத்தினக் கற்கள், பொன், முத்து, புலித்தோல், யானைக் கொம்பு, மயிற்றோகை, தேன், நறவு, பல்வகையூன், பழம் காய் கிழங்கு முதலியன கொண்டு

வந்து தலைவனுக்குக் காணிக்கை செலுத்தி இடமின்றி நிறைந்தனர். இவைகள் குறிசிலிடத்து அவனது குடிகள் கொண்டிருந்த அன்பை விளக்குகின்றன. நாட்டிலுள்ள முதியரெல்லாம் வந்து கூடினர். நாகன் கடவுளுக்குப் பராய்க்கடன் செய்ய உத்தரவிட்டான். தேவராட்டியைக் கொண்டு காடுபலி யூட்டினுன். பின்னர் வில்விழா வெடுக்கக் கட்டளையிட்டான் வேட்டுவர் கோமான். காவலர் படைக் கலங்களைக் கொண்டு நிற்க, மங்கல தூரியம் முழங்க, திண்ணன் பிடிக்கப்போகும் சிலைக்குக் காப்புக் கட்டினர் முதியர். புலிநரம்பாற் செய்த காப்பைப் பெரியோர் திண்ணனுக்கு அணிவித்தனர். தொண்டகப்பறை கொம்பு, துடி, குழல் முதலிய வாத்தியங்கள் முழங்க வில்லோடு குறிச்சியை வலம் வந்தனர். இவ்வாறு ஏழுநாள் விழாநடந்தது. ஏழாநாள் முன்னாட்களைவிட இரட்டி செய்த பின்னர் உச்சியம் போதில் எங்கும் மங்கல வாழ்த்தெடுக்கவும், பல்லியங்களார்ப்பவும், வில்வித்தையில் தேறிய முதியோர்களைக் கொண்டு திண்ணனை வில் பிடிப்பித்தார்கள். அது முதல் அவன் படைக்கலத் தொழில் பயின்று வந்தான்.

கானவர் வாழ்க்கையைக் கூறுமிடத்து, ஆசிரியர், நாகரிக முடையவர் எவ்விதமான செய்கைகளைக் குற்றமெனக் காண்பரோ அவற்றைக் குணமாகக் கொண்டு ஒழுகுந் தன்மைய ரென்றும், பிறருக்குச் செய்யுங் கொடுமையே முதற்றொழிலாக வுடையரென்றுங் கூறுவர். இஃதே போல் மற்றைய நிலங்களையும், நிலமக்களையும் வர்ணிப்பர். இயற்கை வருணனை மலிந்து கிடக்குமே யொழிய வேறு காண்பதரிது.

ஆசிரியர் சேக்கிழார் வேண்டிய இடங்கட்குத் தகுதியான உவமைகளை யமைப்பதில் கைபோயவர். மலையில் பெய்த மழைநீர் ஆற்றின் வழியே யோடிவருகின்றது. இது வயல்களிற் செல்லும்போது மடைகளையுடைத்துச் செல்

லுமென்று சொல்ல வந்தவர், "பிள்ளையானது பெற்றதாயின் தனங்களைத் தனது மெல்லிய விரலாற் தடவப்பால் சுரத்தல்' போல மள்ளர் மடைகளிலுண்டான வெடிப்புக்களை மண்ணுற்றடவ நீர் பெருகுகின்றது என்றார். இளையான்குடிமாறர் இரவில்வந்த அந்தணர்க்கு அமுது படைக்கக் கறிக்குச் சென்றவர் குழி நிரம்பாத புன்செய்க் குறும்பயிர் கொணர்ந்தாரென்ற மட்டோடு நில்லாது வேரோடு களைந்து கொணர்ந்தாரென்பது தோன்ற ‘மக்களைத் துன்புறுத்தும் மாயாமலத்தைப் பிடுங்குவார்போல' என்று தகுதியாக ஒருவமைய் காட்டினார். ஒளியுண்டானபோது இருள் தானே நீங்குமென்று சொல்ல வந்தவர் இரவை ஒரு கரிய திரைச் சீலையாகவும், திரைச்சீலை ஒன்றினைச் சிறிது பொழுது மறைத்தற் பொருட்டு விடுவதுபோல இரவும் சிறிது நேரமே இருந்தது எனவும், திரைச்சீலை நீங்கியதும் கூத்தன் வந்து கைகாட்டுதல்போல் ஞாயிறும் தோன்றினனெனவும் கூறுகின்றார். கூன்பாண்டியனுக்கு வெப்பு நோய் அவன் உடலில் ஒரு பகுதியில் அடங்கியும் மற்றொரு பகுதியில் இரண்டுஞ் சேர்ந்து வீசிக்கொண்டிருந்தது கொடியநரக மொருபக்கமும், பேரின்ப மொரு பக்கமுஞ் சேர்ந்து இருந்ததை யொக்கு மென்றார். இது போன்ற உதாரணங்கள் பல.

**உவமைகள்**

அக்காலத்திலே வழங்கிய சைவ சாத்திரக் கருத்துக்களைச் சமயம் வாய்த்தவிடமெல்லாம் நூலில் நுழைத்து மக்களுக்கு அறிவுறுத்துவதில் இவர் மிக்க சமர்த்தர். வீரச்சுவையைக் கூறுவதிலும் மற்றவர்க்கு இவர் பின்வாங்கியவரல்லர். பெரியபுராணத்தை யூன்றிப் படிப்போமாயின் எல்லா வகைச் சுவைகளும் நிரம்பியிருக்கவும், பல இலக்கண விதிகளுக்கு இலக்கியங்கள் இருக்கவும் காண்போம். இக்காலத்து இறந்துபட்ட பல பழந்தமிழ்ச் சொற்களையுங்

**பொது**

காண்கிறோம். துளைப்பொன் (Punch-marked coin) திருநடைமாளிகைபோன்ற சொற்கள் பல. பாவின் போக்கோ படிப்பதற்கு எளிய நடையிலமைந்தது. விரிக்கிற் பெருகுமாகையால் இம்மட்டோடு நிறுத்துகின்றோம்.

---

## 8. சேக்கிழார் காலம்

கல்வியிலும், அமைச்சுத்திறனிலும், ஒழுக்கத்திலுஞ் சிறந்தவரான நமது ஆசிரியர்வாழ்ந்த காலமெதுவென ஆராய வேண்டுவது நமது கடமையாகும். அதற்குமுன் முதலில் நாடாட்சி எவரிடமிருந்த தென்பதைக் கூறுவாம். நம்பியாண்டார் நம்பியின் சரிதத்திலே சோழ அரசாட்சியைப் பற்றிக் கூறுங்கால் இராசராசன் என்பான் கி. பி. 985 முதல் 1012 வரையிலரசாண்டனனென்றும் இவனே தஞ்சையிலுள்ள இராசராசேச்சரத்தைக் கட்டினவனென்றும் கூறினேம். இவன் இயற்பெயர் அருண்மொழி வர்மனென்றும், உத்தம சோழனுக்கு இளவரசனாகப் பட்டஞ்சூட்டப்பட்டானென்று மெழுதியுள்ளோம். இவன் கி. பி. 978-ல் இளவரசானான். அப்பொழுது மும்முடிச் சோழனென்ற பட்டந்தாங்கித் தொண்டை மண்டலத்தை பாதுகாத்து வந்தான். கி.பி. 985-ல் மதுராந்தக உத்தம சோழன் இறக்கவே, இவன் சோழ வரசனானான். பட்டத்துக்கு வந்த பத்து ஆண்டுகள் வரையில் இவன் தனது அரசின் கீழிருந்த நாட்டினைச் செம்மைப்படுத்த வேண்டியது அவசியமாய் இருந்திருக்க வேண்டும். அப்பொழுதே பாண்டிநாடு, சோழநாடு, தொண்டைநாடு, கங்கநாடு இவைகள் சோழ ஆட்சிக்குக் கீழ்ப்பட்டிருந்தன. சேரநாடொன்றே தனித்திருந்தது. இவன் அதனைக் கி. பி. 994-ல் வசப்படுத்தினான். 998—999-ல் கங்கவாடி, நுளம்பப்பாடி, குடமலை நாடு, சிங்களம் முதலாய நாடுகளைக் கைப்பற்றினான். தொண்டைமண்டலத்தின் வட

வெல்லையிலிருந்து மேல்கடல் வரையில் ஒரு வரை கிழிப்போமாறல், அவ்வரைக்குத் தெற்கிலுள்ள தேசமுழுவதும் இவன் வசத்திலிருந்தது. பின்னர் இம்மன்னன் வேங்கி நாட்டின்மேல் படையெடுத்தான். கோதாவரி கிருஷ்ணை சில்லாக்கள் வேங்கிநாடு கொண்டது. அதனை யாண்டவர்களுக்குக் கீழைச்சளுக்கியர் என்று பெயர். இவர்கள் மேலைச்சளுக்கியருக் குட்பட்டவர்கள். அந் நாட்டை யக்காலத்தி லரசாண்டவ ரின்னாரென்று விளங்கவில்லை. நாடு அரசனில்லாததாகக் காணப்பட்டது. கீழைச்சளுக்கிய வழியிலிருந்த சக்கிவர்மனென்பவனை அரசனாக்கினன். இவைகளால் இரட்டநாட்டை யாண்ட மேலைச்சளுக்கியருக்கும் சோழர்கட்கும் போருண்டாயிற்று. கி.பி. 1005-ல் சளுக்க அரசனை சத்தியாசிரயனை இராஜராஜன் தோற்கடித்துத் திரும்பினன். அன்றுமுதல் தானிறக்கும் வரையில் இவன் நாட்டின் நன்மையை நாடினன். நாட்டையளந்து வரி விதித்தான்; கல்வியை வளர்த்தான்; துலாபார மேறினன். இவன் மனைவி இரணிய கர்ப்பம் புகுந்தாள். ஆரூரன் உதயதிவாகரன் மூவேந்த வேளானைக் கொண்டு நாட்டில் கோயிற் காரியங்கள் சரிவர நடக்கின்றனவா வெனப் பரிசோதிக்கச் செய்தான். தான் பிறந்த ஆவணிமாதச் சதயநாளை ஒரு விழாவாகக் கொண்டாடும்படிச் செய்தான். மற்றும் நாட்டின் நன்மைக்கு வேண்டுவன வெல்லாஞ் செய்தான். இவனுக்கு முற்கூறிய பெயர்களைத் தவிர இராஜாசிரயன், நித்தவினோதன், சிவபாதசேகரன் என்ற பட்டங்களுமுண்டு. இவனுக்கு ஒரு ஆண் மகனும், இரண்டு பெண்மக்களுமுண்டு. மூத்தமகள் குந்தவையை வேங்கிநாட்டரசனை விமலாதித்தனுக்கு மணஞ் செய்வித்தான்.

இவனுக்குப் பின் இவன் மகன் இராஜேந்திரன் என்ற பெயரோடு சிம்மாசன மேறினன். தன் தகப்பனிருக்கும் போதே அவனுக்கு உதவியாகப்போர்களிற்சென்றுபழகிக்

கொண்டிருந்தான். இவன் கி. பி. 1012-ல் அரசுகட்டி லேறினும் 1014-ல் பட்டாபிஷேகம் செய்துகொண்டான். இவன் இரட்ட தேசத்தை யொட்டியிருந்த இடந்துறை நாடு, வனவாசி, கொள்ளிப்பாக்கை முதலிய நாடுகளைக் கைப்பற்றினான். வேங்கிநாட்டின் வடக்கிலுள்ள ஒட்டர தேசம், தெக்கிண ராடம் முதலியதேசங்களையும் பிடித்துக் கொண்டு சளுக்கர்களை யெதிர்த்தான். அந்நாளிலரசாண்ட சளுக்க அரசன் ஜயசிங்கனுவான். இவர்களிருவரும் பராக்கிரமசாலிகளாகையால் அவரவர் கொண்ட நாடு அவரவர்கள் வசத்திலிருந்தன. இதற்குப்பிறகு கீழ்க்கடலிற் கப்பலைச்செலுத்தி ஜவா, பர்மா, கடாரம், முதலிய தேசங்களையும் ஜயித்தான். இவ்வாறு இவன் சக்கராதிபதியாய் அரசாண்டதோடு வங்காள அரசர்களைவென்று அங்கேயுள்ள கங்கை நதியிலிருந்து நாள்தோறும் ஒரு குடம் கங்கைநீர் கொண்டு வரும்படி செய்தான். இவனுக்குப் பண்டிதசோழன், உத்தமசோழன், கங்கைகொண்ட சோழன், முடிகொண்ட சோழன் எனப் பல பட்டங்களுண்டு. இவனுக்கு ஒரு பெண்ணும் ஐந்துபிள்ளைகளுமிருந்தன.

இராஜேந்திர தேவன் 1032 வரை யாண்டான். இவனுக்குப்பின் இவனது இரண்டாவது மகனை இராஜாதிராஜன் பட்டத்துக்கு வந்தான். அவன் தகப்பனுடைய காலத்தில் 1018-லியே இளவரசனுனன். சிம்மாசனமேறி ஆறே ஆண்டுகளரசாண்டான். இவன் தன் முன்னோர்கள் வென்ற நாட்டைப் பாதுகாக்கத் தன் தம்பிமாரையும், தமயன், சிற்றப்பன் இவர்களையும் ஏற்படுத்தினான். சளுக்கரைச் சயித்ததோடு கொள்ளிப்பாக்கையை யெரியூட்டினன். கொப்பத்தில் நடந்த போரில் உயிர்துறந்தான்,

இராஜாதிராஜன் கொப்பத்துப் போர்க்களத்தில் 1052-ல் உயிர்துறக்கவே இவனுடனிருந்த இவன் தம்பி இராஜேந்திரனென்னும் பெயரோடு முடிசூட்டிக்கொண்

டான். இவனும் கொப்பத்துப்போரில் வென்று கொல்லா புரத்தில் ஜயத்தம்பம் நாட்டினன். இவன் ஆகவமல்லனை வென்றதற்கு அறிகுறியாகப் பரணிகொண்டான். இவனும் போர்க்களத்திலேயே 1062-ல் உயிர்விட்டதால் இவனை ஆனைமேற் றுஞ்சியருளின பெருமாளென்பர். இவனுக்கு விசய ராஜேந்திரனென்ற பட்டமுண்டு.

இவனுக்குப் பின் இவன் தம்பி மும்முடி யென்பான் இராஜமஹேந்திரனென்ற பட்டத்தோடு அரசு கட்டி லேறினன். ஆனால் இவன் வெகுநாளாண்டதாகத் தெரிய வில்லை. இவனும் சளுக்கரோடு போரிட்டு இறந்திருக்க வேண்டுமென்று கூறவேண்டியிருக்கின்றது.

இதே யாண்டில் இவனது இளவல் வீரராஜேந்திரன் அரசனான். இவன் ஆகவமல்லனை முதலாம் சோமீசுவர னோடு 1064-ல் சண்டையிட்டு அவனைத் துரத்தியடித்து நாட்டையும் பாழாக்கினன். ஆகவமல்லன் மறுபடியும் போருக்கு 1067-ல் வந்தான். அந்தப் போரிலே வீர ராஜேந்திரன் இவனுடைய சேனைகளைச் சின்னபின்ன மாக்கியதோடு அவமானப்படுத்தியுமனுப்பினன். இந்த அவமானம் பொறுக்கமாட்டாத சோமீசுவரன் மறுபடியும் வீரராஜேந்திரனைப் போருக்கழைத்து ஆளோலை போக்கி னன். வீரராஜேந்திரன் போர்க்களத்திலேயே காத்திருந் தும் சோமீசுரன் வரவேயில்லை. பின்னர் சளுக்கவரசன் உயிர்விட்டானென்று விளங்கியது. இவனுக்குப்பின் இவன் இரண்டாவது மகன் விக்கிரமாதித்தனைச் சளுக்க அரசனாக்கித் தன் மகளையும் மணஞ்செய்வித்தான். இவன் கூடல்சங்கமத்து வெற்றியைக் குறித்துப் பரணியொன்று கொண்டான். 1069-ல் மறுபடியும் கடாரத்தை வென் றான். இவ்வாறு வென்று 1070-ல் இறந்தான். இவனுக்குப் பிறகு இவன் மகன் அதிராஜேந்திரன் சோழ சக்கரவர்த்தி யானன். இவனுடைய நாலாமாண்டுக் கல்வெட்டுக்கள்

காணப்படினும் இவன் குடிகளால் கொல்லப்பட்டதாகத் தெரிகின்றது.

இக்காலத்திலே கீழைச்சளுக்கியர் சோழரோடு சம்பந்த முடையவராக விருந்தனர். கங்கைகொண்டசோழன் மகளைச் சளுக்க இராஜராஜன் மணந்தான். அவன் மகன் இராஜேந்திரன். இவன் சோழ அரசனான விசய இராஜேந்திரன் மகள் மதுராந்தகியை மணந்திருந்தான். இவன்தான் இராஜேந்திரனான குலோத்துங்கன். இந்த உறவினாலே இவன் சோழராச்சியத்தைப் பிடித்துக் கொண்டானென்று எண்ணவேண்டியிருக்கின்றது. இவன் தன்னரசாட்சியை கி பி. 1070 முதல் சுட்டினாலும் முதல் நான்கு ஆண்டுகளிலும் இராஜேந்திர தேவனென்றே கூறிக்கொள்ளுகின்றான். இவன் எவ்வாறு சிங்காதன மடைந்தானென்பது நமது கருத்தன்று. இவன் கி.பி. 1118 வரையில் 48 யாண்டு குலோத்துங்கனென்ற பெயரோடு அரசாண்டான்.

இவர்கள் காலத்தில் நாட்டின் சமயநிலையைக் கவனிப்போம். இராஜராஜன் தஞ்சை இராசராசேச்சரம் கட்டியதுபோல, அவன் மகன் கங்கைகொண்டான் சிதம்பரத்துக்கு மேற்கே ஏறக்குறைய நாற்பது மைல் தூரத்திலுள்ள கங்கைகொண்ட சோழபுரத்தைக் கட்டினான். அதுவே பிற்காலத்தில் இராஜதானியாக விளங்கி வந்தது, இவன் எண்ணாயிரமென்ற ஊரில் பல பிள்ளைகள் வேதம், தர்க்கம், வைத்தியம் முதலிய கலைகள் பயில்வதற்குக் கல்விச்சாலைகள் ஏற்படுத்தி யிருந்ததோடு உணவுச்சாலைகளும் ஏற்படுத்தியிருந்தான். வைத்தியத்திற்கு ஆதாரமான மூலிகைகளைப் பயிரிட்டுக் காப்பாற்ற நிலம் விட்டிருந்தான். தன் தகப்பன் தஞ்சையைக் கட்டியதும், ஆடவல்லான் என்னுந் தியாகப் பெருமானை அங்குத் தாபித்ததும் நாடகமாக நடிக்க ஏற்பாடுகள் செய்தான். சைவ சமயத்தை வளர்த்ததைப்போல வைணவ சமயத்துக்

காதாரமான திருவாய்மொழியை யோதிப் பயில்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்தான். மதுராந்தகப் பேரேரி என ஒரு ஏரி வெட்டி நீர் நிறைத்து அதனைக்கொண்டு பயிர்த்தொழில் நடைபெறும்படி செய்தான். பல வித்துவான்களை யாதரித்தான். அவர்களுள் வைணவ ஆசாரியர்களிலொருவரான நாதமுனிகளும் ஒருவர். நாகப்பட்டணத்தில் பர்மாதேசத்து அரசனால் எடுக்கப்பட்ட சூடாமணி விகாரத்துக்கு ஆனைமங்கலம் என்னுமூரைக் கொடுத்தான். இதனைக் குறிப்பது தான் லீடன் செப்பேடு. இவனுக்குப் பின்வந்த இவன் மக்கள் இராஜாதிராஜன், இராஜேந்திரன், இராஜமஹேந்திரன் காலங்களெல்லாம் போரிலே சென்றுவிட்டன. ஆனால் வீரராஜேந்திரன் காலம் அப்படிச்செல்லவில்லை. இவன் கூடல் சங்கமத்துப் போரோடு பெரும்போரை ஒழித்தானென்றே சொல்லலாம். வேதம் முதலியன பயில்வதற்கு உணவுச்சாலைகளுடன் பல பாடசாலைகளை யேற்படுத்தினான். நாட்டில் பல விடங்களிலும் மருத்துவசாலைகளேற்படுத்தினான். இவன் கல்வியிலும் மேம்பட்டவனென்று தெரிகிறது. இவன் காலத்திலேதான் இவன் பேரால் வீரசோழியமென்னும் இலக்கண நூல் செய்யப்பட்டது.

சோழ அரசர்களும் சைவ சமயத்தவர்களாயிருந்து குடிகளும் சைவ சமயத்தில் வாழ்ந்து வந்ததினால் சைவ சமயம் அக்காலத்தில் உன்னத நிலையிலிருந்ததென்று சொல்லலாம். இக்காலத்திலே தான் பெரியபுராணம் பாடப்பட்டது. அது எந்த அரசனுடைய காலத்திற் பாடப்பட்டதென்க் குறிப்பாகச் சொல்லக்கூடிய ஆதாரங்கள் பெரிய புராணத்திலில்லை. சேக்கிழார் சுவாமிகள் பலவிடங்களிலும் சென்னி அநபாயன் குலோத்துங்கன் என்று கூறினாரேயொழிய, நம்பியாண்டார் நம்பியைப் போல அவன் இயற்பெயர் இன்னதென்று குறிக்கவில்லை. அதனாலே சேக்கிழாரது காலம் கீழைச்சளுக்கியாக

விருந்து சோழர்பெண்ணை மணந்து அதனால் உறவுடைய இராசேந்திரன் என்ற இயற்பெயரையுடைய முதற் குலோத்துங்க னென்று சிலரும், அவனது பேரனை இரண்டாங் குலோத்துங்கனென்று சிலருங் கூறுவர். முதற் குலோத்துங்கனென்று கூறுவோர் தமக்கு ஆதாரமாகக் கூறுவது அருப்பாக்கம் என்ற ஊரின் பழம்பெயரை நீக்கி அநபாய நல்லூர் என்ற பெயரிட்டானென்பதும், இவனுடைய திருமந்திரவோலை நாயகன் அநபாய மூவேந்த வேளான் என்ற பெயருடையான் என்பதுமேயாம். இரண்டாங்குலோத்துங்கன் காலமென்பார் தமக்கு ஆதாரமாகக் கூறுவது திருவாரூர்க் கல்வெட்டொன்றில் இவன் தன்னை, 'அனபாயனாகிய வண்டு நடராஜப் பெருமானது பாதமாகிய தாமரையில் மொய்க்கின்றது' என்று கூறுவதொன்றையேயாம். சேக்கிழார் வாழ்ந்த காலம் இவர்களிருவர் காலமுமல்ல வென்பதற்குப் பல ஆதாரங் ளிருக்கின்றன.

முதலில் இரண்டாங் குலோத்துங்கனை யெடுத்துக் கொள்வோம். இவன் காலத்திலே பெரிய புராணம் பாடப்பட்டிருந்தால் இச் செய்தி இவனுக்குப் பின்னுமிருந்த கவிச் சக்கரவர்த்தி ஒட்டக் கூத்தரால் உலாக்களிலாவது தக்கயாகப் பரணி, ஈட்டி யெழுபது முதலாய நூல்களிலாவது சொல்லப் பட்டிருக்கும். அல்லது அரசர் பெருமையையும் அவர்கள் மேல்பாடிய நூல்களையும் குறிக்கும் சங்கர சோழனுலாவிலாவது குறிக்கப்பட்டிருக்கும். அப்படி யொன்றுமில்லை. இவன் தகப்பன் விக்கிரம சோழன் காலத்தில் பெரியபுராணத்தில் வந்துள்ள மனுச் சோழன் கதை திருவாரூர்க் கோயிலிலே கல்லில் வெட்டப் பட்டிருக்கின்றது. அதனில் தேரில் அரைபட்ட அமைச்சனது வழியினன் அக்காலத்தும் அமைச்சுரிமை பூண்டதாகக் காணப்படுவதால், சேக்கிழார் இரண்டாங் குலோத்துங்கன் காலத்தவராயிருந்தால் இக்குறிப்பைக் குறிக்கா

மல் விட்டிருக்க மாட்டாரென்று உறுதி கூறலாம். இக்கதை அதற்குமுன் கன்ன பரம்பரையில் கேட்டு வெட்டப்பட்டிருக்கலாமெனச் சிலர் கருதுகின்றனர். அவ்வாருயின் எத்துணையோ கன்னபரம்பரைச் செய்திகள் வெளிவந்திருக்கலாமே. அவ்வாறு காணப்படாமையின் இக்கூற்று ஒப்புக் கொள்ள முடியாத தொன்ரும். இவனுக்கு உத்தம சோழனென்ருவது, பண்டிதசோழனென்ருவது பட்டமுமில்லை. ஆகவே இவனுயிருக்க வியலாதென்பது முடிந்ததொரு செய்தி.

முதற் குலோத்துங்கனை யெடுத்துக் கொள்வோம். சென்னி குலோத்துங்கன் அநயாயன் என்று காணப்படும் பெயர்களுள் அநபாயனென்ற பெயர் பலர்க்கும் வழங்குமொரு பொதுப் பெயர், குலோத்துங்க னென்பதும் ஒரு பொதுப்பெயர். பொன்னம்பலம் பொன்வேய்ந்த செய்தியும் பல அரசருஞ் செய்ததொரு செய்கை. இவைகளைக் கொண்டு நிச்சயிக்க முடியாதெனவும் மற்றும் பலவும் கண்டு முன்னரே 'குமரன்' என்ற மாதப் பத்திரிகையில் எழுதியிருக்கின்றேன்.[1] மேலும் இவன் மேல் பரணி பாடிய கவிக் சக்கரவர்த்தி சயங் கொண்டார் இப்பெரிய புராணம் பாடிய செய்தியைப் பற்றிக் கூறவேயில்லை. இஃதன்றி இவனுக்குமுன் 1062-முதல் 1070-வரை யரசாண்ட வீரராஜேந்திரன் காலத்தில் உத்தம சோழப்பல்லவன் மகன், அரசாங்க உத்தியோகத்தி லமைந்திருந்தானென்று காணும்போது[2] அவனுக்குப் பின் வந்த குலோத்

1. 'குமரன்' என்ற மாதசஞ்சிகை காரைக்குடியிலிருந்து வெளிவருவது.

2. ஸ்வஸ்தி:—வீரராஜேந்திர தேவர்க்கு யாண்டு நாலாவது முத்தூர் காவலன் வளவரில் உத்தமசோழப் பல்லவரையன் மகன் சிங்கனை அரங்காயனேன் முத்தூர் பெரிய நாச்சியார்க்கு சந்தியா தீ[ப] மொன்று.........1910-ம் ஆண்டு செ. 165. செந்தமிழ் 25-26 தொகுதியும் பார்க்க.

துங்கன் காலத்தில் சேக்கிழாரான உத்தமச் சோழப் பல்லவர் இருந்தாரென்பது பாட்டன் திருமணத்தில் பேரன் தாம்பூலம் வழங்கிய கதையேயன்றி வேறன்று. இஃதன்றியும், முதற் குலோத்துங்கனது, 'யாண்டு நாற்பத்தாறு, அதனிடை தில்லையம்பலத்து வடகீழ்பால் சொன்னவா றறிவார் கோயிலும், புராணநூல் விளக்கும் புரிசை மாளிகையும் வரிசையால் விளங்கப் பொறுப்பினால் விருப்புறச் செய்தான்' என்று ஒரு கல்வெட்டு[1] காணப்படுமாயின் அது கழறிற்றறிவாரான சேரமான் பெருமாள் நாயனாரையும் பெரியபுராணத்தையும் குறிக்கின்றதென்பதி லையமுமுண்டோ? இப் புராண நூல் விரிக்கும் புரிசைமாளிகை கட்டுவதற்குமுன் அந்நூல் இயற்றப்பட்டிருக்க வேண்டுமென்றும், அந்நூலை விரித்துரைப்பதற்குத் தகுதியான இடமின்மையாலே ஒரு மாளிகையும் அரசனாணைப்படி கட்டினானென்றுங் கொள்ளவேண்டியதைத் தவிர்த்து வேறுபொருள் கொள்ளமுடியுமோ? ஆதலினால் புராணநூல் இவன் காலத்துக்கு முன்னர் இயற்றப்பட்டிருக்க வேண்டும். ஆகவே இவைகளான் முதற்குலோத்துங்கனன்று நமது ஆசிரியரைப் புராணம் பாடச் சொன்னவனென்பது தேற்றம்.

இனி ஆசிரியர் தாம் எவ்வாறு தமது அரசனைக் குறிக்கின்றாரென்று கவனிப்போம்.

i வெண்குடை **யநபாயன்** செய்யகோ லபயன்திருமனத்தோங்கும்;...திருமலை 12.

ii பொதுக்கடிந் தினிதுகாக்குங் கொற்ற **வநபாயன்**; நாடு 35.

iii மன்னுசீ **ரநபாயன்** வழிமுதல்; நகரச் சிறப்பு 13.

iv சென்னி வெண்குடை **நீடநபாயன்**திருக்குலம்; இயற்பகை 1

v பொன்மலை.........மன்னிய **வநபாயன்** சீர்மரபின்; எறிபத் 2

---

1 நீடூர்க்கல்வெட்டு. சொன்னவாறறிவார் கோயில் இன்றுமுளது. அதனை மாணிக்கவாசகர் கோயில் என்கின்றனர்.

vi சென்னியபயன் குலோத்துங்கச் சோழன்றில்லைத் திருவெல்லை
பொன்னின் மயமாக்கிய வளவர் போரேறென்றும் புவிகாக்கு
மன்னர் பெருமா னநபாயன்; சண்டேசர் 8.

vii வையம்புரக்குந் தனிச்செங்கோல் வளவர்; நமிநந்தி 1.

viii மன்னுதிருத்தில்லைநகர் மணிவீதி யணிவிளக்குஞ்
சென்னிநீ டநபாயன்; புகழ்ச் சோழர் 8.

மேலே காட்டியவைகளிலெல்லாம் அநபாயன் என்ற பெயரே விடாது காணப்படுகின்றது. சென்னி, அபயன் குலோத்துங்கன் என்பன ஒன்றிரண்டிடங்களிலேயே உபயோகிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே ஆசிரியர் காலத்தரசன் அநபாயனென்ற பட்டமுடையானென்று தெரிகிறது. இஃதன்றியும் சேக்கிழாரடிகளுக்கு உத்தமச் சோழப் பல்லவன் என்ற பட்டம் கொடுத்ததாலே இவனுக்கு உத்தம சோழனென்று பெயர் இருக்கவேண்டும். சிந்தாமணியைப் படித்தும் பாராட்டிக் கொண்டிருந்தானென்றும் மற்றும் அதனுல் உண்டாகக் கூடியவற்றைக் யும் முன்னர்க் கூறியுள்ளோம். ஆகவே இவர் காலத்தரசன்,

i உத்தமசோழன் என்ற பெயருடையவனும் அநபாயன், குலோத்துங்கன் முதலான பொதுப்பட்டங்களை யுடையவனுக இருக்கவேண்டும்.

ii புத்த, சைன சமயத்தவரை யாதரித்திருக்க வேண்டும்;

iii கலாவிநோதனுக இருக்கவேண்டும்;

iv பொன்னம்பலம் பொன் வேய்ந்திருக்க வேண்டும்.

உத்தமனென்று பெயருடையார் சோழவமிசத்திலே இருவர் காணப்படுகின்றனர், அவருள் ஒருவன் கண்டராதித்தர் மகன்; மற்றொருவன் இராஜராஜன் மகனுன இராஜேந்திரன். முன்னவனுக்கு மதுராந்தகன், விக்கிரமன் என்ற இரண்டு பெயர்களே யுண்டு. பின்னவனுக்கோ அவ்விரண்டு பெயர்களோடு இராஜேந்த்ர சிங்கன், பண்டித சோழன், முடிகொண்ட சோழன் என்று பல பெயர்க

ளுண்டென்று கல்வெட்டுக்களா லறியக் கிடக்கின்றது. அநபாயன் என்ற பெயர் நூல்களிலே தான் காணப்படு கின்றது. தண்டியலங்கார நூற்கண்ணே கொடுக்கப் பட்ட உதாரணங்கள் பல பழமையான பாக்கள். அவற் றுள் எட்டுப்பாக்கள் அநபாயன் என்ற பெயரோடு காணப்படுகின்றன. ஒன்று 'தண்கவிகைக் கொங்கார லங்க லநபாயன் கொய்பொழில் சூழ் கங்காபுர மாளிகை' யென்று காணப்படுகின்றது. கங்காபுரம் என்பது கங்கைகொண்ட சோழபுரத்தைக் குறிக்கும். அதனோடு அநபாயனையுஞ் சேர்த்துப் பாடியிருப்பதால் கங்கைகொண்ட சோழனை இராஜேந்திரனை யென்றே யூகிக்கவேண்டி யிருக்கின்றது. ஆயினும் குலோத்துங்கனென்ற பெயர் அவனுக்குண்டா வெனப் பார்ப்போமாயின் இதுவரை யகப்பட்ட கல்வெட் டுக்களில் காணப்படவில்லை யெனினும் இப்பெயர் பலரா லும் கொள்ளப்பட்டிருக்கின்றது. பராந்தகனுக்கும் விக் கிரம சோழனுக்கும் இப்பெயருண்டென்று அறிகின்றோம், பின்னோருள் இக்கங்கை கொண்டானது பேரனே தனது இயற்பெயரான இராஜேந்திரன் என்ற பெயரை நீக்கி, குலோத்துங்கனென்ற பெயரைக் கொண்டுள்ளான். அவ் விராஜேந்திரனென்ற பெயரும் தாய் வகைப் பாட்டனை இந்த உத்தம சோழனுடைய பெயரேயாகும். அதுபோல் இவனுக்கும் குலோத்துங்கனென்ற பெயரிருந்திருக்கலாம். ஆதலினால் இவன் i, iii வினாக்களுக்கு ஒருவாறு விடையா கின்றான். கண்டராதித்தர் மகன் மதுராந்தக உத்தம சோழனே தன் தாயின் சொற்படி நடந்து, சிவபக்தனாக இருந்து இறந்தவன். இச்செய்தி இவன் காலத்திலிருந்தால் சொல்லப்பட்டிருக்கும். அவன் தாய் அவனுக்குப் பின் னும் இருந்திருக்கின்றாள். ஆதலின் இவனைப்பற்றி யாராய வேண்டுவதில்லை.

புத்த சைன மதங்களை யாதரித்தானா வென்று பார்ப் போமாயின் கங்கைகொண்ட சோழனே அவ்வாறு செய்

துள்ளானென்று தெரிகின்றது. லீடன் செப்பேட்டில்பின் வருமாறு காணப்படுகின்றது:—

ஸ்வஸ்திஸ்ரீ ; கோநேரின்மை கொண்டான் க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டுப் பட்டணக் கூற்றத்து நாட்டார்க்கும் பிரமதேயக் கிழவர்க்கும் தேவதாந, பள்ளிச்சந்த, கணிமுற்றூற்று வேட்டப்பேரூர்களி லார்க்கும், நகரங்களிலார்க்கும், தஞ்சாவூர் புறம்படி மாளிகை ராஜாசிரயனில் தெற்கில் மண்டபத்தில் நாம் இருக்கக் கிடாரத்தரையன் சூளாமணிபந்மன் க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டுப் பட்டணக்கூற்றத்து நாகப்பட்டணத்து எடுப்பிக்கின்ற மணிபந்ம விகாரத்துப் பள்ளிக்குவேண்டு நிவந்தத்துக்கு க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டுப் பட்டணக்கூற்றத்து ஆனைமங்கலம் பள்ளிச்சந்தம் இரங்கல் உள்பட அளந்தபடி நீக்கல் நீக்கி நிலன் தொண்ணூற்றேழே இரண்டு மாக்காணி அரைக்காணி முந்திரிகைக்கீழ் மூன்றுமாமுக்காணி முந்திரிகைக்கீழ் அரையே யிரண்டு மாவினால் இறைகட்டின காணிக்கடன் '

இதன்படி மேலே கூறிய புத்தவிகாரத்தின் பகுதிகள் இன்றும் நாகப்பட்டணத்தி லிருக்கின்றன, இப்பொழுது அந்த இடத்தில் கீழைத்தஞ்சாவூர் 'ஜில்லா கோர்ட்' இருக்கின்றது அதனைப் புதுவெள்ளிக் கோபுரமென்றும் வழங்குவர். இந்த நிலத்தானம் முதலில் இராஜராஜனால் வழங்கப்பட்டதாயினும் செப்பேடு வெட்டிக்கொடுத்தவன் இவனே யென்று அச்செப்பேட்டு முப்பத்தாறுவது சுலோகம் கூறுகின்றது. அதனைச் செய்யும்படி தூண்டிக் கொண்டிருந்தவன் 'கடகாதிபதியின் கட்டளைப்படி அபிகாலன் பிள்ளையாகிய துவவூரான் அனுக்கனான ருணவான்' என்றும் அச்செப்பேடு தெரிவிக்கின்றது. ஆகவே இவன் பௌத்த சைனர்களால் சூழப்பட்டவனாயும் அவர்கட்கு வேண்டியன செய்துவந்தவனாயும் இருந்தானென்று தெரிகின்றது.

இனி பொன்னம்பலம் பொன்வேய்ந்த செய்தியொன்றே தெரியவேண்டும். இதுபொழுது அகப்பட்

டுள்ள கல்வெட்டுக்களில் பொன்னம்பலம் பொன்வேய்ந்த தாகக் காணப்படாவிடினும் திருவாரூர் தியாகப் பெருமானது கோயிலைப் பொன்வேய்ந்துளான். இதனைப் பொன் வேய்ந்ததாலே தில்லையம்பலமும் பொன்வேய்ந்திருப்பானென்று உறுதி கூறலாம். அதனைப்பற்றிய சிலாலிகிதங்களும் காலக்கிரமத்தில் கிடைக்கக்கூடும். ஆகவே இக் கங்கைகொண்ட சோழனே பலவகையினும் ஒத்திருப்பதால், இவனே பெரியபுராணம் பாடச்சொன்னவனென்று ஊகிப்பது இழுக்காகாது.

இவனுடைய இராச்சிய வருடம் மூன்றுக்குள் பொய்கைநாடு கிழவனான தென்னவன் மூவேந்தவேளான் இவனுடைய கட்டளைப்படியும், தானாகவும் மெய்ப்பொருள் நாயனார், அப்பர், சம்பந்தர், சுந்தரர், சிறுத்தொண்டர், திருவெண்காட்டு நங்கை, சீராள தேவர் முதலாயினரது செப்புத்திருமேனிகளைத் தஞ்சை இராசராசேச்சரத்தில் எழுந்தருளுவித்தான், இவ்வாறு செய்தது இக்கங்கை கொண்ட சோழன் பெரிய புராணத்தைக் கேட்டபிறகேயிருக்கவேண்டுமென ஊகிக்க இடந்தருகின்றது.

இந்தக் கங்கைகொண்ட சோழனே கடாரம், ஜவா, சீயம் முதலான நாடுகளைத் தனக்குக் கீழ்ப்பட்டதாகச் செய்தானென்று கூறியுள்ளோம். அந்நாடுகளிலே முடி சூடுங்காலத்து தேவாரப் பதிகங்களில் 'தோடு, பித்தா, கூற்றாயின, மட்டிட்ட, முதலிய தேவாரப் பதிகங்கள் இன்றும் ஓதப்படுகின்றனவென்றும், இத்தேவாரப் பதிகங்கள் கிரந்த அட்சரத்தில் எழுதப்பட்டு ஆண்டுள்ள சரசுவதியம்பலத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ளன வென்றும் அறிவோமாளுல் பெரிய புராணம் பாடச்சொன்னவன் இராஜேந்திரனே என்பது விளங்காமற் போகாது.

குன்றத்தூரிலே திருநாகேசுரத்தில் கல்வெட்டுக்களில்லையாவென்ற கேள்வி பிறக்கலாம். அங்கே இந்த 1929-ம் ஆண்டிற்றான் கல்வெட்டுக்கள் இருக்கின்றன

வென்று கண்டுபிடிக்கப்பட்டு வாசிக்கப்படுகின்றன. அக்கோயில் இரண்டாம் இராஜராஜன், மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் பிரித்துப் பழுது பார்க்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது. கற்கள் நிலைமாறி வைக்கப்பட்டிருக்கின்றனவாயினும் இவர்களுடைய சாசனங்களிருக்கின்றன. நத்தத்திலிருக்கும் மூன்று கோயில்களிலும் குன்றின்மேலிருக்கும் கோயிலிலும் கல்வெட்டுகளிருக்கின்றன. அவைகளினின்றும் சேக்கிழார் மண்டபமென ஒரு மண்டபமிருந்தாகத் தெரிகிறது. கோயிலின் மதிலில் அமைச்சர், உடை, கத்தி, சமேதாடும் அணிந்த ஒரு ஆண் உருவமும், அருகிலொரு பெண்மணி உருவமும் செதுக்கப்பட்ட கல் ஒன்று காணப்படுகின்றது. இவ்வுருவங்கள் சேக்கிழாரடிகளும் அவரது தேவியாருமாக இருக்கலாமென ஊகிக்கப்படுகிறது, ஆயினும் இவைகளினின்றும் நிலைபெறும்படியான செய்திகளொன்றும் அறிவதற்கில்லை. எவ்வாறாயினும் சேக்கிழார் காலம் முதற்குலோத்துங்கன் காலமல்லவென்பதும் அதற்கு முற்பட்டதென்பதும் இவைகளால் ஏற்படும் செய்திகளாம்.

LIBRARY
சென்னை-1

Printed at the Rajan Electric Press, G. T., Madras.